www.tamilarangam.net


# களத்தில்

"விடுதலைக்காக உழைத்தல் என்பது ஒரு தேசியக்கடமை. தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்குமே அதில் பங்குண்டு"

திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடவை 13 (27.06.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p


# இராணுவ முகாம்களின் தொடர்ச்சியான வீழ்ச்சி

# கிழக்கு நிலை குறித்து சிறீலங்கா கவலை!

## புதிய போருபாய தேவைபற்றி பிரஸ்தாபிப்பு

**கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு வீழ்ச்சியடைந்து வருவது சிறீலங்கா அரசியல், இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் கடைப்பிடித்துவரும் போருபாயம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாடும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கி சுமார் இரண்டு மாதங்கள் முடிவுற்ற நிலையில், கிழக்கு மாகாணத்தில் நான்கு முகாம்களை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்துள்ளனர். அத்தோடு ரோந்து அணிகள் சிலவும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

அதிலும் குறிப்பாக, இரண்டு வாரங்களுக்கு முதல் பகல் வேளையில் இராணுமுகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளமை, கிழக்கில் புலிகள் வலுவாகக் காலூன்றியுள்ளதையே காட்டுகின்றது.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் இராணுவம் கடைப்பிடிக்கும் போருபாயம் குறித்து பலமான கேள்வி எழுந்துள்ளது. இராணுவம் பாரிய இழப்புக்களுடன் கடைப்பிடிக்கும் போருபாயம் சரியா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

இதேசமயம், கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை எவ்வாறு பாதுகாப்பது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தற்பொழுதுள்ள நிலையில் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைக் காப்பதானால் இராணுவம் தொடர்ந்தும் பலத்த இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும்; பல முகாம்களை இழக்கவும் வேண்டி வரலாம். அவ்வாறு இல்லாது கைப்பற்றிய இடங்களை கைவிடுவதானால் பெரிய முகாம்களுக்குள் முடங்க வேண்டிய நிலைவரும். இவ்வாறு உருவாகியுள்ள நெருக்கடியானது இராணுவ வட்டாரங்களில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் இன்னமும் இராணுவத் தளபதிகள் இரண்டும் கெட்டான் நிலையிலேயே உள்ளனர்.

## புலிகள் தாக்குதல்
# மட்டக்களப்பில் 16 இராணுவம் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுப்பகுதி முகாம் ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 16 சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தகவலை சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி, யூஎன்ஐ செய்திகள் தெரிவித்தன. அண்மையில் நிகழ்ந்த இத்தாக்குதலைத் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டம் கிரான் காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாகவும் சிறீலங்காப் பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிவித்தது.

மாலை ஆறு மணியளவில் தொடங்கிய இச்சண்டை தொடர்ந்து பல மணி நேரமாக இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பெண்டுகள்சேனையில் மின்னல் வேக அதிரடி
# அதிகாரி உட்பட 20 படையினர் பலி
## முகாம் அமைக்கும் முயற்சி முறியடிப்பு

மட்டக்களப்பு கிரான் பகுதியில் பெண்டுகள்சேனை என்னுமிடத்தில் புதிய இராணுவமுகாம் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்த படையினர் மீது, விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல்வேகத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட இருபதிற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சுமார் 20 நிமிடங்கள் நடைபெற்ற இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து தப்பியோடி விட்டனர்.

ஒரு போராளி வீரச்சாவடைந்த இத்தாக்குதலில் பலரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பெண்டுகள் சேனையில் இடம்பெற்ற தாக்குதலானது, பகல் வேளையிலேயே நடத்தப்பட்டதும் அப்பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிரான் பகுதி முகாம்களில் இருந்து வெளியேறி பெண்டுகள்சேனையில் முகாம் அமைத்துக் கொண்டிருந்தபோதே விடுதலைப் புலிகள் இம்மின்னல் வேகத் தாக்குதலை நடத்தினர். முகாம் அமைத்துக்கொண்டிருந்த இராணுவ அணியை ஊடறுத்தே இவ்வெற்றிகரத் தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இம்மின்னல் வேகத் தாக்குதலில் 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, பலர் காயமும் அடைந்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அப்பகுதியைவிட்டுத் தப்பியோடி விட்டனர்.

இம்மோதலின்போது பலரக ஆயுதங்கள், இராணுவ உபகரணங்களைப் புலிகள் கைப்பற்றினர். ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.இத்தாக்குதல் தொடர்பாக வெளிவந்த செய்தியில் மட்டக்களப்பில் காட்டுப்பகுதி முகாம் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் 16 இராணுவத்தினர் பலியானதாகவும் யூஎன்ஐ செய்திகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடா ரொறன்ரோவில்
# வரலாறு காணாத ஈழத் தமிழரின் ஊர்வலம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழத்திற்கு வெளியே தமிழீழ மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் ஊர்வலமாக இவ்வூர்வலம் கருதப்படுகிறது.

இவ்வூர்வலத்தில் 20,000 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்வூர்வலத்திற்காக ரொறொன்ரோ போக்குவரத்துச்சபை அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 10.30 மணிவரையும், மதியம் 1.00 மணி முதல் 4.00 மணி வரையும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்திருந்தது.

உலகின் மிக நீளமான வீதியான Yonge வீதியூடாகச் சென்ற

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# புத்தளத்தில் சுற்றிவளைப்பு
# 25 தமிழர்கள் கைது

புத்தளம் நகரைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய பொலிசாரால் 25 தமிழர்களும் மூன்று முசலிம்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அண்மையில் சகல தமிழர்களின் வீடுகளையும் பொலிசார் சோதனையிட்டனர். பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் இருந்து வந்த பெருமளவு பொலிசார் இந் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெளியிடங்களில் இருந்து வந்து புத்தளத்தில் தொழில் செய்வோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். கைதான மூன்று முசலிம்களும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பதற்காக அங்கு தங்கியிருந்தவர்கள் எனத் தெரியவருகிறது. இதேவேளை, இத்தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட தமிழர்களில் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திரியாய் காட்டில் உக்கிர சண்டை
## ■ 5 படையினர் பலி ■ 12 பேர் படுகாயம்
## ■ 12 விடுதலைப்புலிகள் வீரச்சாவு

திருகோணமலை மாவட்டம் திரியாய் காட்டுப் பிரதேசத்தில் யான்ஓயா பகுதியில் அண்மையில் சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் கடும் சண்டை மூண்டது. சுமார் 11 மணிநேரம் வரை தொடர்ந்து நடைபெற்ற மோதலில் ஐந்துக்கு மேற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்த நிலையில் இராணுவம் பின்வாங்கியது. இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 12 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

அண்மையில் நடைபெற்ற இன்னுமொரு மோதலில்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புல்லுருவிகளுடன் புது உறவு
## 'வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகமா?'

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் ஒன்று இருப்பது போன்ற மாயையைத் தோற்றுவிப்பதற் கான முயற்சிகளில் தமிழினப் புல்லுரு விகளுடன் கொழும்பில் பேச்சுவார்த்தை களை நடாத்தி வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் தனது இறைமை சிறிலங்கா முழுவதிலும் நிலவுகிறதென உலகிற்குக் காட்டுவதும், அனுதினமும் தமது படை களால் தமிழ் மக்களைக் கொன்று ஒழிக்கும் கொடுமைகளை மறைத்து தனது அரசாங்கம் தமிழ்ப் பிரதேச ங்களிலும் ஜனநாயக வழி கட்சியினை நெறிப்படுத்த விளைவதாகப் பிரச்சாரம் செய்வதும் சிறிலங்காவின் ஜனாதிபதியின் நரித்தன நோக்காக உள்ளது. வழமைபோல் கொழும்பில் முகாமிட்டுள்ள தமிழினத்தின் புல்லுருவிக் குழுக்கள் இந்த 'வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகசபை' எனும் சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் சதிக்குத் துணை போவதில் தமிழர்கள் எவரும் ஆச்சரியப் படமாட்டார்கள்.

## பிக்குகள் போர்வேண்டி அநுராதபுரத்தில் சத்தியாக்கிரகம்

சிறிலங்காவில் போர் வேண்டி, உயிர்க் கொலை பாவம் எனப் போதிக்கும் புத்த தர்மத்தின்

காவலர்களாகத் தம்மைக் கூறிக் கொள் ளும் பௌத்த பிக்குகள் சத்தியாக்கிரகம் இருந்துள்ளனர்.

இங்குருவத்த சமங்கல சிதுவிரயன் தலைமையில் புத்தபிக்குகள் யுத்தம் செய்வதென நடாத்திய சத்தியாக்கிரகம் உலகின் ஆன்மீகவாதிகளை குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க வைத்துள்ளது.

அத்துடன் அகிம்சையின் ஆயுதமெனப்ப டும் சத்தியாக்கிரகத்தை ஹிம்சையினை வலுப்படுத்தும் கருவியாகப் பிக்குகள் கையாண்டு உள்ளமை அடுத்த கேலிக் கூத்தாக உள்ளது.

## மக்கள் மேல் முற்றுகை

கிரான் உட்படப் பல மட்டக்களப்புக் கிராமங்களில் மக்கள் கிராமத்தைவிட்டு வெளிவரக்கூடாது என சிறிலங்காப் படைகள் தடுத்து சர்வதேச யுத்த விதிகளுக்கு மாறான வகையில் மக்கள் மேல் முற்றுகையிட்டு வருகின்றனர்.

அத்துடன் பொதுமக்களின் பாவனையில் ஈடுபட்டிருந்த பெருந்துகளை இராணுவம் பறித்துச் சென்று விட்டதினால் மக்கள் கடும் போக்குவரத்துக் கஷ்டங்களுக்கு உள்ளாகித் தவிக்கின்றனர்.

# தூதுவர்கள் நியமனம் பற்றி கருத்து

சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களைத் தனது பிரஜைகளாகக் கருதவில்லை என்பதை சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிநாட்டு தூதுவர் நியமனங்கள் உறுதியாக்கி இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இலங்கைத் தீவைப் பல்லின, பல மொழி கொண்ட நாடு என இன்னும் தவறாகக் கணக்குப் போடும் அரசியல் எழுத்தாளர் அனைவரும் தம்மைத் தாமே மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டிய நேரம் இது.

சிறிலங்காவில் இடம்பெறும் ஒவ்வொரு சிறு சம்பவமும் கூட தமிழர்களை

சிங்கள அரசாங்கம் தனது பிரஜைகளாகக் கருதாது அடக்குமுறை ஆட்சியை நடாத்தி வருகிறது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது.

எனவே இலங்கைத்தீவு இரு நாட்டி னங்களை இரு வெவ்வேறான எல்லை களில்கொண்டிருக்கும் நாடு என்பதை சர்வதேச அவதானிகள் ஏற்க வேண்டிய சூழ்நிலை தெளிவாகி வருகிறது.

## படுத்த பாயில் பிணமானார்

மட்டக்களப்பு வாகநேரியில் உறங்கிக் கொண்டிருந்த 16 வயதுடைய புலேந்திர ராசா எனும் இளைஞன் 'ஷெல்' தாக்கிய தில் படுக்கையிலேயே பிணமானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவின் கோரிக்கை
## இனஅழிப்பு செய்வதற்கு அருமையான சந்தர்ப்பம்
### ❑ சிங்கள பௌத்த அமைப்பு கூறுகிறது

'இந்தியாவின் நாடுகடத்தல் கோரிக்கை வடக்கு கிழக்கில் புலிகளை அழித்து ஒழிப்பதற்கு அருமையான சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இதனை சிறிலங்கா அரசாங்கம் ஏற்று அதற்கான பிரச்சா ரங்களைச் செய்து இந்தியாவின் உதவியைப் பெற்றுத் தீவிரவாதிகளை அழித்தொழிக்க வேண்டும்'.

இவ்வாறு சிங்கள பௌத்த அமைப்பின் தலைவர் எட்மன்ட் பனாகொட சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

'ஜே.ஆர் அரசாங்கத்தில் ராஜிவ்காந்தி இந்தியப் படைகளை சிறிலங்காவுக்கு அனுப்பி விடுதலைப்புலிகளை ஒழித்து க்கட்ட எடுத்த முயற்சிகளை சிறிலங்கா மக்கள் மறந்துவிடவில்லை' எனவும் அவர் கூறியுள்ளார்.

## குருநகர் கடற்றொழிலாளி கடற்படையால் படுகொலை

சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை என்ற யாழ்ப்பாணம் குருநகர் மீன் பிடித் தொழிலாளி படுகொலைக்கு உள்ளானார்.

வகை தொகையின்றி தமிழீழக் கடல்மேல் எறிகணை துப்பாக்கிச் சூடு என்பவற்றை வேகப்படுத்தியுள்ள சிறிலங்காவின் சந்திரிகா அம்மையாரின் அரசின் போக்கால் அனுதினமும் அப்பாவிப் பொதுமக்கள் தம் இன்னுயிர்களை இழக்கும் சம்பவங்கள் படுவேகமாக அதிகரித்து வருகிறது. மரியதாஸ் அந்தோனிப்பிள்ளையின் மகனும் தகப்பன் கொலை செய்யப் படுவதற்கு இருதினங்களுக்கு முன்னர் சிறிலங்கா கடற்படையின் மற்றொரு தாக்குதலால் காயமடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நாடகத்திற்குப் புது விளக்கம்
### - சிறீலங்கா அமைச்சர் பீரிசின் கண்டுபிடிப்பு

சிறிலங்கா அரசாங்கம் தான் அரசியல் தீர்வை முன்வைத்து இனப் பிரச்ச னைக்கு தீர்வு காண விரும்புவதாக வெளியுலகிற்கு ஆடிக் கொண்டிருக்கும் நாடகத்திற்குப் புது விளக்கம் ஒன்றை சிறில ங்காவின் அரசியல் விவகார அமைச்சரும் பிரதி நீதியமைச்சருமான பேராசிரியர் ஜினல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கள கட்சிகளுக்குள் இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்ட பின்னரே சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சனைக்கான தீர்வு களை வெளியிடும் எனவும் அதனை அரசியல் விவகாரத்திற்குப் பொறுப்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடமே வெளியிடும் எனவும் கூறியுள்ள பீரிஸ், புத்தசமயத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள விசேட இடத்தில் எதுவித மாற்றமும் கிடையாது என உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் தேசியகீதம், தேசியக்கொடி, தேசியதினம் தொடர்பான கருத்துக்களில் கூட எதுவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது என ஆணித்தரமாக எடுத்து ரைத்தார்.

சிறிலங்கா அரசாங்கம் எதுவித திட்டத்தையும் இனப் பிரச்சனைக்குத் தீர்வாக முன் வைக்கும் விதத்தில் சிறித-

லவு கூட செயற்படாது, பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையைப் பேணிக் கொண்டு இருக்கும் அதேவேளை சர்வதேச சமூகத்திற்குத் தான் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிப்பதாக ஆடும் நாட கமே இது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## கொடுவாமடுவில் கொடுமை

வயலிலே களைபிடுங்கி வயிற்றுப் பசி தீர்க்க வேலைசெய்துகொண்டிருந்த விவசாயிகளை துடிதுடிக்கச் சுட்டுக் கொன்ற கொடுமையான செயலை சிறிலங்கா இராணுவம் மட்டக்களப்பு கொடு வாமடுவில் நடாத்தியுள்ளது. இச்சம்ப வத்தில் ஐந்து தமிழ் விவசாயிகளும் தெருவில் ஐஸ்பழம் விற்றுக்கொண்டு நின்ற முஸ்லிம் வியாபாரி ஒருவரும் உயிரிழந்தனர். இந்தக் கண்மூடித்தனமான சிறிலங்கா இராணுவத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் இருவர் கடுங்காய ங்களுக்கு உள்ளானதுடன் அங்கு இருந்த இரு வீடுகள், ஒரு தேநீர்க்கடை, ஒரு சைக்கிள் திருத்தும் கடை ஆகியன சிறிலங்கா படைகளினால் எரித்துச் சாம்பலாக்க ப்பட்டன.

# இராணுவ அதிகாரிகளின் பொறுப்புக்களில் பெரும் மாற்றங்கள் செய்யத் தீர்மானம்
### ■ வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு புதிய பொறுப்பதிகாரியும் நியமனம்

இராணுவ அதிகாரிகளின் பொறுப்புக்களிற் பெரும் மாற்றங்களைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது, இம் மாற்றங்கள் குறித்த முடிவானது சனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற உயர்நிலை அதிகாரிகள் மாநாடொன்றில் எடுக்கப்ப ட்டுள்ளது. இதன் பிரகாரம் ஏழு இராணுவ அதிகாரிகளின் பதவி நிலைகள் உடனடி யாக மாற்றப்பட்டுள்ளன. இதன் அடிப்ப டையில் வடக்கு-கிழக்கு மாகாண ங்களுக்கான இராணுவப் பொறுப்பதிகாரியா-கப் பிரிகேடியர் ஜனக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அண்மைக்காலத தாக்குதல்களாற் சிறலங்கா இராணுவத்தி ற்கு ஏற்பட்டுள்ள இழப்பைத் தொடர்ந்து இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மட்டத்திற் பாரிய மாற்றங்கள் செய்யப்ப ட்டுள்ளன. விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களால் ஏற்பட்டு ள்ள புதிய நிலையை அடுத்து இவ்வாறு இராணுவத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுப் புனரமைப்பு மேற்கொள்ள ப்பட்டுள்ளதாக இராணுவவட்டாரங்கள் அண்மையிற் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா இராணுவத்தினைப் புனரமை ப்பது தொடர்பாகவும் அதற்கு ஏற்றவ கையில் அதிகாரிகளை மாற்றம் செய்வது தொடர்பாகவும் ஆராயும் மாநாடொன்று அண்மையிற் சனாதிபதி வாசஸ்தலமாகிய அலரிமாளிகையில் நடைபெற்றது.

சிறீலங்காச் சனாதிபதி சந்திரிகா தலை மையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் முப்படைகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இம்மாநாடு நீண்ட நேரம் நடைபெற்றதா-கத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாநா ட்டில் ஏழு பிரிகேடியர்களின் பொறுப்பு க்களை உடனடியாக மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி இடைநிலைப்படைப் பிரிவின் தலைமை அதிகாரி பிரிகேடியர் ஜனக பெரேரா வடக்கு-கிழக்கு மாகாணம் மற்றும் மணலாறு பகுதிகளுக்குப் பொறுப்பதிகார-ியாக நியமிக்கபட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இவர் இவ்வளவு காலமும் வகித்து வந்த இடைநிலைப்படைப்பிரிவின் தலைமை அதிகாரி பதவி பிரிகேடியர் சிறில் பீரிசிற்கு வழங்கப்பட்டுள்ளது. பிரிகேடியர் சிறில் பீரிஸ் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இது சிங்கள தனியாட்சி நாடு
## இங்கு எப்படி சமஸ்டியை அமைக்கமுடியும்?
### ❑ பூமிபுத்ர இயக்கத்தைச் சேர்ந்த சந்திரா விஜேதுங்கா

'மாலைதீவுடனோ, இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ நாம் சமஸ்டியை ஏற்படுத்தலாம். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணங்களுடன் நாம் சமஸ்டியை எப்படி அமைக்கமுடியும்! இயலாது! ஏனெனில் அவை சிறீலங்காவின் பாகங்கள்'

இவ்வாறு சட்ட மாணவர்களிடையே உரை நிகழ்த்திய சிங்கள மகா சம்மத பூமிபுத்ர இயக்கத்தைச் சேர்ந்த கரீச் சந்திரா விஜேதுங்கா கூறினார்.

'ருகுணு மாயா, பிகிற்றி என்பதே தொடக்கத்தில் இலங்கையின் மூன்று பிரிவுகள். கொத்தலாவலை-நேரு ஒப்பந்தத்தை மீறி இந்திய தமிழர்க்கு பிரசாவுரிமையை சிறீமா வழங்கியதாலே சில பகுதிகளில் பெரும்பான்மையை இழக்கின்றனர். மேலும் வடக்கில் இருந்து ஆறு வாக்குகளுடன் தான் பாராளுமன்ற உறுப்பினராக வந்துள்ளனர். இவர்கள் அரசியல் திட்டத்தை திருத்த அனுமதிக்கலாமா' எனவும் இவர் பேச-ியுள்ளார்.

www.tamilarangam.net





# உலகே உணர்வாய்

**கொ**ன்று அழிப்பதற்கே போர் செய்கிறோம், எனச் சிறீலங்கா அரச பகிரங்கமாகக் கூறுகிறது. இன அழிப்பு அனைத்துலகப் போர்க் குற்றச்செயல். போர்க் குற்றச்செயல்களுக்கே ஆக்கிரமிப்பு எனப் பெயரிடுகிறார், 'நீதி - அநீதியான போர்கள்' (Just and unjust wars) என்னும் நுலை எழுதிய மைக்கல் வல்ஸர் (Michael Walzer ). இவ்வகையிற் பார்க்கையிற் சிறீலங்கா அரச தானொரு ஆக்கிரமிப்பாளர் என்ற ரீதியிலேயே தமிழீழப் பிரதேசத்திற் செயற்பட்டு வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, பொதுசன ஐக்கிய முன்னணியும் இதனையே உறுதிப்படுத்தி நிற்கிறது. இதனாற்தான் தமிழீழ மக்கள் தம்முடைய எதிர்காலத்தைத் தாங்களே நிச்சயிக்கவேண்டிய (சுயநிர்ணய உரிமை) அடிப்படை மனித உரிமையைப்பயன்படுத்தித் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் நடத்திவரும் ஆயுத எதிர்ப்பு அல்லது ஆயுதப்போராட்டம், 1981ம் ஆண்டின், 'மனிதனதும் மக்களதும் உரிமைகளுக்கான ஆபிரிக்கசாசனம்' 20(i) ஆம் (ii)ஆம் பிரிவுகளின்படி, அனைத்துலக சட்டவிதிகளுக்கமைந்த நீதியான தேசியவிடுதலைப் போராட்டமென உலகெங்கும்வாழ் தமிழர்கள் உறுதியுடன் கூறி அதனை அங்கீகரித்து இன அழிப்பிலிருந்து தமிழீழமக்களைக் காப்பாற்றும்படி உலகநாடுகளின் தலைநகரங்களிற் பேரணிநடாத்தி அனைத்துலக அரசுகளைக் கோரிவருகின்றனர்.

இதனைத் திசை திருப்பும் நோக்கில், சந்திரிகா அரசு, "விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக வெற்றி பெறலாம் என்ற மாயையில் உள்ளனர், அவர்களை நெருக்கத்திற்கு உள்ளாக்கி பேச்சு வார்த்தைக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் போரிடுகின்றோம்" என வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் மூலம் ஒரு செய்தியைப் புற உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

"வடக்கில் இராணுவபலம் பெற்ற பின்னரே நாம் அரசியற் தீர்வினைக் கொண்டு வருவோம்" என சிறிலங்காவின் அரசியல் விவகார நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜிஎல். பீரிஸ், உள்நாட்டில் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு உறுதி கூற, அதனைப் பௌத்த மகாநாயக்க தேரோக்கள் வழிமொழிந்துள்ளனர்.

சந்திரிகா அம்மையாரோ இதற்கு இன்னும் ஒருபடி மேலேபோய், "சமாதான முயற்சிகளின் இலக்கு, வடக்கு-கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தனிமைப்பட்டிருக்கும் மக்களே" என முதலைக் கண்ணீர் வடிக்கிறார். ஆனால் நடைமுறையில் வடக்கு-கிழக்கு மக்களைக் குறிப்பாகக் கிழக்கு மக்களை, தனது பாதுகாப்புப் படைகள் மூலம் மிகக் கொடூரமான முறையில் இனஅழிப்புச் செய்து வருகின்றார். சுருக்கமாகச் சொன்னால் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர், அரசியல் விவகார நீதி அமைச்சர், சனாதிபதி ஆகிய மூவரும் தமது அரச தமிழ்மக்கள் மீது தொடுத்துள்ள ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

தமிழ்மக்கள் பற்றியோ, அவர்களது நாளாந்த வாழ்வுக்குள்ள இடையூறுகள் பற்றியோ, அன்றேல் அவர்களது உயிர் உடல் உடமைகளுக்கு தம்மால் விளைவிக்கப்படும் சேதங்கள் பற்றியோ சிறீலங்காவுக்கு எதுவித அக்கறையும் இல்லை. அத்துடன், தமிழர்களின் பொருண்மிய முயற்சிகள் அனைத்தும் ஆயுத முனையில் தடுக்கப்படுகிறது. இதனால்தான் சந்திரிகா கூறுவதுபோல், 'தனிமைப்படுத்தப்பட்டவர்களாக' ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றத் தமது இன்னுயிர்களையே ஈகம்செய்து விடுதலைப் புலிகள் போராட வேண்டியவர்களாக உள்ளனர். எனவே தமிழ்மக்களின் தனிமையை நீக்குவதற்கு சந்திரிகாவுக்கு உள்ள ஒரேவழி, தனது ஆயுத ஒடுக்குமுறையை நிறுத்தி தமிழீழ மக்களை அவர்களது அரசியல் அதிகாரத்தை அவர்களே நிர்ணயிக்க அனுமதிப்பதே ஆகும்.

இதற்கு மாறாக, இனஅழிப்பின் மூலம் சந்திரிகா தனது சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியைத் தமிழீழத்தின் மீது நிலைநிறுத்த முயன்றால், இறுதியில் படுதோல்வியையே தழுவிக் கொள்வார். அரசியல் யதார்த்தத்தையும் வரலாற்று வளர்ச்சிகளையும் பார்க்கும் எவரும் தமிழீழமக்கள் ஒரு 'தேசியஇனம்' என்ற உண்மையை மறுக்க முடியாது. ஆகவே தமிழர், சிறீலங்காவினால் வீனான இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுக்க, தமிழீழத் தேசத்தினையும் அதன் சிற்பிகளான விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்க வேண்டிய கடமை அனைத்துலக அமைப்புக்களிற்கும் உண்டு. இதனைச் செய்வதற்குக் காலதாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் சிறீலங்காவால் தமிழர்கள் இனஅழிப்புச் செய்யப்பட்டுக் கொண்டேயிருப்பர். இந்த உண்மையை அனைத்துலகும் உணர்ந்து கொண்டு, இனஅழிப்பைத் தடுப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு.

# சலுகைகளுக்காக ... எவரிடமும் நாம் கைநீட்ட மாட்டோம்

- தமிழீழத் தேசியத் தலைவர், திரு. வே. பிரபாகரன்



## எனது அன்புக்குரிய மக்களே!

**இ**ந்தத் தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக, எமது பிரச்சனைக்கு ஒரு இறுதியான அரசியற் தீர்வு ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிங்கள - பௌத்த தலைமைக்கு அப்படித் திடீரென மனமாற்றம் ஏற்படும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

**த**மிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக, தமிழர்களை ஏமாற்றி ஆயுதப் புரட்சிப் போராளிகளை அடிபணியச் செய்ய வேண்டும் என்பதே அரசின் அந்தரங்கத் திட்டமாகும். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்து போன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறோம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த ராஜதந்திரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை நான் உறுதியாகத் திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

**எ**மது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறோம். தாங்க முடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந்திருக்கிறோம். பெருந் தொகையான இளம் போராளிகளைக் களத்திற் பலிகொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

**இ**த்தனை கொடுமைகளுக்குப் பின்னர், இத்தனை வீரச்சாவுகளுக்குப் பின்னர் நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டுச் சலுகைகளுக்காகக் கைநீட்டப் போவதில்லை.

**த**ர்மமும், உண்மையும் இறுதியில் வெற்றியளித்துத், தமிழ்த் தாயிற் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான, **'தமிழீழம்'** என்றோ ஒருநாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

**எ**ம்மிடம் ஆத்ம பலமும், ஆயுத பலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

# அரசின் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கவே ஊர்வலங்கள்

## லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு

சிறிலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரங்களை முறியடிக்கும் நோக்கிலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அனைத்துலகமும் அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரியும் பாரிஸ் நகரில் கடந்த சனிக்கிழமையன்று மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அனைத்துலக கிளைப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகரிடம் பிபிசி தொடர்பு கொண்டு பேசியது.

கேள்வி:-இந்த ஊர்வலத்தின் நோக்கம் என்ன?

பதில்:-அனைத்துலக சமூகம் எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதும், சிறிலங்கா அரசு பல்வேறு பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டு வெவ்வேறு நாட்டு அரசுகளை நம்பவைத்து ஒரு இனப்படுகொலைப் போரை நடத்த முற்படுகிறது. அதற்கு எதிராக உண்மை நிலையை அம்பலப்படுத்தும் நோக்கத்துடன்தான் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

கேள்வி:-அதாவது இந்த ஊர்வலங்களின் நோக்கம் மக்கள் கருத்தை வெளிப்படுத்துவதா அல்லது அரசுகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதா?

பதில்:-இது தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்களும் ஒன்றுதான் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களுடைய அபிலாசைகளைத்தான் பிரதிபலிக்கிறார்கள் என்ற அடிப்படையில் நீதியான எமது போராட்டத்திற்கு அனைத்துலக



சமூகத்தின் ஆதரவைத் திரட்டுகின்ற அதே நோக்கத்தோடு சில நாடுகளின் உதவிகளைப் பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் சிறிலங்கா அரசு பெற்று தமிழ் மக்கள் மீது ஒரு இனப்படுகொலைப் போரை நடத்தக் கூடாது என்பது தான் இந்த ஊர்வலங்களின் நோக்கமாகும்.

கேள்வி:-அப்படி ஏதாவது நாடுகள் சிறிலங்காவுக்கு உதவுகின்றன என நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்:-அப்படி எந்த நாடும் உதவி செய்ததாக நாங்கள் அறிய வரவில்லை. ஆனால் இந்திய அரசு கடல்வலய முற்றுகை போன்ற சில விடயங்களிலும் பல்வேறு ஆயுதங்களைக் கொடுத்து உதவியதாகவும் தெரியவருகிறது. அந்த அடிப்படையில்தான் திருமலையில் சில இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

வேறு அரசுகள் உதவி செய்ததாகத் தெரியவில்லை. அதிலும் சிறிலங்கா அரசு, சீனா, உக்ரேன், ரசியா போன்ற நாடுகளிடமிருந்து வியாபார ரீதியாக-வர்த்தக ரீதியாக பொருள்களைக் கொள்வனவு செய்கிறது எனினும் அவை கூட சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்ற நோக்கில்தான் செயற்படுவதாகவும், சிறிலங்கா அரசுக்கு எந்த நாடும் ஆதரவாக முன்வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

கேள்வி:-அப்படியிருக்கும்போது இந்த ஊர்வலம் நடத்த வேண்டிய காரணம் என்ன?

பதில்:-சிறிலங்கா அரசு ஏராளமான பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறது. அத்தகைய செயற்பாடுகளை நாம் மக்கள் ஆதரவுடன் முறியடிக்கும் நோக்குடன் மக்களுடைய எழுச்சி ஊர்வலமாக நடத்தப்பட்டுள்ளது. தாயக விடுதலைக்கு அனைத்துலக அங்கீகாரத்தைக் கோரும் ஒரு விடயமாகவே இந்த ஊர்வலம் நடந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமெரிக்க இராணுவ ஆலோசகர்களின் சிபார்சுப்படி இராணுவ கட்டமைப்பில் மாற்றம்

## புதிய பதவி நிலைகளும் உருவாக்கம்

அண்மையிற் கொழும்புவந்த அமெரிக்க இராணுவத்தின் பசபிக் பிரதேசத்திற்கான விசேட நடவடிக்கைகளுக்கான கட்டளையகத்தைச் சேர்ந்த குழுவினர், சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பு மாற்றம் தொடர்பாகச் செய்த சில சிபார்சுகளைச் சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் வடக்கு-கிழக்கில் உள்ள சிறிலங்காவின் முப்படைகளின் முழுமையான நடவடிக்கைகளுக்கான பொறுப்பதிகாரியாக ஒருவரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு, இக்குழுவின் வேறு சில சிபார்சுகளும் பாதுகாப்பு அமைச்சின் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துச் சண்டே ரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் வெளிட்டுள்ள தகவலின்படி பசபிக் பிரதேசத்துக்கான அமெரிக்க இராணுவத்தின் விசேட நடவடிக்கைகளுக்கான கட்டளையகத்தைச் (SOPAC) சேர்ந்த குழு ஒன்று அண்மையிற் கொழும்பு வந்திருந்தது. இக் குழுவினர் பாதுகாப்பு அமைச்சுக்குச் செய்த சிபார்சுக்கு அமையவே வடக்கு கிழக்கிற்கான முழு அளவிலான கட்டளை அதிகாரி ஒருவரை நியமிக்கப் பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்தது. அமெரிக்க குழுவின் வேறு சில சிபார்சுகளும் அமைச்சின் பரிசீலனையில் உள்ளதாம்.

இத்தகைய முழுநிலைக் கட்டளை அதிகாரி எப்படியான பொறுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டுமென மேற்படி அமெரிக்க இராணுவக் குழுவினர் சிபார்சு செய்திருந்தனர். அவற்றுக்கான பொறுப்புக்களாவன:

1. அரசின் கட்டளைக்கேற்ப முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வது.

2. முப்படைகளின் ஆயுத மற்றும் ஆட்பலத்தைக் கொண்டு இராணுவ இலக்கை அடைதல்.

3. சிவில் மற்றும் பொலிசாரைக் கொண்டு அரசின் குறிக்கோளை அமுல் செய்தல் என்பனவாகும்.

இந்த முழுநிலைக் கட்டளை அதிகாரி அநுராதபுரத்திலுள்ள கூட்டுப்படைகள் அலுவலகத்தில் இருந்தபடி பணியாற்றுவார். இராணுவத்தின் சகல களத் தளபதிகளும், கடற்படையின் சகல வலயத் தளபதிகளும், விமானப் படையின் பிராந்தியத் தளபதிகளும் இவரின் கீழ்ச் செயற்படுவர் எனவும் இக்பால் அதாஸ் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் உள்ள சிறிலங்காவின் முப்படைகளின் முழுமையான நடவடிக்கைகளுக்கான அமைப்பின் பொறுப்பதிகாரியாகவே மேஜர் ஜெனரல் ஏ.எம்யூ. செனிவிரட்ன நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வடபகுதி முகாங்களுக்குச் செல்ல படை அதிகாரிகள் தயக்கம்

வடபகுதி இராணுவ முகாங்களிற்குக் கொழும்பிலுள்ள படை அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகள் வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனரெனக் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள இராணுவ அதிகாரிகள் வடபகுதி முகாங்களுக்கு விஜயம் செய்வதற்குத் தயக்கம் காட்டிவருகின்றனர்.

அதனால் விடுதலைப்புலிகளின் அடுத்தடுத்த இருபெரும் தாக்குதலினால் மனச்சோர்வுற்றிருக்கும் இராணுவத்தினரை ஊக்கப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# அரசு கையாளும் வழி முறைகள் குறித்து படை உயர் அதிகாரிகள் அதிருப்தி

சிறிலங்காப் படைக் கட்டமைப்பில் சிறிலங்கா அரசு தற்போது மேற்கொண்டு வரம் துரித மாற்றங்களினால் ஒரு பகுதி படைஉயர் அதிகாரிகள் அதிருப்தியும், விசனமும் கொண்டுள்ளனர். அரசாங்கம் திறமையை விட அரசாங்கத்திற்குச் சார்பானவர்க்கே முக்கிய பொறுபபுக்கள் வழங்குவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அரசு தனக்காதரவானவர்களை உயர் பதவிகளில் அமர்த்தும் அதே வேளை போர்த்திட்டங்களை விமர்சிக்கும் படையதிகாரிகளை வேறு பொறுப்புக்களுக்கு மாற்றுவதினால் படையதிகாரிகளிடையேயும் தனிப்பட்ட குரோத மனப்பான்மை தோன்றும் அபாயம் உள்ளது என்றும், இது இராணுவ உயர்பீட கட்டமைப்பினுள் ஓர் உறுதியற்ற நிலையையே இறுதியில் தோற்றுவிக்கும் என ஓய்வு பெற்ற சில முன்னாள் அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். அரசு தனக்கு ஆதரவாளர்கள் என இனங்கண்டு உயர் பதவிகளை வழங்க முன்வந்துள்ள சில படையதிகாரிகளில் கடந்த கால போர்ச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டித்தரத் தவறியதையும் இவ்வதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசின் முடிவுகளுக்கு ஒத்துப்போகும் படையதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கும் போக்கு போர்முனையிலும் பெரும் பின்னடைவு ஏற்படுத்தலாம் என சுட்டிக்காட்டப்படுகின்றது. திறமையற்ற சிலரும் அரசின் எண்ணப்பாட்டுடன் ஒத்துழைக்க முடிவு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு முக்கிய பதவி கிடைக்குமாயின் அவர்களால் போர் முனையில் சிறப்பாகப் படைகளை நெறிப்படுத்த முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. அரசின் இத்தகைய போக்குகளினால் படையதிகாரிகள் போரைவிட தமது பதவி நிலை குறித்தே அதிக கவனம் செலுத்துவதாக அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந் நிலமையினால் கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்டதாகக் கருதப்படும் சில அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் செல்லக்கூடிய நிலையும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

### ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் போர்க்களம் போக விருப்பமாம்

"வடக்கு-கிழக்கு போர்முனைக்குச் சென்று நான் போராடத் தயாராக இருக்கிறேன்"

என அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பராளுமன்ற உறுப்பினர் பேர்வின் சில்வா அறைகூவல் விடுத்து ள்ளார்.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சி, வடக்கு-கிழக்கு போருக்கு சிறீலங்கா அரசு உதவிகேட்கும் பட்சத்தில் அதனைத் தாம் தாராளமாக அளிக்கத் தயார் என அறிவித்துள்ளது.

தமிழின அழிப்பில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் தம் மிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்துள்ளனர் என்பதை இது உறுதிசெய்கிறது.

# தமிழர் என்பதற்காக விசாரணை

## □ கனடிய அமைச்சர் சான்று

இலங்கைத் தீவிற் தமிழ் மக்கள், தமிழர் என்கிற ஒரே காரணத்துக்காகச் சந்தேகிக்கப்படுவதையும் விசார ணைகளுக்கு உள்ளாகுவதையும் கனடிய வெளியுறவு இணை அமைச்சர் ரேமொண்ட்சான் நேரில் கண்டு உறுதிசெய்துள்ளார்.

அண்மையில் கொழும்புக்கு விஜயமொன்றை மேற்கொண்ட இவர் இலங்கையிற் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து "இலங்கையின் இன்றைய அரசியல் நிலை" பற்றிப் பேசும் பொழுதே இதனை ஊறுதி செய்தார்.

"சகல தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்க்கும் நிலை இங்கு இன்று உருவாகியுள்ளது. இங்குவந்த கனடியப் பிரஜைகளைக் கூடத் தடுத்து வைத்து விசாரணைக்குள்ளாக்கி உள்ளனர்" என அவர் கூறினார்.

நீண்டகாலமாகவே தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகவே இன்றைய நிலை தோன்றியுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் சமாதானப் பேச்சவார்த்தை மூலமே உண்மையான தீர்வைக் காணமுடியும் என வலியுறுத்தினார்.

சர்வதேசச் சட்டப்படி ஒரு அரசாங்கம் தனது குடிகள் எனக்கூறிக் கொள்பவர்களை இனத்தின் காரணமாகச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தால் அந்த இனத்தைச் சார்ந்தோர் தம்மைச் சரியான அரசாகப் பிரகடனப்படுத்துவது சட்டபூர்வமானது என்பது குறிப்பிடத்தக்கது.

### கப்பல் உணவில் ஒரு பகுதி நயினாதீவில் பறிப்பு

அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் நயினாதீவிற் சிறிலங்கா படையினராற் தடுத்துவைக்கப்பட்டிருந்த 'லங்கா முடி' என்ற கப்பல் அங்கு ஒரு தொகுதி உணவுப் பொருட்களை இறக்கிய பின்னர் காங்கேசன்துறை செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் அனேகமாக முழுவதும் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களே எடுத்துவரப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# பொலிசாருக்கு சிறப்புப் பயிற்சி வழங்க இந்தியாவிடம் சிறீலங்கா கோரிக்கை

சிறிலங்காவிற் சந்திரிகா அரசாங்கம் பதவியேற்றதை அடுத்துக் கார்த்திகை மாதத்திற் சிறிலங்காப் பொலிசாருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க இந்தியாவிடம் கோரிக்கை விடப்பட்டது. இதையடுத்து எட்டுப் பொலிசார் விமான மூலம் சிறப்புப் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்கள் அரியான மாநிலத்திலுள்ள மனோசாகர் என்னுமிடத்திற் தேசிய பதுகாப்புக் கல்லூரியிற் சுமார் இரண்டு மாதகாலம் பயிற்சி பெற்றனர். சிறிலங்கா ஜனாதிபதிக்கான தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாக அல்லது மெய்ப்பாதுகாவலராகச் செயற்படப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக் காவலர் கல்லூரியில் வேறொரு நாட்டுப் பொலிசாருக்குப் பயிற்சி வழங்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

தமது அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி குறித்துச் சிறிலங்கா திருப்தி வெளியிட்டுள்ளதோடு மேலும் சந்திரிகாவின் மெய்ப்பாதுகாவலர் சிலருக்குப் பயிற்சி அளிக்குமாறும் இந்தியாவைக் கோரியுள்ளது. அண்மைக் காலங்களில் விடுதலைப்புலிகளின் தாக்குதற் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து டில்லிக்கும் கொழும்புக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்துப் புதிய சகாப்தம் தோன்றியிருப்பதாகப் பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால், அவ்வாறான எந்த ஒத்துழைப்பிலும் 1987இல் நிகழ்ந்ததுபோல், அதாவது விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராட இந்தியப்படைகளை அனுப்பியதுபோன்ற செயல் எதுவும் இம்முறை கட்டாயம் ஏற்படப்போவதில்லை.

மாறாகப் பயிற்சி தருவது, கேந்திர தளபாடவகையிலும், பொருளாதார வகையிலும் ஒத்துழைப்புத் தருவது என்ற அளவோடு அமையும்.

இவ்வாறு பி.பி.சியின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் தினேஸ்குமார் எழுதியுள்ள ஆய்வுரையிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ரஷ்ய 'மிக்' போர் விமானங்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா முடிவு

■ வெளிநாட்டு நிபுணத்துவ உதவி பெறவும் தீர்மானம்

சிறிலங்கா விமானப்படைக்கு 'மிக்' ரகப் போர்விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதாகச் சிறிலங்கா விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த 'மிக்' ரகப் போர்விமானங்கள் ரஷ்ய தயாரிப்புகளாகும். ரஷ்யாவிற் தயாரிக்கப்பட்ட எம்ஐ ரக உலங்கு வானூர்திகளையும், போர்க்கப்பல், மற்றும் இராணுவ உபகரணங்கள் பலவற்றையும் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவுசெய்யச் சிறிலங்கா அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரும் நெருக்கடிக்கு வடக்கு முகாங்கள் உள்ளாகும்

## ■ இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பு

உண்மையென நம்பமுடியாத அளவிலான நெருக்குதல்களுக்கு வடபிராந்தியப் படையினரின் தளங்கள் உட்படவிருக்கிறது. இந்நிலையிற் கப்பல்கள், விமானங்கள் இன்றி உணவுப் பொருட்கள், ஆயுதங்களை எவ்வாறு பெற்றுக் கொள்ளப்போகிறது எனப் பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் 'ரொய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரொய்ட்டர் தெரிவிக்கையில், தோள்களில் சுமந்து செல்லக்கூடிய ஏவுகணைகள், லோஞ்சர்களைப் புலிகள் தம்வசம் வைத்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஏவுகணைகள் மிகவும் விலை உயர்ந்தவை. ஆகவே அவர்களிடம் குறைந்த எண்ணிக்கையான ஏவுகணைகளே இருக்கலாம்.

அவற்றை இத்தகைய பெரிய இலக்குகளுக்காக அவர்கள் பயன்படுத்தக்கூடும். ஏவுகணைக்கு ஈடுகொடுக்கக்கூடியதான கருவியினை விமானப் படையினர் பெறவேண்டியுள்ளது. அத்தோடு படையினர் தமது பாதுகாப்பு எல்லைகளை மேலும் விஸ்தரிக்க வேண்டியுள்ளது. அவ்வாறாயின் விமானங்களைத் தாக்குவது புலிகளுக்குக் கடினமானது. ஆனால் உக்கிரமான சண்டையாக அது அமையும் எனப் பாதுகாப்பு விமர்சகர்கள் கருதுவதாக ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெரும் போர் தொடுக்க ஆசை

# சிறு நகர்வுக்கும் வழியின்றி தவிப்பு

## சிறீலங்கா இராணுவத் தளபதி தடுமாற்றம்

தமிழீழம் மீதான பெரியதொரு போரைத் தொடுப்பதற்கான ஆசையில் சிறிலங்கா அரசம் பாதுகாப்புப் படைகளின் தலைமையலுவலகமும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

> சிறிலங்காப் படைகள், தமது தோல்விகளை அடுத்து இந்தியாவில் இந்திய அரசின் கூலிப்படைகளாக ஆயு-தப் பயிற்சி பெற்ற ஈஎன்டிஎல்எவ். குழுவினர் இருநூறு பேரை பரந்தன் ராஜன் என்பவரது தலைமையில் தருவிப்பதற்காக அவசரம் அவசரமாக இருநூறு சிறிலங்கா கடவுச்சீட்டுக்களை வழங்கியுள்ளனர்.

இதேவேளை நடைமுறையில் சிறுநகர்வுகளைக் கூட மேற்கொள்ள முடியாமல் தமிழீழ விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தடுக்கப்படும் சிறிலங்காப் படைகள் போர் ஒன்றை நடாத்துவதற்கான உளவியல் தன்மைகளை முற்றாக இழந்தநிலையில் தவிக்கின்றனர். அச்சுவேலி நோக்கி 'மின்னலடி' தாக்குதல் நடாத்தப்புறப்பட்டு கால்கள் 'பின்னலடித்த' நிலையில் தோல்வியைத் தழுவிய சிறிலங்கா இராணுவத்தினர் சந்திரிகா கொழும்பில் இருந்தவாறு தங்களது உயிர்களுடன் விளையாடு கிறார் என்ற மனோ பாவத்தை செய்தித்தாள்களுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதே வேளை அப்பாவித் தமிழ்மக்கள் மீது ஆயுத ஒடுக்குமுறைகளை, குண்டுவீச்சு, எறிகணைவீச்சு,

**- பற்றிமாகரன் -**

வகைதொகையற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள், குடியிருப்புக்களை அழித்தல் போன்ற செயல்கள்மூலம் வேகப்படுத்துவதில் சிறிலங்கா அரச படைகள் முன்னைய அரசகாலத்தைவிட 'பகிரங்கமாகவும் மூர்க்கத்தனமாகவும்' இறங்கியுள்ளன.

இராணுவத்தைவிட்டு விலகி ஓடிய 24,000 பேருக்கு பொதுமன்னிப்பு அளித்து படையில் சேர்க்க முயன்ற சிறிலங்காவின் முயற்சிக்கு நாற்பத்தெட்டு பேர் மட்டுமே திரும்பி வந்துள்ளனர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆளணிதிரட்டலும் மனோவலிமையும் இயலாத நிலையில் போரை நடாத்த முடியாமல் தவிக்கும் சிறிலங்கா இராணுவத்தினரை வைத்துக்கொண்டு என்ன செய்வது எனத் தெரியாது விழிக்கும் சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா 'வாக்கு' தடுமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் பரிசுத்த பாப்பரசரின் சிறிலங்கா விஜயத்தையொட்டி இலண்டன் பிபிசிக்கு அளித்த பேட்டியில் 'போரில் இராணுவத்தினரால் வெல்ல முடியாது' எனக்கூறிய ஜெரிடி.சில்வா தற்பொழுது தான் அப்படிக் கூறவில்லை என வார்த்தை தவறியுள்ளார். அனுரா பண்டாரநாயக்கா சிறிலங்கா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு விடை அளிக்கும்முகமாக சிறிலங்காவின் இராணுவத் தளபதி புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். 1995 தை மாதத்தில் தான் அளித்த பிபிசி. பேட்டியில் இருந்து தப்புவதற்கு 1994 ஆவணியில் தான் அளித்த பேட்டியை அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டதாகவும் அதில் தான் அவ்வாறு கூறவில்லை எனவும் பூசி மெழுக முயன்றுள்ளார். தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், சந்திரிகா அம்மையாரை அவரின் சகோதரரான அனுராவின் 'நாக்குவழிப்பில்' இருந்து காப்பாற்றுவதற்காகவும், சோர்வுற்று செயலிழந்து போயிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இது என்னடா எமது இளைஞர்கள் அநியாயமாக சிறிலங்கா அரசால் போரிற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு அழிக்கப்படுகிறார்களே என பரிதவிக்கும் சிங்கள மக்களுக்கு சமாதானம் கூறுவதற்காகவும் 'இனித்தான் பெரும் போர்' என்ற மாயையை சிறிலங்கா இராணுவத் தளபதி வெளிப்படுத்தியுள்ளார்.

'சிறிலங்கா இராணுவம் நன்கு பயிற்சி பெற்றதாகவும் ஆயுதந் தரித்ததாகவும் இருக்கிறது. பிரிவினைவாதப் போரில் விடுதலைப் புலிகளின் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள சிறிலங்கா இராணுவம் தயாராகவே இருக்கிறது. அத்துடன் பயங்கரவாதிகளை தோற்கடித்து இறுதியில் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் இணக்கத் தீர்வினூடாக நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் விரைவில் அவர்களுக்கு எதிரான போரை இராணுவம் தொடுக்கும்' என்னும் சிறிலங்கா இராணுவத் தளபதியின் கூற்று அவரின் இயலாமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதுவரை அவரின் இராணுவம் வடக்கு-கிழக்கில் ஆடும் சதிராட்டம் போர் இல்லாமல் என்ன என, கிண்டலாக அவதானிகள் விமரிசித்துள்ளனர்.

முழு அளவிலான போரையே சந்திரிகா அரசு நடாத்துகிறது. அதனை முன்னெடுக்க முடியாமல் விடுதலைப் புலிகளிடம் செம்மையாக வாங்கிக் கட்டும் சிறிலங்கா இராணுவம் தற்பொழுது கிழக்கிலும் தனது நிலைகளை இழந்து கட்டுப்பாட்டுத்தன்மை அற்றதாக ஆகியுள்ளது. கிழக்கில் மீட்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகள் அதிகபலம் பெற்று மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இத்தோல்விகளை மூடிமறைக்கவே "இனித்தான் பெரும் போர்" எனும் கதையளக்க தொடங்கியுள்ளனர் சந்திரிகாவும் அவரின் இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வாவும். சிறிலங்காப் படைகள், தமது தோல்விகளை அடுத்து இந்தியாவில் இந்திய அரசின் கூலிப்படைகளாக ஆயுதப் பயிற்சி பெற்ற ஈஎன்டிஎல்எவ். குழுவினர் இருநூறு பேரை பரந்தன் ராஜன் என்பவரது தலைமையில் தருவிப்பதற்காக அவசரம் அவசரமாக இருநூறு சிறிலங்கா கடவுச்சீட்டுக்களை வழங்கியுள்ளனர்.

இந்த ஈஎன்டிஎல்எவ் தமிழீழ தேசத்துரோகக்குழு. தீவுப்பகுதியிலும் மற்றைய தமிழீழ தேசத் துரோகக் குழுக்களான ஈபிஆர்எல்எவ், ரெலோ என்பன மட்டக்களப்பு பகுதிகளிலும் புளட் வவுனியாவிலும் சிறிலங்காப் படைகளின் கூலிப்படைகளாக தமிழீழ மக்களை கொன்றழித்தும், கொடூரங்கள் புரிந்தும் வருகின்றன. திருகோணமலையில் வெள்ளை வான் ஒன்றில் ஊர்வலம் வந்து அப்பாவித் தமிழர்களை கைது செய்து இழுத்துச் செல்ல சிறிலங்காப் படைகளுக்கு வழிகாட்டுகின்றனர். கொழும்பில் வகை தொகையின்றி தமிழர்களை கைது செய்யும் சிறிலங்காப் படைகளுக்கு

> அச்சுவேலி நோக்கி 'மின்னலடி' தாக்குதல் நடாத்தப் புறப்பட்டு, கால்கள் 'பின்னலடித்த' நிலையில் தோல்வியைத் தழுவிய சிறிலங்கா ராணுவத்தினர், கொழும்பில் இருந்தவாறு சந்திரிகா தங்களது உயிர்களுடன் விளையாடுகிறார் என்ற மனோபாவத்தை செய்தித்தாள்களுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஆலோசகர்களாகவும் துணையாளர்களாகவும் திகழ்வது மட்டுமல்லாமல் படைகள் வாங்கும் கையூட்டுகளுக்கு பொதுமக்களின் தரகர்களாகவும் நற்பணியாற்றி வருகின்றனர். இவர்களது துணையினால் தமிழீழப் பிரதேசத்தின் இராணுவ புவியியல் நுட்பங்களை கண்டறிந்து தாக்கலாம் என்பதே சந்திரிகாவின் நோக்கமாக உள்ளது.

'நக்கிற நாய்க்கு செக்கென்ன, சிவலிங்கமென்ன' என்ற கணக்கில் ஐக்கிய தேசியக் கட்சி அரசிலும் பொதுசன ஐக்கிய முன்னணியிலும் நக்கிப் பிழைக்கும் இந்தத் தேசத் துரோகக் குழுக்களைக் கொண்டு தமிழீழத் தேசத்தை பாழடிக்கலாம் என்பதே சிறிலங்காவின். பகற்கனவாக உள்ளது.

# கலையும் மாயை

ஐ.தேகவினது அட்டூழியங்கள் அனைத்திற்கும் ஆதாரமானது ஜனாதிபதி ஆட்சி முறைதான் என்றும், தாம் வெற்றி பெற்றால் உடனடியாக ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்றும் சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியினர் தேர்தல்காலத்தில் வாக்குறுதி அளித்தனர். இது அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு பிரதான விடயமாக இருந்தது. சிங்களமக்கள் இந்த வாக்குறுதியைப் பெரிதும் நம்பினர். இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் வரை, ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட மாட்டாதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன. 'ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்' என்று சிங்கள மக்களிற்குக் கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதியிலிருந்து தடம் புரள்வதற்குச்சந்திரிகா எடுத்துள்ள இலகுவான கருவி இனப்பிரச்சனை என்பதாகும். தனது சொந்தச் சிங்கள மக்களிற்கு அளித்துள்ள வாக்குறுதியில் இருந்து சந்திரிக்கா இவ்வாறு தடம்புரள்கிறார் என்பது ஒருபுறம் இருக்க, தனதுசொந்த நலனுக்குச் சாதகமாக வலுமிக்க அதிகாரங்கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பேணுவதற்கு எடுத்த வழிமுறை, தமிழ் மக்களின் பிரச்சனையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டமைதான். வழமையாகச் சிங்களத் தலைவர்கள் அனைவரும் செய்ததுபோலவே, தமது சொந்தப்பிரச்சனைகளைத் தமிழ் மக்கள்பால் திசைதிருப்பிவிட்டு தமது அரசியல்இலாபத்தினை ஈட்டும் வெட்கக்கேடான இனவாத அரசியலையே சந்திரிகாவும் பின்பற்றுகிறார். சந்திரிகாவின் பிரச்சனை பின்வருமாறு உள்ளமை தெளிவு.

சந்திரிகா, ஜனாதிபதித் தேர்தலில் 62 வீத வாக்குகளைப் பெற்றார். ஈழத்தமிழரும், மலையகத் தமிழரும், முஸ்லிம்களும் அளித்த வாக்குகளும்இதில் அடங்கும். நாடாளுமன்றத் தேர்தலாயின் மேற்படி ஈழத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்து பிரிந்தே சென்றிருக்கும். அப்போது சந்திரிகாவின் 62 வீத வாக்குகள் பெரிதும் குறையும். தற்போதைய நிலையில் சந்திரிகாவிற்கு, கூட்டரசாங்கம் என்ற வகையில், நாடாளுமன்றத்தில் ஒரு மேலதிக ஆசனம் மட்டுமே உண்டு. அதுவும் கூட்டரசாங்கம் என்ற காரணத்தால் பலவீனமான நிலையே காணப்படுகின்றது. அதாவது சிறீமானி அத்துலத்முதலியோ, அஸ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரசோ, அன்றி சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியோ, இவற்றில்ஏதாவது ஒன்று தமது ஆதரவை விலக்கிக்கொண்டால், சந்திரிகாஅரசாங்கம் நிர்க்கதிக்குள்ளாகும்.

எனவே, இந்தப் பின்னணியில், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து வெஸ்மினிஸ்ரர் நாடாளுமன்ற முறையைக் கொண்டுவந்தால் எந்தக்கட்டத்திலும் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்ற அச்சமே சந்திரிகாவிடம் உண்டு. இதனைத் தடுப்பதற்குரிய இலகுவான வழியாகச் சந்திரிகாவுக்குத் தெரிவது ஜனாதிபதி முறையைப் பேணுவதுதான். இத்துடன், இன்னொரு விடயத்தையும் இங்கு பரிசீலனை செய்யலாம். அதாவது ஜனாதிபதி முறையை ஒழித்துவிட்டு நாடாளுமன்றத்தைக்கலைத்து, புதிய பொதுத் தேர்தலுக்குச் சந்திரிகா தயாராக முடியாதா என்பதே அது. நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் சந்திரிகாவின் கட்சி தனிப்பெருங் கட்சியாய் வெற்றிபெற முடியாது என்பது தெளிவு. 40 வீதத்திற்கு உட்பட்ட வாக்குகளே, சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்துள்ளன. ஆட்சிக்கு வருமுன் இருந்த கறைபடியாத கரமல்ல சந்திரிகாவின் தற்போதைய கரம். அத்துடன் தனது தேர்தல் வாக்குறுதிகளில், பாணின் விலையைக் குறைத்ததைத்தவிர வேறெதனையும் அவர்செய்யவில்லை. இந்நிலையில், முன்பு கிடைத்த வாக்குகளைவிடவும் குறைவான வாக்குகளே இனிக்கிடைக்கலாம்.இப்பின்னணியில், தம்மாற் பெரிதும் கண்டிக்கப்பட்ட ஜனாதிபதி முறையை சந்திரிகா பேணுவாரே தவிர ஒழிக்கமாட்டார். ஜனாதிபதி முறைமையில் மட்டுமல்ல, அனைத்து விடயங்களிலும் சந்திரிகா இப்படித்தான் முன்சொன்னவற்றுக்கு முரணாகவே நடப்பார். மேற்படி தர்க்கபூர்வ விடயங்களிலிருந்து ஒன்றை நாம் தெளிவாக்கலாம். தனது தேர்தல் வாக்குறுதிகளினாலேயே சந்திரிகா தன்னைக் கைதியாக்கி உள்ளார் (அப்படிப்பட்ட வாக்குறுதிகளை அளிக்காமல் அவராற் பதவிக்கு வந்திருக்கவும் முடியாது). இவற்றிலிருந்து தன்னை மீட்கவும், தற்காக்கவும் அவர் கைக்கொள்ளப்போகும் வழிமுறை, தீவிர இனவாதம் தான் (இதற்கான சந்திரிகாவின் கால அட்டவணை இந்த ஆண்டு ஆனி, ஆடி மாதங்கள். ஏனெனில் இந்த ஆனி, ஆடி மாதங்கள்தான் உத்தேச அரசியல் திட்ட மாற்றக்காலம். அதுவரை பிரச்சனையை இழுத்தடித்துவிட்டுப்பின்பு, முழு இனவாதத்தில் குதிப்பதே திட்டம்). முன்னைய சிங்கள இனவாதத் தலைவர்களை விடவும் சந்திரிகா மிகவும் ஆபத்தானவர். ஏனெனில், முன்னையோர் வெளிப்படையான இனவாதிகள், சந்திரிகா ஜனநாயகம், மனிதஉரிமை, சமாதானம் எனும் முலாம்களைப் பூசிக்கொண்ட இனவாதி. ஆயினும் சந்திரிகாவின் வேடம் கலைய நாட்செல்லாது. சிறு மழை போதும், சந்திரிகாவின் வேடத்தைக் கலைக்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பு நகரின் இன்றைய நிலை

மூன்றாவது ஈழப்போர் தொடங்கியதைத்தொடர்ந்து, தென்பகுதி அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டுள்ளது. கொழும்பில் எந்தப் பகுதியிலும் தமிழ் இளைஞர் யுவதிகள் கைதாகும் செய்திகள் ஒருபுறம், மறுபுறம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்புக்கான வர்ண சுவரொட்டிகள் வீதிகளில் ஒட்டப்பட்டு வருகின்றன. மற்றொருபுறம், வடக்கு-கிழக்குப் போர்ப்பகுதியில் மரணமடையும் படையினருக்கான அஞ்சலி சுவரொட்டிகளும் அருகே காணப்படுகின்றன.

கொழும்பில் நிரந்தரமாக வசிக்கின்ற வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வந்து கொழும்பில் தற்காலிகமாகத் தங்கி நிற்கின்ற தமிழ் இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றி கைது செய்யப்படுவது கொழும்பில் சர்வ சாதாரணமான நிகழ்வாகிவிட்டது.

கொழும்பில் அதிகாலையில் இருந்தே காவல்துறையின் கைதிற்கு இளைஞர்கள் தயாராகி விடுவார்கள்.

-நிமலராஜன்

பெரும்பாலும் விடுதியகங்களிலும் வாடகை அறைகளிலும் இருப்பவர்களின் பாடுதான் பெரிதாக உள்ளது. வயது வேறுபாடின்றி-பால்வேறுபாடின்றி இவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

கைதாகிச் செல்வோருக்கு உணவு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இப்போது அருகிவிட்டது. மலசலம் கழிப்பதற்குக் கூட, இவர்களுக்கு அனுமதி கிடைப்பது குதிரைக்கொம்பாகிவிட்டது. மருதானை, கொம்பனித்தெரு, பொரளை, பம்பலப்பிட்டி, தெகிவளை, புறக்கோட்டை, ராஜகிரிய, பெகலியகொட, கந்தானை, கொட்டாஞ்சேனை, ஜா-எல, நீர்கொழும்பு காவல்துறை நிலையங்களில் கூடுதலான அளவில் தமிழர்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப் படுபவர்களைப் பார்ப்பதற்கும் உறவினர்களோ, நண்பர்களோ அனுமதிக்கப்படுவதில்லை. காலை வேளையிலிருந்து இந்த காவல் நிலையங்களின் முன்பாக தமிழர்கள் கூடிநிற்பதைக் காண முடியும்.

காவல்துறை நிலையங்களின் முன்பாக உறவினர்கள் அழுது புலம்புவதும், அதனை வாசல் காவல்நிலையில் இருக்கும் காவல்துறையினர் கேலி செய்வதும் நடந்து வருகின்றது.

இந்தக் கைதுகளில் வேடிக்கையான விடயங்களும் இடம்பெறாமலில்லை.

ஆமர் வீதியில் வசித்த 62 வயது வயோதிபப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது வீட்டைச் சோதனையிட்ட காவல்துறையினர், மேற்படி வயோதிபப் பெண்ணிடம் அவரது மகனைப் பற்றி விசாரித்தார்களாம். காது சரிவரக் கேட்காத இந்த வயோதிபப் பெண், காவல்துறையின் கேள்விகளுக்கு முறையாகப் பதிலளிக்கத் தவறியதால் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பின் வீதிகளில் வீதித்தடைகள் மீளவும் போடப்பட்டு வருகின்றன. போக்குவரத்துச் சபை பேரூந்துகள், தனியார் பேரூந்துகள் எவையும் நினைத்த மாத்திரத்தில் சோதனைக்குள்ளாகின்றன.

மாலையானதும், வீதிகளில் உலா வரும் தமிழ் இளைஞர்கள் எவரையும் இப்போது காண முடிவதில்லை. ஒன்று அவர்கள் கைதாகியிருப்பார்கள், அல்லது வீடுகளிலும் விடுதிகளிலும் பயப்பிராந்தியுடன் பதுங்கியிருப்பர்.

காவல்துறையின் நடவடிக்கைகளிற்கு அண்மையில் இரண்டு தமிழ்ச் செய்தியாளர்களும் உள்ளாகினர். தாங்கள் செய்தியாளர்கள் என ஆதாரங்களைக் காட்டியும், காவல் துறையினர் இவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டனர்.

விடுதிகளிலும், தனியார் வாடகை அறைகளிலும் தங்கி நிற்கும் இளைஞர், யுவதிகளுக்கு அன்றாட சாப்பாடும் ஒரு சிக்கலாகிவிட்டது. வெளியே சென்றால் கைதாகி விடுவோம் என்று அறைகளில் முடங்கிக் கிடக்கும் இவர்கள், தங்களுக்கான உணவைப் பெற்றுக்கொள்ள சிங்களவர்களையோ, முசலிம்களையோ நாடவேண்டியுள்ளது. இதற்காகக் கூலி வாங்கி உணவுப் பொட்டலம் பெற்றுக்கொடுக்கும் ஒரு கூட்டமும் தற்போது அங்கு உருவாகத் தொடங்கியுள்ளது.

வெளிநாடுகளுக்கு, போவதற்காகக் கொழும்பில் தங்கி நிற்போரின் பாடும் பெரும் திண்டாட்டமாகி விட்டது. முகவர்களை நம்பிப் பணம் கொடுத்து விட்டு, அவர்களிடம் ஓடித்திரியும் இவர்களுக்கு படையினரின் கைதுகள் வேறு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இவர்களின் இந்தப் பரிதாப நிலையில் கிடைத்தது இலாபம் என ஏய்த்துக்காட்டும் முகவர்களின் பாடு தற்போது கொண்டாட்டமாகியுள்ளது.

இவை இப்படியிருக்க, கொழும்புத் தமிழ்க் குழுக்களின் செயற்பாடுகள் மக்களை இன்னும் விரக்தி நிலைக்கே இட்டுச் செல்கின்றன. குறிப்பிட்ட ஒரு குழுவினர் படையினரோடு ஆள் பிடிப்பில் ஈடுபட, மற்றைய குழுக்கள் கைதானவர்களைக் காசிற்கு விடுவிக்கும் கைங்கரியத்தைச் செய்துவருகின்றன. தமது குழுக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் கைதானவர்களை விடுவிக்க இவர்கள் பெற்றுக் கொள்ளும் ஆளையும் நேரத்தையும் பொறுத்து, பத்தாயிரத்திலிருந்து பதினையாயிரம் வரை வேறுபடுகின்றது.

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்புச் சுவரொட்டிகள்

முதன்முறை கைதாகி விடுதலைக்காகப் பணம் கொடுத்தவர், இரண்டாம் முறை கைதாகி மீண்டும் பணம் கொடுத்து விடுதலை பெற்ற சம்பவங்களும் நடந்துள்ளன.

இதேவேளை இவ்வளவு காலமும் இல்லாமல் மீண்டும் கிளப்பப்படும் இனவாத வதந்திகள் வேறு பீதிச் சூழலை தோற்றுவித்து வருகின்றன.

தினமும் எவ்வேளையும் வாயிற் கதவு தட்டப்படலாம், தாம் கைது செய்யப்படலாம், என்பதே கொழும்பில் வாழும் தமிழர்களின் பயப்பிராந்தியாக இருந்து வருகின்றது.

இது இப்படியிருக்க, இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் முயற்சிகள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன. மூன்றாம் ஈழப்போரில் புலிகள் நடத்திய தாக்குதல்களால் இந்த முயற்சியில் தொய்வு ஏற்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

இதனைத் தடுப்பதற்காக, சிங்கள இளைஞர்களைக் கவரும் வகையில், பல்வேறு சுவரொட்டிகள் கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் ஒட்டப்பட்டு வருகின்றன.

'இன்று நீங்கள் நாட்டைக் காக்க வராவிட்டால் தமிழீழம் என்ற ஒன்று, நாளை உருவாவதற்கு நீங்கள் காரணமாகி விடுவீர்கள்'

'தமிழனுக்கு நாடு போனால் நாம் என்ன செய்வது'

போன்ற சுவரொட்டிகள் உரிமையாளர் விடயம் இல்லாமல் சுவர்களில் காணப்படுகின்றன.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் குறிப்பிட்ட தொகை இளைஞர்களைப் படையில் சேர்க்க ஆவன செய்ய வேண்டும், பிரச்சாரம் செய்ய வேண்டும் என பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

படைகளில் இருந்து தப்பியோடிய சிங்கள இளைஞர் சுமார் 35 ஆயிரம் பேரை, மீண்டும் வந்து படையில் சேருமாறு அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகள் சோபையிழந்து போயுள்ளன.

எப்படியாவது படைக்கு ஆள் சேர்க்க வேண்டும் என்பதற்காக புதியதொரு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது பௌத்த பிக்குகள் படையில் சேரும் செய்தியாகும். தமது மஞ்சள் நிற காவியுடையைக் களைந்து விட்டு, இராணுவ சீருடையை மீண்டும் தரிக்கப் போவதாக பௌத்த பிக்கு ஒருவர் சிங்களச் செய்தித்தாள் ஒன்றுக்கு தந்த செவ்வி பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் போரில் உயிரிழக்கும் படையினருக்கு அஞ்சலி செலுத்த அலங்கார வளைவுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து, காலி வரையான 116 கிலோ மீற்றர் காலி வீதியில் 30 க்கும் அதிகமான இவ்வாறான அஞ்சலி வளைவுகள் கட்டப்பட்டுள்ளன. இதே போல கொழும்பு-கண்டி நெடுஞ் சாலையில் 22 அஞ்சலி வளைவுகளும், கொழும்பு-புத்தளம் வீதியில் 50 அஞ்சலி வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

இதைவிட வெள்ளைத் தோரணங்களும், பதாதைகளும் வீதிகளில் தொங்கவிடப்படுவதைக் காணக்கூடியதாயுள்ளது.

கொழும்பில் நடப்பவற்றைக் காணும்போது தமிழர்களுக்கு எதிரான இனவாதப் போக்கு, மீண்டும் அரசாலும் தென்னிலங்கை அரசியல்வாதிகளாலும் துளிர்விடச் செய்யப்படுவதைத் தெளிவாக நோக்கக்கூடியதாகவே இருக்கின்றது.

# கொழும்பைவிட்டு ஐ.தே.க வெளியே செல்ல முனைகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் கண்டி நகரில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ஏற்பாடுகள் அரசாங்கத்தின் தடையுத்தரவால் பிரச்சினைக்குரியனவாகின. மயாவையில் ஆரம்பித்து கண்டி மத்திய பேரூந்து நிலையத்தை மேதின ஊர்வலம் வந்தடையும் என்றும் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் சபை தீர்மானித்திருந்தது.

இந்த ஏற்பாடுகளுக்கான முழுப் பொறுப்பும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்வலத்துக்கான அனுமதி பெறுவதற்கான கடிதங்கள் 'காவல்' அதிபர் பிராங் டி சில்வாவிடம் கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் மகிந்த சமரசிங்காவினால் நேரடியாகக் கையளிக்கப்பட்டன. அந்த அனுமதி கோரும் கடிதத்தைப் பெற்ற 'காவல்' அதிபர் ஐக்கிய தேசியக் கட்சி ஊர்வலத்தைக் கொழும்பில்தான் நடத்த வேண்டும் என்றும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு மட்டுமே கண்டியில் மேதினக் கூட்டமோ ஊர்வலமோ நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். இதையடுத்து சிறிகொத்தவில் நடந்த தேர்தல் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்திலும், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலும் இந்த விவகாரம் எழுப்பப்பட்டது.

இந்நிலையில் 'காவல்' அதிபர் தனது மறுப்புக் கடிதத்தை உத்தியோகபூர்வமாகக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினிஅத்துக்கோரளைக்கு அனுப்பி வைத்தார்.

தொடராக நடந்த இந்தச் சம்பவங்கள், இன்று தென்னிலங்கையில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாக இதனை உருவெடுக்கவைத்தன. கண்டியில் மே தினத்தைக்கொண்டாடுவதற்கு ஐ. தே. க பின்னணியிலிருந்த காரணங்களைவிட அரசாங்கம் தடை விதித்த போதும் அங்கு மேதினப் பேரணியை நடத்தி அதன் மூலம் எழும் விளைவுகளைச் சாதகமாக்கவே ஐ. தே. க தீவிரமாக முயன்றதாக அவதானிகள் கூறுகின்றனர்.

> பொதுத் தேர்தலிலும், சனாதிபதித் தேர்விலும் தொடரான தோல்விகளைச் சந்தித்ததன் பின்னரும் ஐ. தே. கவின் புதிய தலைமைத்துவத்தின் பதவியேற்புக்குப் பின்னரும் தனது செயற்பாடுகளைக் கொழும்புக்கு அப்பால் வைத்துக் கொள்ளவே ஐ. தே. க விருப்பம் கொண்டு வருவதைக் காணலாம்

பதவியேற்றதின் பின்னர் பொது சன ஐக்கிய முன்னணியின் செல்வாக்கில் ஏற்பட்ட தளர்ச்சியைத் தனது பக்க ஆதரவாகத் திருப்பிக் கொள்ளத் தருணம் பார்த்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்தக் கட்டமும் முக்கியமானதாகும்.

வழமையாகக் கொழும்பு காலிமுகத்திடலின் புற்தரவைப் பகுதியில் மேதினக் கூட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தி வந்தது. தொழிலாளர்களின் உரிமைக்கான தினம் என்பதிலும் பார்க்க, தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களும், சிங்கள திரைப்பட நடிகர்களும் பங்குகொள்ளும் ஒரு களியாட்ட விழா அங்கு நடைபெற்று வந்தது.

ஆனால் பொதுத் தேர்தலிலும், சனாதிபதித் தேர்விலும் தொடரான தோல்விகளைச் சந்தித்தன் பின்னரும் ஐ. தே. கயின் புதிய தலைமைத்துவத்தின் பதவியேற்பிற்குப் பின்னரும் தனது செயற்பாடுகளைக் கொழும்புக்கு அப்பால் வைத்துக் கொள்ளவே ஐ. தே. க விருப்பம் காட்டி வருவதைக் காணலாம்

அனுராதபுரத்தில் கட்சியின் புனர்நிர்மாணத்தை ரணில் விக்கிரமசிங்கா ஆரம்பித்ததன் பின்னிணைப்பாகக் கண்டியில் மே தினத்தைக் கொண்டாட ஐ. தே. க முடிவெடுத்திருந்தது.

கொழும்பினை மையமாக வைத்துக் கட்சியை வழி நடத்திய காலம் ஜெயவர்த்தனா, பிரேமதாசா, விஜேதுங்காவோடு முடிந்துவிட்டதை இந்த முடிவு காட்டியது. இதற்கேற்ப கண்டியில் மேதினத்தன்று நடத்தப்பட்ட பேரணியும் ஊர்வலமும் ஒரு சான்றாக உள்ளது.

www.tamilarangam.net



# மூன்றாங்கட்ட ஈழப்போரும் மூலோபாயம் இழந்து நிற்கும் சிறீலங்காவும்

**மூன்றாங்கட்டப்போர் தொடங்கி மூன்று வாரம் முடிவுற்ற நிலையில் ஈழத்து அரசியல் ஆய்வாளர் ஜெயராஜ அவர்கள் ஈழநாதம் பத்திரிகையில் எழுதிய ஆய்வுக் கட்டுரையை இங்கு மறுபிரசரம் செய்கிறோம்.**

மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கி மூன்று வாரங்கள் கடந்துவிட்டன. பிபிசிக்கான கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளது போல், இக்காலப்பகுதியிற் சிறிலங்கா இராணுவம் திகில் தரும் வகையிற் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளது என்பது மிகையான கூற்றொன்றல்ல.

இக்காலப்பகுதியிற் சிறிலங்கா ஆயுதப்படையினர் 200க்கும் மேற்பட்டோரை இழந்துள்ளனர். இதில் விமானப் படை, கடற்படை, இராணுவம் எனச் சிறிலங்காவின் முப்படையும் மற்றும் பொலிஸ் படையும் உயிரிழப்பைச் சந்தித்துள்ளன. ஆயுதத்தளபாட இழப்பைப் பொறுத்தும் பாரிய செலவீடானதே. விமானப்படை விமானங்கள், போர்க் கப்பல்கள் எனப் பெறுமதியான ஆயுத தளபாடங்களை இழந்துள்ளதோடு, கணிசமான ஆயுதங்களையும் விடுதலைப்புலிகளிடம் அரச தரப்புப் பறிகொடுத்துமுள்ளது எனலாம்.

ஆனால் மூன்றாங்கட்டப் போரானது குறுகிய காலத்தில் பெரும் உயிர், உடமை இழப்பை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்ல, அது பல புதிய பரிமாணங்களையும் - இதன்

## மூன்றாம் கட்டப் போரும், கிழக்கும்

யாழ் குடாநாட்டை முற்றாகப் பிடிப்பதென்பதில் இரு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று யாழ் குடாநாட்டை முழுமையாக இராணுவத்தால் கைப்பற்ற முடியுமா! அவ்வாறு கைப்பற்றினாலும் அதைப் பாதுகாக்க முடியுமா! என்பது. இரண்டாவது விமானப்படையின் உதவியின்றியும், கடற்படையின் பூரண ஒத்துழைப்பின்றியும் பெரும் படைநகர்த்தல் எதையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமா! என்பது.

விளைவாகச் சிறிலங்கா அரசிற்குப் புதிய நெருக்கடிகள் பலவற்றையும் உருவாக்கியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

மூன்றாங்கட்ட ஈழப்போரானது திருமலைத் துறைமுகத்திற் தரித்திருந்த போர்க்கப்பல்களான அதி வேகப்பீரங்கிப் படகுகள் இரண்டைக் கடற்கரும்புலிகள் மூழ்கடித்ததில் இருந்து ஆரம்பித்தது. இழப்பீட்டின் அடிப்படையில் மட்டும் இத்தாக்குதலானது பெரிதானதல்ல. இத்தாக்குதலானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற் புதிய பரிமாணத்தையும் உட்புகுத்தியதெனலாம். அதாவது போராட்ட யுத்திகள்-எல்லைகள் என்பனவற்றின் விஸ்தரிப்பாகவும் இருந்தது.

சிறிலங்கா அரசைப் பொறுத்தோ, இராணுவத்தைப் பொறுத்தோ கிழக்கு விடுவிக்கப்பட்ட பகுதியாகும்.

**ஜெயராஜ்**

ஆனால் மூன்றாம் ஈழப்போரின் முதற் தாக்குதல் மையமாகக் கிழக்கு, புலிகளால் தெரிந்தெடுக்கப்பட்டமையானது-இரண்டாம் ஈழப்போரிற் தனது வெற்றியென இராணுவத் தரப்பினாலும், அரசாங்கத்தினாலும் பறைசாற்றப்பட்ட விடயம், கேள்விக்குரியதாக்கப்பட்டுவிட்டதெனலாம். இதனை மேலும் உறுதிப்படுத்துமாப்போன்று இருந்தவையே கட்டுமுறிப்புக்குள இராணுவ முகாம் தகர்ப்பும், திருக்கோவிற் பகுதியில் விசேட அதிரடிப்படை மீதான தாக்குதலுமாகும். இவ்விரு தாக்குதலும் வெற்றிகரமான தாக்குதல் என்பது மட்டுமல்ல, அதன் இராணுவ, அரசியற் பரிமாணங்களும் முக்கியமானதாகும்.

கட்டுமுறிப்புக்குள இராணுவ முகாம் தகர்ப்பானது, கிழக்கில் விடுதலைப்புலிகளின் நிலை உறுதியாகவே உள்ளது என்பதை வெளிக்காட்டும் அம்சமாகும். கிழக்கிற் சமார் 120 பேருக்குமேல், அதிலும் காடுகளில் நடவடிக்கைகளுக்கெனப் பயிற்றப்பட்ட விசேட அதிரடிப்படையினரைக் கொண்ட ஒரு இராணுவ முகாமைச் சில மணிநேரத்திற் தாக்கி அழித்தல் என்பது இலகுவானதொரு காரியமல்ல. இந்த வகையிற் கிழக்கிற் புலிகளின் பலம் வெளிக்காட்டப்பட்ட ஒரு நிகழ்வாகவே இதனைக் கருதமுடியும்.

அத்தோடு கிழக்கிற் கடற்புலிகளின் போர்ப் பிரதேசமானது தனியாகக் கடற்படையினரின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அச்சுறுத்தலானது மட்டுந்தானா! என்ற வினாவும் உள்ளது. கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளுடனான கடல்வழித் தொடர்பு கிழக்குக் கடற்பரப்பிற் சிங்கள மீனவர்களின் பிரவேசம் என்பனவற்றையும் கணிசமாகப் பாதிக்கக் கூடியதாகும். இவ்வாறானதொரு சூழ்நிலையை ஏற்கனவே வடமேற்குக் கடற்பரப்பிற் சிறிலங்காக் கடற்படையினர் அனுபவிக்கத் தொடங்கியுள்ளமை, இங்கு சுட்டிக்காட்டக் கூடியதாகும். இந்நிலையிற் கிழக்கிற் புலிகளின் நடவடிக்கை அதிகரிப்பதென்பது சிறிலங்கா இராணுவத்தரப்பிற்கு நெருக்கடிகள் பலவற்றைப் புதிதாக உருவாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

> சிறிலங்கா அரசைப் பொறுத்தோ, இராணுவத்தைப் பொறுத்தோ, கிழக்கு விடுவிக்கப்பட்ட பகுதியாகும். ஆனால் மூன்றாம் ஈழப்போரின் முதல் தாக்குதல் மையமாகக் கிழக்கு, புலிகளால் தெரிந்தெடுக்கப்பட்டமையானது-இரண்டாம் ஈழப்போரில் தனது வெற்றியென இராணுவத் தரப்பினாலும், அரசாங்கத்தினாலும் பறைசாற்றப்பட்ட விடயம் கேள்விக்குரியதாக்கப்பட்டுவிட்டதெனலாம்

இதையொத்த ஒரு முக்கியமான நிகழ்வே திருக்கோயிலில், விடுதலைப்புலிகள், விசேட அதிரடிப் படையின் மீது மேற்கொண்ட தாக்குதலுமாகும். சிறிலங்கா இராணுவ அமைப்புக்களுட் தம்மை 'மேலானவர்கள்' எனக்கருதும் அதிரடிப்ப டையினர் புலிகளிடம் அடிவாங்கிய மையானது, கெரில்லாப் போர்முறை நுணுக்கத்திற் புலிகளின் சிறப்பை வெளிப்படுத்தும் ஓர் முக்கிய அம்சமாகும்.

இதே சமயம் இத்தாக்குதலானது அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் நடத்தப்பட்டமையானது, தமிழீழப் போராட்டமானது, தனது எல்லையிலிருந்து இன்னமும் குறுகவில்லை என்பதை உணர்த்தும் ஒன்று எனவும் கொள்ளலாம்.

அதாவது மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கிக் குறுகிய காலமாயினும், நடந்த தாக்குதல்கள் சிலதாயினும், இப் போரானது கிழக்கிற் தரையிலும் கடலிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை, கிழக்குப் போர்முனையில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இந்நிலையானது சிறிலங்கா இராணுவத்தரப்பைப் பொறுத்து இரு முக்கியமான பிரச்சனைகளை உருவாக்கியுள்ளதெனலாம். அதில் ஒன்று, காட்டுப்புறங்களை அண்டியுள்ள இராணுவ முகாம்களின் பாதுகாப்புப் பற்றியதாகும். இரண்டாவது, கிழக்குக் கடற்பரப்பில் இதுவரை சுதந்திரமான நடமாட்டத்தைக் கொண்டிருந்த கடற்படையின் செயற்பாடுகள் ஆபத்திற்கு உள்ளாகியிருப்பது பற்றியதாகும். கிழக்குமாகாணத்தைப் பொறுத்து இராணுவ நிலைகள் வடக்கைப் போன்று பெரும் தளமாக இல்லாமல் சிறிய முகாம்களாகத் தொடர் சங்கிலி போன்று அமைந்துள்ளன, இந்நிலையில் இவற்றிற் தாக்குதல்கள் நடத்தப்படும்போது தொடர் சங்கிலிகள் உடைக்கப்படலாம். புலிகள் கைப்பற்றும் இடங்களில் நிலைகொள்ளாவிடினும், இராணுவம் அடிக்கடி இழப்புகளைச்சந்திக்கவேண்டி வரலாம். இந்நிலையானது, கிழக்கை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் இராணுவத்தின் போருபாயத்தைப் பாதிப்பிற்குள்ளாக்கக் கூடும். மறுவளமாகக் கிழக்கைத் தவிர்ப்பதற்காக முகாம்களைத் தளங்களாக இராணுவம் விஸ்தரிக்க முனையுமானால் பிரதேசங்களைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் இராணுவ மூலோபாயம் கேள்விக்குரியதாக்கப்படலாம். ஏனெனில் தளங்களில் இருந்து வெளிப்படும் ரோந்து அணிகள் மூலமே பிரதேசங்களின் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு முனைய வேண்டும். ஆனால் அது எத்தகைய சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியது. ஏனெனில் கடந்த காலத்திற் சிறிலங்கா ரோந்து அணிகள் பல அதிசயிக்கத்தக்க வகையிற் பெரும் அடிகளை விடுதலைப்புலிகளிடம் ஏற்கனவே பெற்றுள்ளது இதில் உள்ள ஆபத்தை உணர்த்தக்கூடும்.

## மூன்றாம் கட்டப் போரும், வடக்கும்



இதேசமயம் மூன்றாம் கட்டப்போரில் வடக்கிற் குறிப்பிடத்தக்க தாக்குதல் என்ற வரிசையில் விமானப்படை விமானங்கள் மீதான தாக்குதல்கள் இரண்டும், தீவுப்பகுதிக்குள் ஊடுருவி மேற்கொண்ட தாக்குதலும் இராணுவத் தந்திரோபாயங்களிற் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

விமானங்கள்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல், வடபகுதி முகாம்களை ஓர் முற்றுகை போன்றதொரு நிலைக்கு உள்ளாக்கியுள்ளது என்றே கூறலாம். இந்நிலையானது, இராணுவ மூலோபாயங்களில் ஏற்படுத்திய தாக்குதல்கள் என்பனவற்றுடன் மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல் மற்றும் பொதுமக்கள் மட்டத்திலும் ஒரு கொந்தளிப்பு நிலையை உருவாக்கியுள்ளது.

> அதாவது மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கி குறுகிய காலமாயினும், நடந்த தாக்குதல்கள் சிலதாயினும், இப் போரானது கிழக்கில் தரையிலும் கடலிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை கிழக்குப் போர்முனையில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இந்நிலையானது சிறிலங்கா இராணுவத்தரப்பைப் பொறுத்து இரு முக்கியமான பிரச்சனைகளை உருவாக்கியுள்ளதெனலாம் அதில் ஒன்று காட்டுப்புறங்களை அண்டியுள்ள இராணுவமுகாம்களின் பாதுகாப்புப் பற்றியதாகும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்தித்துறை - சந்திரிகா அரசு

பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கம்-செய்தி நிறுவனங்கள், மற்றும் பொது சனத் தொடர்புச் சாதனங்களுடன் ஒரு வகையிலான யுத்தமொன்றை ஆரம்பித்துள்ளது. இந்த நிலை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் கால இறுதிப்பகுதியில், அன்றைய அரசக்கும் பொதுசனத்துறைக்கும் இடையிலான உறவின் தன்மையைத் தவிர்க்கமுடியாமல் ஞாபகப்படுத்துகின்றது. செய்தியாளர்களும், செய்திஸ்தாபனங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசினைச் சாடிவருவது ஒரு புறத்திலும், ஜனாதிபதியும் முப்படைத்தளபதிகளும் செய்தி ஊடகங்கள் மீது கண்டனங்களைத் தொடுப்பது மறுபுறத்திலுமாக இந்த மோதல் வலுத்து வருகின்றது. இதன் காரணமாக, அலரிமாளிகைக்குள் அமைதி குலைந்து வருவதாக அதற்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா, இப்போது இரவில் கூட நித்திரை ஒழுங்காக வருவதில்லை என, அவருக்கு மிக நெருக்கமான மதத்தலைவர் ஒருவருக்கு வாய்விட்டுக் கூற வேண்டிய நிலை வரை சென்றுள்ளது.

## தெற்கில் ஒரு புதிய போர்

இதேவேளை, தினமும் நாளைய செய்தித்தாள்களில் என்னென்ன செய்திகள், எந்த விதத்தில் வெளியிடப்படுகின்றதோ என்ற ஏக்கத்துடனேயே காலைக் கடமைகளை ஆரம்பிக்கவேண்டியுள்ளதாகத் தனது வெகுசனத்தொடர்பு ஆலோசகர் சனத் குணதிலகாவிடம் ஜனாதிபதி சந்திரிகா கவலையுடன் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. செய்தி ஊடகங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இந்த முரணான போக்கு ஆரம்பித்த இடத்தை அறிவதற்கு நீண்டஆராய்வுகளோ விவாதங்களோ தேவையானதாக இருக்காது.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர், படைத்துறை சந்தித்த ஒவ்வொரு இழப்பும் அரசாங்கத்தின் பல வீனமாகவே வெளிப்படுத்தப்பட்டது. இதனை ஏற்றுக்கொள்ளவோ சகித்துக்கொள்ளவோ அரசாங்கம் விரும்பவில்லை. இதனால் எழுந்த உள்ளக்குமுறல்கள் அரசாங்கம் செய்தி ஊடகங்களின்மீது சீற்றத்தை வெளிப்படுத்தக் காரணமாக அமைந்தது. படையினர் சந்தித்த ஒவ்வொரு இழப்பையும் அக்கு வேறு, ஆணிவேறாகப் பிரித்து படையினரின் பலம் பற்றிய சந்தேகங்களையும் எதிர்கால திட்டங்கள் பற்றிய ஊகங்களையும் தென்னிலங்கைப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கின. இது சிங்களமக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிரான உணர்வுகளை வளர்ப்பதாகவும் அதே வேளை, பேரினவாத சிந்தனைகளுக்குக் களம் அமைப்பதாகவும் அமைந்தது.

யாழ் குடாநாட்டு வான்பரப்பில் விடுதலைப்புலிகளினால் சிறிலங்கா விமானப் படையின் இரண்டு அவ்ரோ விமானங்கள் சட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப்போக்கு மேலும் உச்சநிலைக்குச் சென்றது. அதிலும் முதலாவது விமானம் வீழ்ந்ததற்கு இயந்திரக்கோளாறே காரணம் என அரசாங்கம் தெரிவித்த நியாயம், சிங்கள மக்களின் செவிகளை அடைந்து கொண்டிருந்த போது, இன்னுமொரு விமானமும் வீழ்த்தப்பட்டதாகக் கிடைத்த தகவல், அரசாங்க தரப்புச் செய்திகளின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குரியதாக்கியது.

இதனால் தென்னிலங்கைச் செய்தி ஊடகங்கள் அரசாங்கத்தை மேலும் விமர்ச்சித்தன. வடபகுதி படை முகாம்களை விடுதலைப் புலிகளின் படையணிகள் சுற்றிவளைத்துள்ளதாகவும், புலிகள் இரசாயன ஆயுதங்களைப்பயன்படுத்தத் தயாராக இருப்பதால் படையினர் எவ்வேளையும் ஈரத்துவாயுடனும், தண்ணீர் வாளிகளுடனும் இருப்பதாகவும் குறிப்பிடும் செய்திகள் தென்னிலங்கையில் மிகவும் வேகமாகப் பரவின.

இதற்கும் மேலாக வடபகுதியிலுள்ள படையினர் பட்டினிச்சாவை எதிர்நோக்கி இருப்பதாகவும் தற்போது பருப்பும் சோறுமே சாப்பாடாக இருப்பதாகவும் படை அதிகாரி ஒருவர், சர்வதேச செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த தகவல், தென்னிலங்கையில் அரசிற்கெதிராகப் பெரும் உணர்வலைகளைக் கிளப்பியுள்ளது.

வடபகுதி முகாங்களின் நிலை பற்றி அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புக்களை இவ்வாறான தென்னிலங்கைப் பத்திரிகைகளின் செய்திகள் ஒதுக்கித் தள்ளின.

எனவே இன்னமும் வடபகுதி முகாம்களைப் புலிகள் தாக்கவில்லையென்ற செய்தியைக்கூட வெளியிடாமல் இருப்பதே நலமானது என்ற நிலைக்கு அரசாங்கம் இட்டுச்செல்லப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக வடபகுதியிலுள்ள படையினர் பட்டினிச்சாவை எதிர்நோக்கி இருப்பதாகவும் தற்போது பருப்பும் சோறுமே சாப்பாடாக இருப்பதாகவும் படை அதிகாரி ஒருவர், சர்வதேச செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த தகவல், தென்னிலங்கையில் அரசிற்கெதிராகப் பெரும் உணர்வலைகளைக் கிளப்பியுள்ளது. இச்செய்தி அரசாங்கத்திற்கும் சிரேஸ்ட படைத்துறை அதிகாரிகளுக்கும் பெரும் அழுத்தத்தைத் தரக்கூடியதாகத் தென்னிலங்கைச்

செய்தி ஊடகங்கள் மக்களிடம் கொண்டுசென்றன. இதற்குத் தகுந்த பதிலளிக்க முடியாத நிலைக்கு அரசாங்கமோ, படைத்துறை உயரதிகாரிகளோ தள்ளப்பட்டதும் சிங்களமக்களை எரிச்சல் அடைய வைத்துள்ளது. ஜனாதிபதி செயலகம், குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்தின் பெயரைக் கூறி கண்டித்த அதேவேளை, இராணுவ முகாம்களில் இரகசியமாகப் பேணப்படும் உணவுக் கையிருப்பையும் அது முடியும் கால எல்லையையும் தவிர்க்கமுடியாமல் வெளியிட வேண்டிய சூழ்நிலையும் உண்டானது. இராணுவத்தினரை நெருக்குதலுக்குள்ளாக்கும் விடயமாக, குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனம் செய்திகளை வெளியிடுவதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கைக்கு, அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பதிலை அளித்தது. நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நிலையை எடுத்துக்கூறுவதே தனது நோக்கம் எனக்கூறிய அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் பதிலை, அரசுக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் பத்திரிகையாளரான லூசியன் ராஜ கருணநாயக்கவும் ஆதரித்துள்ளமை கவனிக்கத்தக்கது. செய்தி ஊடகங்களின் போக்கினைக் கடுமையாக எதிர்க்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளும், தற்போது ஆரம்பமாகி விட்டதையும் உணரமுடிகின்றது. மீண்டும் செய்தித்தணிக்கை முறையை அமுல் செய்யும் யோசனையும் படைஅதிகாரிகள் கருத்துக்களை, செய்திகளை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையும் இதற்கு உதாரணங்களாகும். இவ்வாறெல்லாம் செய்வதிலும் பார்க்க, செய்தி ஊடகங்களை தம்வழிக்குத் திருப்பிக்கொள்ள தமக்கு இசைவானவர்களை அவற்றுக்குப் பொறுப்பதிகாரிகளாக நியமிப்பது இலகுவானதென அரசங்கம் கருதுவதும் தெளிவாகியிருக்கிறது. இதன் முதற்கட்டமாக, ரூபவாகினி பணிப்பாளர் பதவியிலிருந்து திரு வசந்தராஜா திட்டமிட்டு அகற்றப்பட்டதும் நடந்துள்ளது. ஒட்டு மொத்த நோக்கில், அரசாங்கத்தின் எந்தநடவடிக்கைகளும் தென்னிலங்கைச் செய்தி ஊடகங்களின் பலமான விமர்சனத்திற்கு உள்ளாகும் என்பது இன்று நிச்சயமாகியுள்ளது.

# அலரிமாளிகை வளவுக்குள் முடங்கிய சந்திரிகா

ஜனாதிபதி சந்திரிகாவை பொதுமேடைகளில் கண்டுபல நாட்களாயிற்று. முன்னர் தாமதமாகவாவது வந்துசேருவார். இப்போது வராமலேயே விட்டு விட்டார். இது தென்னிலங்கைப் பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவரும் விமர்சனமாகிவிட்டது.

ஜனாதிபதி என்ன செய்கிறார்! அலரிமாளிகையை விட்டு அடிக்கடி செல்லும் அவரது கார், இப்போது ஒதுக்கப்பட்ட நிகழ்வுகளுக்கு மாத்திரமே செல்கின்றது. ஜனாதிபதி செயலகமும் இன்று சோபையிழந்து போய்விட்டது.

முன்னர் அடிக்கடி நிகழ்வுகள் நடைபெறும் இந்த கட்டடத் தொகுதியில், இன்று மிகமுக்கியமான நிகழ்வுகள் மாத்திரமே நடைபெறுகின்றன. இங்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் மட்டும் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்கின்றார்.

வேறுவிடயங்கள் எவை தொடர்பாகவும் ஜனாதிபதியைச் சந்திக்க முற்படுபவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் அனுமதியைப்பெற்ற பின்னர் அலரி-மாளிகைக்கு அழைத்து வரப்படுகின்றனர். அங்குவைத்தே சந்திப்புக்கள் நடை-பெறுகின்றன.

இவ்வாறு அலரிமாளிகைக்குச் செல்பவர்கள் மிகக்கடுமையான மூன்று கட்ட சோதனைகளுக்குப் பின்பே, உள் நுழைய அனுமதிக்கப்படுகின்றார்கள். அலரி மாளிகையின் வாசலில் பொலீசார் முதற்கட்ட சோதனைக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். இரண்டாவது கட்டத்தில் விசேட அதிரடிப்படை கொமாண்டோக்களும், மூன்றாம் கட்டத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு இரண்டு வாயில்கள் உள்ளன. ஒன்று காலி வீதியில் அமைந்துள்ள பிரதான வாயில். மற்றையது ஹோட்டல் கலதாரியின் பின்பக்கத்தில் ஆரம்பமாகும் டுப்பிளிகேசன் வீதியில் அமைந்துள்ள வாயிலாகும்.

ஜனாதிபதி வெளியே புறப்பட ஆயத்தமானதும் இரண்டுவாயில்களும் அவர் வெளியேறுவதற்கு தயாராக்கப்படும். ஆனால் இறுதிமுடிவை ஜனாதிபதியின் போக்குவரத்துக்குப் பொறுப்பான சிரேஸ்ட அதிகாரி தீர்மானிக்கின்றார். ஏன் இவ்வளவு ஏற்பாடுகள்! என அவதானிகள் வினா எழுப்புகின்றனர். ஜனாதிபதி போவது வருவதுகூட வழமைக்கு மாறான வழிகளிலிருக்க வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அலுவல்களை அவரது செயலாளர் குசும் சிறி பலபத்தபென்டியே கவனிக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகர்களும், நண்பர்களும் எந்த வேளையிலும் அலரிமாளிகைக்குள் செல்லலாம் எனக் கூறப்படுகின்றது. இவர்களுள் ஜனாதிபதியின் தனிப்பட்ட பொதுசனத் தொடர்பு ஆலோசகர் சனத் குணதிலகா, பத்மா மகாராஜா, விக்ரர் ஐவன், ஜயதேவா உயங்கொட ஆகியோர் ஜனாதிபதியைச் சந்திக்க தடை விதிக்கப்படுவதில்லை.

ஜனாதிபதியின் தாயாரும் பிரதம மந்திரியுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அதே அலரி மாளிகையிலேயே வசித்து வருகின்றார். சிறிமா பண்டாரநாயக்காவையும் சந்திக்க வருபவர்கள், குறிப்பிட்ட நேரங்களில் மாத்திரமே வரவேண்டுமென ஜனாதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பாளர்கள் பணித்துள்ளனர். அலரிமாளிகை, பிரதம மந்திரியினது உத்தியோக பூர்வ வாசல்தலமே என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சந்திரிகாவின் இந்த முடக்கம் அரசியல் வட்டாரங்களில் பெரும் வியப்பைத் தோற்றுவித்துள்ளது. அவரது பாதுகாப்பைக் காரணங்காட்டி ஏற்படுத்தப்பட்ட இந்த நடைமுறை விரைவில் அவருக்கும் மக்களுக்குமான தொடர்பை இப்போதுள்ளதைவிட இன்னமும் அதிக இடைவெளிக்கே இட்டுச்செல்லுமென்றே அவதானிகள் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் கோரிக்கையை ஏற்கமுடியாது

## பி.பி.சிக்கு கதிர்காமர் பேட்டி

பூநகரி முகாம் பற்றி, ஆயுதப் போராளிகள் கிழக்கில் நடமாடுவது போன்ற நிபந்தனைகளை அரசு ஏற்கமாட்டாது என வெளியுறவு அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் பிபிசி தமிழோசைக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டார்.

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் பிபிசி தமிழோசைக்கு வழங்கிய செவ்யின் விபரம்:

கேள்வி:-பகைமை நிறுத்தம் மீறப்பட்டு ஒன்றரை மாதங்களுக்கு மேலாகிவிட்டது. அரசு பொருண்மியத் தடைநீக்கம் என்று அறிவித்தும்கூட பொருள்கள் வடக்கிற்குச் செல்லவில்லை என வடபுல மக்களும் புலிகளும் குற்றம் சாட்டுகின்றனர். இக்குற்றச்சாட்டுகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்!

பதில்:-பொருட்கள் சென்று கொண்டிருந்தன. ஆனால் சில நிர்வாகச் சிக்கல்கள் இருந்தன. இவை சுட்டிக்காட்டப்பட்டன. இவை குறித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் எழுந்த பல பிரச்சினைகள் காரணமாக முடிவு எடுக்கப்பட்டதற்கும் அவை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் ஓர் இடைவெளி இருந்தது. ஆனால் இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிர்வாகத் திறமை தேவை. இதற்குச் சில காலம் எடுக்கும். பொருட்கள் நிச்சயம் சென்றன என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவல். விரும்பிய அளவுக்கு பெருந்தொகையான பொருட்கள் செல்லாமல் இருந்த காலம் உண்டு. ஆனால் அதுவேறு விசயம். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஏற்பாடுகள் செயற்படுவதற்கு கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

இவை நிர்வாகப் பிரச்சினைகள். இவை சுலபமாகப் பேசித் தீர்க்கப்பட்டிருக்கலாம். பேச்சுவார்த்தை தொடர்ந்திருந்தால் இவை பற்றி பேசியிருக்கலாம்.

கேள்வி:-விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச நீங்கள் தயாரா!

பதில்:-பகைமை நிறுத்தத்தின் போது கட்டியெழுப்பட்ட நம்பிக்கை சிறிதளவு நம்பிக்கையாக இருந்தாலும்கூட முற்றாகத் தகர்க்கப்பட்டு விட்டதால் அண்மைக் காலகட்டத்தில் புலிகளுடன் பேசுவதென்பது மிகக் கடினமாக இருக்கும்.

எனவே முன்னைய தடவைபோல பூநகரி முகாம் பற்றியும் ஆயுதம் தாங்கிய போராளிகள் சுதந்திரமாக நடமாடுவது பற்றியும் நிபந்தனைகள் போட்டதுபோல புலிகள் இம்முறையும் நிபந்தனைகள் போட்டால் பேச்சுவார்த்தைகளை தொடங்குவது என்பதே இயலாத காரியமாக இருக்கும். ஆனால் முற்றாக நிபந்தனைகள் அற்ற அடிப்படையில் பேச்சுவார்த்தை கள் ஒரு தலைப்பட்சமான முறையில் மீண்டும் குழப்பப்பட மாட்டாது என்ற உறுதிகள், பாதுகாப்புக்களுடன் பேச்சுவா ர்த்தைகள் தொடங்கக் கூடியதோர் நிலைமை உருவாக்கப்பட்டால் முன்னேறக்கூடிய வழி இருக்கக்கூடும்.



கேள்வி:-விடுதலைப் புலிகளின் நான்கு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா!

பதில்:-பூநகரி முகாம் பற்றியோ ஆயுதப் போராளிகள் நடமாடுவது பற்றியோ நாங்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அடுத்த கோரிக்கையான மீன்பிடித் தொழில் குறித்து கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டதாக அவர்களே கூறினார்கள்.

கேள்வி:-புலிகளுடன் போரிட வெளிநாடுகளின் உதவிகளை நாடியிருக்கிறீர்கள். இராணுவம் புலிகளுடன் போரிட்டு வெல்ல முடியாது என்று அர்த்தமா!

பதில்:-இல்லை. நாங்கள் கேட்ட வெளிநாட்டு உதவி இராணுவத்துக்குத் தேவையான பொருட்களும் ஆயுதங்களும் போன்றவை. புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்குவது போலவே நாங்களும் வாங்க எமக்கு உரிமை உண்டுதானே.

கேள்வி:-உதவி வேண்டி நீங்கள் வெளிநாடுகளுக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான பதில் கிடைத்ததா!

பதில்:-உதவி என்பது பரவலான பொருள்படும் ஒரு சொல். வெளிநாட்டுத் தலையீடு பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்றால் ஆயுதங்கள் வாங்குவது பற்றி உதவி கோரினோம். பல அரசுகள் உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ளன.

கேள்வி:-அரசு ஏனைய தமிழ்க்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. அமைச்சர் அவர்களே, புலிகள் பங்கு கொள்ளாமல் அரசியல் தீர்வு என்று ஒன்று ஏற்படும் என்று நீங்கள் கருதுகிறீர்களா!

பதில்:-இல்லை. புலிகள் வடக்கில் பலபகுதிகளை தன்வசம் வைத்திருக்கிறது என்பதாலும் தரையில் அவர்கள் ஒரு வலுவான சக்தியாக இருப்பதாலும் புலிகள் கலந்து கொள்வது முக்கியம் என நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் முன்வராவிட்டால் என்ன செய்ய முடியும். அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடங்கியிருக்கலாம். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு ஆண்டு காலம் கூட நடந்திருக்கலாம். ஆனால் பேச்சுவார்த்தையின் மூலமாகத் தீர்வுகாண அவர்கள் அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க திட்டவட்டமாக மறுத்துவிட்டனர்.

கேள்வி:-
பேச்சுவார்த்தைகளுக்காக நீங்கள் அனுப்பிய குழுக்களின் அதிகாரிகள் மட்டுமே இருந்ததாகவும் முக்கிய அரசியல்வாதிகள் எவரும் இருக்கவில்லை எனப் புலிகள் கூறியிருக்கிறார்களே!

பதில்:-அது புனர்வாழ்வு மறுசீரமைப்புகள் குறித்த பேச்சுவார்த்தைகளுக்காக. அதற்கு அரசியல்வாதிகள் தேவையில்லை. சென்ற அதிகாரிகள் இந்த நோக்கத்திற்கு போதும். நாங்கள் அவர்களுக்குச் சொன்னது என்னவென்றால் நாளைக்குறியுங்கள், நாங்கள் நாட்களைக் கொடுத்தோம். நாங்கள் தயார் செய்து கொண்டிருந்த அமைதித் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதற்காக அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கான நாள்கள் சிலவற்றைக் கொடுத்தோம். அமைதித் திட்டத்தை முன்னதாகவே அவர்களுக்கு அனுப்பவும் முன்வந்தோம். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

## சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு தமிழ்க் குழுக்கள் பூரண ஆதரவு

சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தமிழ்க்கட்சிகள் உறுதியளித்துள்ளன.

இனப்பிரச்சினை குறித்துப் பேசுவதற்காக விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஐந்து தமிழ்க் குழுக்கள் அண்மையிற் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இதன்போதே மேற்கண்ட உறுதிமொழியை அவர்கள் வழங்கியிருந்தனர்.

அரசுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளிற் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்பதாகத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்திப்பே இதுவாகும்.

அரசு பதவி ஏற்றபின் விடுதலைப் புலிகள் தவிர ஏனைய தமிழ்க்கட்சிகளைச் சந்திப்பது இதுவே முதற் தடவையாகும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டைத் தாங்கள் பாராட்டுவதாக ஈபிடிபி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசின் அரசியல் யோசனைகளின் சுருக்கம் தமிழ் அரசியற் கட்சித்தலைவர்களிடம் கையளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அதிகாரப்பரவலாக்கல் குறித்து அரசு முக்கிய அக்கறை கொண்டுள்ளது. சகல அரசியற் கட்சிகளின் உதவியுடன் கருத்தொருமையுடன் கூடிய தீர்வொன்றை அரசு வகுக்கும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜிஎல்பீரிஸ் தெரிவித்தார். இது ஒரு மாதத்திற்குள் அரசியற் கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளினால் அப்பாவித் தமிழ்மக்கள் பாதிக்கப்படக் கூடாது எனத் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

இது சிறுபான்மை இனமக்கள் மத்தியிற் புதிய பிரச்சினைக்கு வழிகோலும் என்று தெரிவித்தனர். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக தாம் அரசின் மீது பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## பத்மா மகாராசாவுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு

சனாதிபதி சந்திரிகாவின் நெருங்கிய நண்பியும் அவரின் உபசரணை உதவியாளருமான திருமதி பத்மா மகாராசாவிற்கும் விசேட அதிரடிப்படை மெய்க்காவல் வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கான பாதுகாவலர் குழுவில் 25 அதிரடிப்படைப் பொலிசார் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அனைத்துலக நாடுகளின் பேச்சுவார்த்தைக்கான அழுத்தத்தை குறைக்கவே 'நாடு கடத்தல்' கோரிக்கை

இந்திய அரசு திடீரென நான்கு ஆண்டு காலத்தின் பின் அதுவும் நீதிமன்ற விசாரணைகள் எதுவும் முடிவுறாத நிலையில் திடீரென 'நாடுகடத்தல்' விவகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமை அனைத்துலக அவதானிகள் இடையில் பலத்த சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னால் பேச்சுவார்த்தைக்கு போகமுடியாது என அனைத்துலக நாடுகளின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு பக்கதுணையாகவே இந்த திருவிளையாடலை இந்தியா தொடங்கியுள்ளது என அவதானிகள் கூறியுள்ளனர். இது ஒரு அப்பட்டமான உள்நாட்டு தலையீடு எனவும் 'இறைமை மீறல்' எனவும் அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

அத்துடன் சிறிலங்கா-இந்தியா இணையாக தமிழீழத் தேச மக்கள்மேல் ஆயுத ஒடுக்கு முறைகளை பிரயோகிப்பதற்கு முன்னோடியான நியாயப்படுத்தல் முயற்சியாகவே இதனை அவதானிகள் கருதுகின்றனர்.

அனைத்துலக சட்டங்களின்படி இது வழமைக்கு மாறான செயல் எனக்கூறும் சட்ட அறிஞர்கள் ஐக்கியநாடுகள் சபை தமிழீழத் தேசமக்கள் மீது சிறிலங்கா-இந்தியா கூட்டாக திட்டமிடும் ஆயுத ஆக்கிரமிப்புடனான இன அழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டிய நேரம் இது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்திய கப்பல்களைப் பயன்படுத்தி அனைத்துலக கடல் எல்லையில் சிறிலங்கா கடற்படை தமிழீழ கடற்பரப்பு மேலான போக்குவரத்து தடை ஒன்றை மேற்கொள்ள இந்தியா அனுமதியளித்து உள்ளதாகவும் அதேவேளை விமான உதவிகளை வழங்கவும் இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும் 'கரோல்ட் ரியியூன்' செய்தித்தாள் 'நியூயோர்க் ரைம்ஸ்'ஐ ஆதாரம்காட்டி ஆனி 20ல் செய்தி ஒன்றை பிரசுரித்துள்ளது.

இது குறித்து விமர்சித்துள்ள இந்தியச் செய்தித்தாள்கள் "தேர்தல் நெருங்கி வரும் வேளையில் தோல்விநிலைக்கு தள்ளப்பட்டு கொண்டிருக்கும் நரசிம்மராவின் மக்களை திசைதிருப்பும் தந்திரமே இந்த "நாடு கடத்தல்" விவகாரமெனவும் இதனால் நடைமுறையில் எதுவும் உருப்படியாக நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை" எனவும் தெரிவித்துள்ளன.

## நான்கு முகாம்களை விட்டு இராணுவம் வெளியேறியது

மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கி முதல் 40 நாட்களில் கிழக்கு மாகாணத்தில் நான்கு இராணுவ முகாம்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் நிகழலாம் என்ற அச்சத்தினாலேயே படையினர் முகாம்களை கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் 'ராவய' சிங்கள வார இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தமிழீழ
செய்திச் சேவைகள்
0181 - 503 4305 (தமிழில் 3 இணைப்புக்கள்)
0181 - 503 4307 (Tamil Eelam news in ENGLISH
50 இணைப்புக்களுடனான விசேட
தமிழ் தொலை பேசிச் செய்திச் சேவை
0891 - 919 310
49 p/min Peak time, 39 p/min all other time
UTO, 211 Katherine Road, E6 1BU (0181 - 503 4294)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழப் போராட்டம் சிந்திய

# இரத்தக் கனிகள்


**போ**ராட்டத்தில் ஏற்படும் வெற்றிகளுக்கும், சாதனைகட்கும் பின்னர் ஒரு இரத்த காவியம் நிலவிக் கொண்டே இருக்கிறது. இளமையான இனிமையான வாழ்க்கைப் பருவத்தையுடைய எம் தோழர்கள், தோழிகள் ஒவ்வொருவரினதும், தீரங்களும், தற்கொடைகளுமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வோர் உறுதியான படிக்கற்களாகும். இன்றுள்ள போராட்டத்தின் அதியுன்னத வளர்ச்சிப் பணியில் நின்று நாம் ஏறிவந்த கடினமான, கரடுமுரடான பாதையைத் திரும்பிப்பார்க்கும்போது எம்முடன் ஒன்றாகவந்த பல உயிர்களைக் காணவில்லை. எம்முயிரிலும் இனிய மக்கள், எம் உயிரான எம் தோழர்கள், தோழிகள் என்று நிறைய உயிர்களை இழந்து விட்டோம். இவர்களை நாம் ஆழ்ந்து தேடும் போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் உயிரின் ஒளியாகிய தமிழீழ இலட்சியத் தீபத்தில் அவர்களைப் பார்க்கிறோம். எம்முயிர்த் தோழர்களையும், தோழிகளையும் நாம் நிச்சயமாகச் சென்றடைவோம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அப்போது நாம், **'எம்மக்கள் விடுதலையடைந்து விட்டார்கள்'** என மனரீதியாக, ஆத்மரீதியாக உணர்ந்திருப்போம்.

***கடந்த 19-04-95ல் மூன்றாம் ஈழப்போர் தொடங்கியதிலிருந்து இருந்து வீரச்சாவடைந்த எம் தோழர்களுக்கும், தோழிகளுக்கும் — சிரம்தாழ்த்தி —***

| நாள் | | இயக்கப் பெயர் | இயற் பெயர் | சொந்த இடம் | வீரச்சாவடைந்த சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|
| 27 — 05 — 95 | லெப்.கேணல் | வினோதன் (விசாலகன் சிறப்புப் படையணிச் | தம்பிப்பிள்ளை புஸ்பநாதன் | மட்டுநகர் | தரவைக்குள முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார். |
| 27 — 05 — 95 | கப்டன் | ராஜபாலன் குகதீஸ் | பொன்னம்பலம் பாபு | அம்பாறை | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார். |
| 27 — 05 — 95 | லெப்டினன் | அனுதிரன் | தம்பிஜயா வாமதேவன் | அம்பாறை | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார். |
| 27 — 05 — 95 | லெப்டினன் | திலகராசா | பாக்கியராசா புலேந்திரன் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார். |
| 27 — 05 — 95 | லெப்டினன் | சத்தியராஜ் | | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | சுயரூபன் | சின்னத்தம்பி சிவலிங்கம் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | நந்தகோபால் | கிருஸ்ணபிள்ளை விஸ்னுவர்த்தன் | அம்பாறை | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | சஞ்சீவி | வேலுச்சாமி ஜெயரூபன் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | கலாநிதி | அழகையா ரவீந்திரன் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | ஈழக்குமரன் | தங்கராசா சின்னராசா | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | தர்மமாறன் | நாகாந்தகோடி கோவேந்திரன் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | விஜிதரன் | கிஸ்ணபிள்ளை பேரானலிங்கம் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | சத்தியவான் | வீரையா சிவகுமார் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | உபையதரன் | சாமித்தம்பி வீரக்குட்டி | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | வன்மோகன் | கதிர்காமக்கோடி பகீர்தரன் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 — 05 — 95 | 2ஆம் லெப்டினன் | சிவானந்தன் | செல்லையா தேவராசா | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 – 05 – 95 | வீரவேங்கை | அரசுராஜ் | மோகவஸ்திரம் ரஜனிகாந் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 – 05 – 95 | வீரவேங்கை | கலைமோகன் | முத்துத்தம்பி செல்வரெத்தினம் | மட்டக்களப்பு | தரவைக்குள முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார் |
| 27 – 05 – 95 | கப்டன் | பிரதீபன் | ரகுபதி முரசொலிமாறன் | மட்டக்களப்பு | மட்டக்களப்புக் காட்டுப்பகுதியில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 29 – 05 – 95 | 2ஆம் லெப்டினன் | இளங்குமரன் | ரத்தினம் | யாழ்ப்பாணம் | சுகயீனம் காரணமாக வீரச் சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | கப்டன் | கமல் | பாலசுப்பிரமணியம் சிவகுமார் | வவுனியா | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | கப்டன் | சிவம் | ஏகாவலன் திவாகரன் | மாங்குளம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | க்ப்டன் | அறிவொளி | சந்திரமோகன் சத்தியவான் | திருமலை | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | லெப்டினன் | மனோகரன் | குழந்தவேல் பத்மநாதன் | மட்டக்களப்பு | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | லெப்டினன் | கலையரசன் | இரராசலிங்கம் ஞானலிங்கம் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | 2ஆம் லெப்டினன் | குவேந்திரன் | குலசேகரம்பிள்ளை சிவசேகரன் | கிளிநொச்சி | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | 2ஆம் லெப்டினன் | சேரன் | சிவானந்தன் இந்திரன் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | 2ஆம் லெப்டினன் | குசேலன் | கணேசமூர்த்தி குமாரசிங்கம் | திருமலை | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | வீரவேங்கை | கம்பன் | இராசநாயகம் பிரான்சிஸ் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | வீரவேங்கை | நீலகண்டன் | கந்தசாமி அமுதன் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | வீரவேங்கை | செந்தமிழன் | சபாவதி உதையகரன் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |
| 02 – 06 – 95 | வீரவேங்கை | காங்கேயன் | சிங்கராசா அஜமோகன் | யாழ்ப்பாணம் | திரியாய் காட்டுப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனடா ரொறன்ரோவில்...

இவ்வூர்வலத்திற்காக நகர மைய த்திலுள்ள முக்கிய வீதிகள் தடை செய்யப்பட்டிருந்தது. ரொறொ ன்ரோவின் முக்கியமான செய்தித் தாள்கள், வானொலிகள், தொலைக் காட்சி நிறுவனங்கள் இவ்வூர்வல த்திற்கு வருகை தந்ததுடன், செய்தியாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் முன் பறையொலி எழுப்பிச் செல்ல, தமிழீழத் தேசியத் தலைவரின் 500 க்கும் மேற்பட்ட நிழற் படங்களையும், தமிழீழத்தின் இன்றைய நிலையைச் சித்த ரிக்கும் 6 பெரிய-சிறிய ரக ஊர்திகளும், 3000 திற்கும் மேற்ப ட்ட சுலோக அட்டைகள்-பதாகை தகள், தமிழீழத்தின் இன்றைய நிலையைச் சித்தரிக்கும் 200 க்கும் மேற்பட்ட நகைச்சுவைச் சித்திரங்களும் (Cartoons) 6500 க்கும் மேற்பட்ட சிறியதும், பெரியதுமான தமிழீழத் தேசியக் கொடிகளும், 1500 க்கும் மேற்ப ட்ட கனேடியக் கொடிகளும் இவ்வூர்வலத்தில் மக்களால் தாங கிச் செல்லப்பட்டன. 1000 க்கும் மேற்பட்டோர் விடுதலைப் புலிகள் சின்னம் பொறிக்கப்பட்ட மேல் உடுப்புக்களையும் தொப்பிக ளையும் அணிந்து சென்றனர்.

இவ்வூர்வலத்திற்காக காலை 10.00 மணிமுதல் மாலை 3.00மணிவரை ரொறான்ரோ மாநகரில் உள்ள 200 க்கும் மேற்பட்ட தமிழ் வர்த்த கர்கள் தமது வர்த்தக நிலைய ங்களை மூடி ஆதரவைத் தெரிவித்த துடன், ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களுக்குக் குளிர்பா னம் வழங்கி தாக சாந்தியும் செய்து உதவினர்.

இவ்வூர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒன்ராரியோ மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கனேடியப் பாராளு மன்ற உறுப்பினர்கள், கனேடிய சட்டத்தரணிகள் உரையாற்றியது டன் தமிழீழத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ மக்களின் நீதியான போராட்ட த்தையும் கனடா அங்கீகரிக்க வேண்டும் எனவும் சில பேச்சா ளர்கள் குறிப்பிட்டனர். இதில் கலந்து கொண்ட முக்கிய அரசியல் பிரமுகரிடம் மகஜர்கள் கையளி க்கப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களிடம் கனேடியப் பிரதமரு க்கு தமிழீழ அரச நோக்கிய அரசை அங்கீகரிக்குமாறு கோரும் அஞ்சலட்டைகள் வழங்கப்பட்டு அவற்றைக் கனேடிய அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வூர்வலத்தைப் பற்றி கனடா வில் உள்ள 'குளோபல்' (Global) தொலைக்காட்சி நிலையம் தனது அன்றைய மாலைச் செய்தியில், ரொறொன்ரோவில் வரலாறு காணாத ஊர்வலமாக இவ்வூர்வ லத்தை வர்ணித்துள்ளது.

நகரத் தொலைக்காட்சி (City TV) யின் கணிப்பின்படி 25,000 மக்கள் கலந்து கொண்டதாக தனது 17.06.95 இரவு 9.00 மணிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

# மட்டக்களப்பில் பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பிற் சிறிலங்கா இரா ணுவத்தினரால் நான்கு பொது மக்கள் சுட்டுக் கொல்லப்ப ட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட இருவரைத் தாம் கைது செய்யவில்லை எனக் தெரிவித்துள்ளனர்.

மகிழடித் தீவில் இம் மாதம் 3ஆம் நாள் விசேட அதிரடிப் படையினர் பொதுமகன் ஒரு-வரைக் கைது செய்து பின்னர் சுட்டுக் கொன்றனர். மகிழடித் தீவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பொசிறி (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்ட வராவார்.

இதேதினம் ஏறாவூர் பொலிஸ் காவலரண் மீது புலிகள் தாக்கிய பின்னர் அப்பகுதிக்கு வந்த பொலிசாரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மகே ந்திரன் (வயது 29) என்ற இளைஞரையே பொலிசார் சுட்டுக் கொன்றனர்.

இதேவேளை கடந்த மாதம் 29ஆம் நாள் காஞ்சிரங்குடா விலும் தெய்வாமுனையிலும் இர ண்டு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். ந. குஞ்சப்பிள்ளை (வயது 17), பாலப்போடி மணி (வயது 25) ஆகிய இருவ ரையுமே இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இவர்கள் இருவரும் கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை கடந்த மாதம் 23ஆம் நாள் 40ஆம் கிராம த்தை சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் இரண்டு பொதுமக்களைப் பிடித்துச் சென் றுள்ளனர்.

வதேவதாஸ் (வயது 23), க. தம்பி ரெட்ணம் (வயது 21) ஆகியோ ரையே இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர். இவர்களது நிலை பற்றி அறிய முகாமுக்குச் சென்ற உறவினர்களுக்கு இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் கைவிரித்து விட்டனர்.

### காயங்கேணியில் இராணுவத்தின் கொடூரச் செயல்

காயங்கேணி என்னுமிடத்தில் விறகு வெட்டச் சென்ற பொதுமகன் ஒருவரைச் சிறிலங்கா இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி எரித்துள்ளனர்.

இம் மாதம் 8ஆம் நாள் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயங்கேணியைச் சேர்ந்து இப்பொதுமகன் விறகு வெட்டச் சென்ற போது இராணுவத்தால் பிடிக்கப்பட்டுத் துண்டு துண்டாக வெட்டப்பட்டார். அதன் பின்னர் உழவு இயந்திரத்தில் போட்டு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளார். கொல்லப்பட்ட பொது மகனின் பெயர் விபரங்கள் அறியப்படவில்லை.

# திரியாய் காட்டில்...

லெப்கேணல் தர அதிகாரி ஒருவரும், கப்டன் தர அதிகாரி ஒருவரும் உட்பட 17க்கும் மேற்பட்ட சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இதன் பின்னர் இரண்டு தினங்கள் கழித்து மீண்டும் கடும் மோதல் மூண்டது. காலை 7 மணியளவில் தொடங்கிய இம்மோதலானது மாலை 6 மணி வரையும் நீடித்தது.

இம்மோதல் குறித்து செய்தி வெளியிட்ட சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் கடந்த ஒன்றரை மாதகாலத்திற்குள் நடந்த உக்கிரமான மோதல் இதுவென்த் தெரிவித்தது.

இம் மோதலின்போது சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஐந்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதோடு 15 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதேசமயம் விடுதலைப் புலிகள் தரப்பில் 12 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

# சுவிசில் அன்னை பூபதியின்

# ஏழாவது ஞாபகார்த்த எழுச்சிவிழா

சுவிசில் 'வோ' மாநிலத்தில் அன்னை பூபதியின் 7 ஆவது ஞாபகார்த்த எழுச்சிவிழா 05.06.95 இல்



தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்டது.




குறித்த நேரத்திற்கு (4.00 மணிக்கு) தொடங்கிய இவ்விழாவில் பல நூற்றுக்கணக்கான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர்.

ஈகைச்சுடரேற்றல், அமைதி வணக்கத்துடன் தொட ங்கிய இவ்விழாவானது வரவேற்புரை, கவிதை, பேச்சுக்கள், எழுச்சி நடனங்கள், பரிசளிப்பு என இடைவேளை வரை தொடர்ந்தது. இடை வேளையைத் தொடர்ந்து புத்தக வெளியீடு கவியரங்கங்கள், சிறப்புரை, நாடகங்கள், நன்றியுரை எனப் பல நிகழ்ச்சிகள் நடந்தன. இவ்விழாவின் நிகழ்ச்சிகளை 'வோ' மாநில ஈழத்தமிழ்க் கலைஞர்கள் ஒருங்கிணைந்து வழங்கியிருந்தார்கள். குறிப்பாக நடனங்கள், கவியரங்கங்கள், நாடகங்கள் மக்களை மிகவும் கவர்ந்திருந்தன.

நடன நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தியிருந்த வளர்ந்து வரும் இரு இளம் ஆசிரியைகளும் பாராட்டப்பட வேண்டியவர்களே. காலத்திற்கேற்ப புரட்சிப் பாடல் களை தேர்வு செய்திருப்பதும், அதற்கேற்ப நடன அசைவுகளை நெறிப்படுத்தி அதை மாணவிகள் சிறப்பாக செய்திருப்பதும், பாராட்டுதலுக்குரியது மட்டுமன்றி, இவர்களை பொது மக்களும், பெற்றோரும் இத்துறை சார்ந்தோரும் அவர்களை ஊக்குவித்து ஆதரவளிப்பதும் எல்லோரது கடமை யுமாகும்.

"என்று தணியும் எங்கள் அந்நிய மோகம்" என்ற தலைப்பின்கீழ் சிறுமியர்களால் நடாத்தப்பட்ட கவியரங்கமானது, அந்நிய தேசத்தில் அகதிகளாய் வரும் எம்மில் சிலர் எம் தேசத்தை, தாய் மொழியை, கலை கலாச்சார பண்பாட்டை விட்டு தூர விலகி அந்நிய மோகத்திற்குள் தம்மை ஐக்கியப்படுத்தியவர்களையும், அதனுள் புகமுற்படு வோரிற்கும் ஓர் எச்சரிக்கையாகவே ஓங்கி ஒலித்தது. இதைத் தொடர்ந்து 'கலையார்'வனினால் எழுதப்பட்ட 'அவலத்தின் ராகங்கள்' என்ற கவிதைத் தொகுப்பு ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இன்னுமோர் கவியரங்கு 'நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்' என்ற தலைப்பின்கீழ் அமைந்தது. கவித்தலைவராக ந. முரளிதரன் அவர்கள் கடமையாற்ற கவிபாட வந்த நால்வரும் நற்கவி பாடினர். கடைசியாக வந்த கவிஞர், 'பிறந்துவிட்ட தமிழீழத்திற்கு எதற்கையா இத்தலைப்பு' என்று தொடங்கி கவி பாடி முடித்து அமர, அவைத் தலைவரோ தன் பாணியில் விடை கொடுத்தார். ஐ. நா சபையில் என்று எம் தேசியக் கொடி பறக்குதோ, அன்று தான் எமக்கு தமிழீழம் தம்பி! அதுவரை ஓயாது பங்களித்திடுவீர் என்று பார்வையாளரைப் பார்த்துக் கூறி கவியரங்கினை முடித்து வைத்தார்.

இரண்டு நாடகங்களும் மற்றைய நிகழ்ச்சிகளிற்கு ஈடுகொடுத்தே நெறிப்படுத்தப்பட்டிருந்தன. 'பிரளயம்' என்ற அரசியல் நாடகம், கடந்த பேச்சுவார்த்தையில் அரசிற்கு துணைபோன தமிழ்க்குழுக்களின் திரை மறைவு அரசியல் துரோகத்தனங்களை நகைச்சுவை யாக வெளிக்கொணர்ந்தது. மற்றைய நாடகமான 'மாயமான் துதும்' அரசி-யலை மையமாக வைத்து, எமது பாரம்பரிய நாட்டுக்கூத்துக்களில் ஒன்றான 'காத்தவராயன்' பாணியில் அமைந்திருந்தது. சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் ஆற்றினார். அன்னை பூபதி ஞாபகார்த்த பேச்சுப் போட்டியில் முதலிடங்களைப் பெற்றவர்களின் பேச்சுக்களும், பேச்சுப்போட்டியில் பங்கேற்ற அனைவரிற்கும் சான்றிதழ்களும் முதல் மூன்று இடங்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. சுவிஸ் சைவத் தமிழ்ச்சங்கத்தினால் நடாத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்தோர், பங்குபற்றியோருக்குமான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. காலஞ்சென்ற லவுசாண் விடுதலைப் புலிகள் உறுப்பினர் வரன் ஞாபகார்த்தமாகவும் கவிதை ஒன்று வாசிக்கப்பட்டது. 5 மணித்தியாலங்களாக இடம்பெற்ற இந்நிகழ்ச்சியானது நன்றியுரையுடன் முடிவுற்றது.

www.tamilarangam.net



# நீதிமன்றுகள் உருவாக்கம்

தமிழீழத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி நீதி விரைவாகவும், எளிதாகவும் கிடைக்கக்கூடிய வகையில் எமது தேசியத் தலைவர் அவர்களால் "குற்றம் செய்யாதவன் தண்டனைக்குள்ளாக்கப்படக் கூடாது, குற்றம் செய்தவன் தண்டிக்கப்படல் வேண்டும்" என்ற அனைத்துலகக் கோட்பாட்டிற்கு அமைவாக தமிழீழ நீதிமன்றுக்களும், இம்மன்றுக்களின் தீர்ப்பில் திருப்தியடையாத வழக்கின் கட்சிக்காரர்கள் மேன்முறையீடு செய்வதற்கு ஏற்றவகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடக்கி வைக்கப்பட்டது.

## இவைகள் தொடக்கி வைக்கப்பட்ட காலம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| அ | சுன்னாக மாவட்ட நீதிமன்று | 21. 08. 1993 |
| ஆ | சாவகச்சேரி மாவட்ட நீதிமன்று | 28. 08. 1993 |
| இ | பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று | 09. 09. 1993 |
| ஈ | யாழ் மாவட்ட நீதிமன்று | 23. 10. 1993 |
| உ | கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று | 05. 01. 1994 |
| ஊ | முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று | 10. 01. 1994 |
| எ | மேன்முறையீட்டு நீதிமன்று (யாழ் மாவட்டம்) | 19. 03. 1994 |
| ஏ | வவுனியா மாவட்ட நீதிமன்று | 05. 12. 1994 |
| ஐ | மன்னார் மாவட்ட நீதிமன்று | 14. 01. 1995 |

## சட்டங்கள் உருவாக்கம்

1993 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐந்து சட்டநூல்கள் வெளியீடு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 1993ஆம் ஆண்டின் 1ஆம் எண் | தமிழீழ சட்டக்கோவை |
| 1993ஆம் ஆண்டின் 2ஆம் எண் | தமிழீழ சட்டக்கோவையின் திருத்தச் சட்டம் |
| 1993ஆம் ஆண்டின் 3ஆம் எண் | தமிழீழ தேச வழமைச்சட்டம் |
| 1993ஆம் ஆண்டின் 4ஆம் எண் | யாழ் குடாநாட்டில் விறகு வெட்டுவதை ஒழுங்குபடுத்தும் சட்டம் |
| 1993ஆம் ஆண்டின் 5ஆம் எண் | தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டம் |

## 1994ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நான்கு சட்டநூல்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளன

| | |
|---|---|
| 1994ஆம் ஆண்டின் 1ஆம் எண் | திரைப்படங்கள் தணிக்கைச் சட்டம் |
| 1994ஆம் ஆண்டின் 2ஆம் எண் | 1993இல் வெளியான சட்டங்களின் திருத்தச் சட்டம் |
| 1994ஆம் ஆண்டின் 3ஆம் எண் | மேன்முறையீட்டு முறைமன்ற நடவடிக்கைச் சட்டம் |
| 1994ஆம் ஆண்டின் 4ஆம் எண் | தமிழீழ ஒறுப்புச் சட்டம் |

## இவ்வாண்டு மாசி மாதத்தில் 1ஆம் எண் சட்டமாக தமிழீழ உணவுச்சட்டம் வெளியிடப்பட்டது.

## தமிழீழ சட்டக்கல்லூரி (2ஆம் அணி) ஆரம்பம்

தற்போது வழக்குகள் அதிகளவில் தாக்கல் செய்யப்பட்டு வருவதால் நீதியாளர்கள், சட்டவாளர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கு தமிழீழச் சட்டக்கல்லூரி (இரண்டாவது அணி) 03. 07. 1994 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### குடும்ப ஆலோசனை சபை

குடும்ப வழக்குகளை துரிதமாகத் தீர்ப்புக்கள் வழங்குவதற்கும், குடும்பங்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்குமாக குடும்ப ஆலோசகர்கள் அடங்கிய குடும்ப ஆலோசனை சபை கடந்த 22. 10. 1994 இல் உருவாக்கம் செய்யப்பட்டது.

### தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விபரம்

யாழ் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றுக்களில் 5101 வழக்குகளும், வன்னி, மன்னார், முல்லை பிரதேசங்களில் 683 வழக்குகளுமாக மொத்தம் 5784 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் குடியியல் வழக்குகளாக 3334ம், குற்றவியல் வழக்குகளாக 2450ம் தாக்கல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் யாழ் மாவட்டத்தில் 2605 வழக்குகளும், வன்னி, மன்னார், முல்லைப் பிரதேசங்களில் 326 வழக்குகளுமாக மொத்தம் 2931 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இவை தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளில் 51வீதம் ஆகும்.

மேன்முறையீட்டு முறைமன்றில் இதுவரை 95 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இவற்றில் 55 வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## யேர்மனி - பிறேமன் நகரில்
# புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

இம்மாதம் 17-06-95 சனிக்கிழமையன்று யேர்மனி நாட்டின் பிறீமன் நகரில் டரசபநசரனெ ஞுழணயைடணநவெசரஅ ர்ரஉாவனைநெஎ இல் அமைந்த மண்டபத்தில் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளை 'புனர்வாழ்வுக் கலைத்தென்றல்' நிகழ்ச்சியை நடாத்தியது.

தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு உதவுமுகமாக நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சிக்கு மண்டபம் நிறைந்த மக்கள் வருகை தந்திருந்தனர். அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து புனர்வாழ்வுக் கழக பிறீமன் பிரதிநிதி திருமதி மீரா சீவரெத்தினம் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.

பிறீமன், பிறீமலேட் ஆகிய நகர தமிழாலய மாணவரின் கோலாட்டம், செல்வி சுகன்யா சிவசுதனின் பரதநாட்டியம் ஆகிய நடனங்களும், லுஸ்மாஸ்ரர் புகழ் ஐசாக் இன்பராசா அவர்களின் சிறப்புக்கதம்பமும், கலைஞர் தாஸ் அவர்களின் நாட்டு நடப்பும், வில்லிசை ராஜன் அவர்களின் வில்லிசையும் மாறி மாறி மகிழ்வித்தன.

தமிழ் உணர்வோடு தனது கலைத்தொண்டை ஆற்றிவரும் விகடவிற்பனர் ஐசாக் இன்பராசா அவர்கள் யேர்மனியில் மட்டும் நுற்றுக்கும் அதிகமான மேடைகளை அலங்கரித்தவர். மக்களை மகிழ்வித்த சிறந்த கலைஞர். அவரை கௌரவிக்கும் முகமாக புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் மலர்ச்செண்டு கொடுக்க கலை பண்பாட்டுக்கழக யேர்மன் கிளை துணைப்பொறுப்பாளர் கண்ணன் பொன்னாடை போர்த்தினார். அவரைப் பாராட்டி கலை பண்பாட்டுக்கழக யேர்மன் கிளைப் பொறுப்பாளர் உரையாற்றினார்.

இறுதியில் தமிழீழம் இசைக்குழுவின் பாச இசைமழையில் நனைந்து விடுதலைக் கீதங்கள் மக்கள் மனதை நிறைத்தன.

உலகத்தமிழர் இயக்க பிறீமன் பிரதிநிதி திரு. கந்தசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

# செய் அல்லது செத்து மடி

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முக்கியமான கட்டத்திற்கு வந்திருக்கின்றது. இறுதிக்கட்டத்திற்குள் நுழைவதற்காக குறிப்பிடக்கூடிய நிலமையான திருப்ப நிலையை அடைந்துள்ளது. இதுவரை காலமும் இருந்து உறுதியும், அர்ப்பணிப்பும், துணிவும், தளராது இருத்தல் விடுதலை இலக்குகளை அடைவதற்கான சகல சாத்தியமான சூழ்நிலைகளும் தோன்றியுள்ளன. எனவே இதுவரை காலமும் கொடுத்த உயிரிழப்புக்களுக்கும் மற்ற இழப்புக்களுக்கும் வாழ்க்கை நிலை பின்தள்ளப்பட்டமைக்கும் பிரதிப்பலன் கிடைக்க வேண்டுமெனில், விடுதலை கைக்கு வந்துசேர வேண்டுமெனில் இந்த இறுதிக்கட்டத்தில் போராட்டம் முழுவலுவுடனும் முறுக்கிவிடப்படுவது அவசியம். புதிதாக பதவிக்கு வந்த சந்திரிகா, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இரண்டில் ஒரு கை பார்த்துவிடுகிறேன் என்று, பெரும் கணக்கில் போருக்கான ஆயத்தங்களைச் செய்து வருவது எங்கள் எல்லோருக்கும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

**அசுரபலத்துடன் பதிலடி கொடுக்கத் தயாராக வேண்டிய காலம் இது. விடுதலைக்கான உறுதியும், விடுதலைக்கான கட்டத்தில் திருப்புமுனை கண்டபின்னர் சிங்களவர்களிடம் தோற்கும் நிலை தற்செயலாக வருமாயின், அதன்பின்னர் தமிழர்களின் வாழ்க்கை இங்கு அஸ்தமித்துவிடும்.**

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்தால் மட்டுமே சிங்களவர்களுக்கு நாடு உண்டு என்ற நிலையில் பெரும் சமருக்கான தயார்வேலைகள் நடக்கின்றன. இராணுவத்தில் சேர்வதால் ஏற்படக்கூடிய உயிரிழப்பை மறந்து சிங்கள இளைஞர்கள் படைகளில் சேர்கிறார்கள். தற்கொலைப் படைகளை உருவாக்குமாறும் அதில் சேர்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அரசுக்கு அறைகூவல் விடுக்கிறார்கள். வயது வந்த சிங்களவர்கள் எல்லைக்கிராமங்களைக் காப்பதற்கு தமக்கு ஆயுதங்கள் தருமாறு முந்தியடிக்கிறார்கள். சிங்களக் கிராமவாசிகள் கிராமப் பகுதிகளில் ஆயுதங்களுடன் காவற்கடமை செய்கிறார்கள். எட்டுமாதங்களுக்கு, சமாதானம் என்று பறைசாற்றிய சிங்களதேசம், ஒருமுறைப்பட்டு ஒருமித்து தமிழருக்கு எதிராக போருக்கு அணிவகுத்து நிற்கிறது. எனவே தமிழர்களைப் பொறுத்தவகையில் இதுவரைகாலமும் கொடுத்த தைவிட அசுரபலத்துடன் பதிலடி கொடுக்கத் தயாராக வேண்டிய காலம் இது. விடுதலைக்கான உறுதியும், விடுதலைக்கான கட்டத்தில் திருப்புமுனை கண்டபின்னர் சிங்களவர்களிடம் தோற்கும் நிலை தற்செயலாக வருமாயின், அதன்பின்னர் தமிழர்களின் வாழ்க்கை இங்கு அஸ்தமித்துவிடும். கடந்த 40 ஆண்டுகால போராட்டத்திற்குப் பின்னர் முழு அடிமை நிலைக்கு வருவதை எந்த தமிழரும் நினைத்துப் பார்க்க முடியாது. ஆழம் தெரிந்துதான் காலைவிட்டோம். எனவே முன்வைத்த காலைப் பின்வைப்பதற்கு எந்த மானமுள்ள தமிழனும் மனம் ஒப்பமாட்டான் என்பது நிச்சயம். சோர்வடைவதற்கான நேரமில்லை இது. விடுதலையின் தலைவாசலுக்கு வந்து நிற்கும் தமிழனை இன்றோ நாளையோ வந்து தட்டப்போவது எதிரிப்படை. ஆகையால் வயது வேறுபாடின்றி எல்லோரும் போராட்டத்தில் கலப்பதைவிட வேறுமார்க்கம் குறித்து சிந்திக்க ஒரு கண அவகாசமும் இல்லை. செய் அல்லது செத்துமடி என்றதின்படி - போராடு அல்லது அழிவாய் என்று நோக்க வேண்டும்.

வீரத்தமிழன் மறவனே அன்றி கோழை அல்ல. தமிழன் தான் வாழ்ந்தால் சுதந்திரமாக வாழவேண்டும் அல்லது போராடி உயிர்துறப்போம் என்ற உறுதிநிலை எல்லாத் தமிழர்களுக்குமே வரவேண்டும். போராடினால்தான் வீரர்களாக சாவோம். ஒதுங்கி இருந்தால் எதிரியின் கையில் கோழைகளாகவே வாழ்வோம். விடுதலைப் புலிகளின் அழைப்பு எல்லாத் தமிழர்களின் நெஞ்சங்களையும் திறக்கட்டுமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாங்கட்ட ஈழப்போரும் ....

இதன் காரணமாகப் போருக்கான மூலோபாயத்தை மாற்றியமைத்தல், சிந்தித்தல் என்பனவற்றிற்கு முன்பாகத் தற்கில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையை அடக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கும் இராணுவ தலைமைப்பீடத்திற்கும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தக் குழப்பம் இதுவரை சிறிலங்கா இராணுவ வட்டாரங்களிற் தீர்ந்தபாடில்லை என்பதையே, தொடர்ந்து வெளிவரும் தகவல்கள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன. இந்நிலையிற் கொள்வனவு செய்யப்படும் ஆயுதம் எதற்கு எதிரான ஆயுதமாக இருக்கவேண்டும் என்பதே

**யாழ் குடாநாட்டை முழுமையாக இராணுவத்தால் கைப்பற்ற முடியுமா? அவ்வாறு கைப்பற்றினாலும் அதைப் பாதுகாக்க முடியுமா? என்பது. இரண்டாவது. விமானப்படையின் உதவியின்றியும், கடற்படையின் பூரண ஒத்துழைப்பின்றியும் பெரும் படைநகர்த்தல் எதையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமா? என்பது.**

வடபகுதி முகாம்களின் இருப்புக் குறித்துச் சந்தேகமற்ற நிலை ஒன்றைச் சிங்கள மக்கள் மத்தியில் உறுதி செய்யவேண்டியுள்ளது. இதன் ஒரு அங்கமே அரசாங்கம் அறிவிப்புச் செய்துள்ள வடக்கே உள்ள இராணுவத்தி-னருடன் உறவினர் தொடர்புகொள்ளத் தொலைத் தொடர்பு வசதி செய்து கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியாகும்.

இதன் அடுத்தகட்டமாகவே இராணுவம், புலிகளை எதிர்கொள்ளப் புதிய போர் யுக்திகளை வகுக்கவேண்டியுள்ளது. இப் போர் மூலோபாயமானது, இன்று வெளிவரும் தகவல்களின்படி இரண்டு வகையாக அமையலாமெனக் கருத்துக்கள் எழுந்துள்ளன. ஒன்று, யாழ் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதன் மூலம் புலிகளின் விமான எதிர்ப்பை முறியடிப்பது. அதாவது விமானங்கள் தாக்குதல் வீச்சுக்கு எட்டாத வகையிற் புலிகளை வெளியேற்றிவிடுவது, இரண்டாவது, ஏவுகணை எதிர்ப்புச் சாதனங்களையும் நவீன போர்விமானங்களையும் கொள்வனவு செய்வதன் மூலம், புலிகளின் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிப்பது என இரு தந்திரோபாயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் இவை இரண்டிலும் எதைத் தெரிவுசெய்யினும் அதிற் சில இடர்பாடுகளை இராணுவம் எதிர்நோக்குவதாகவே உள்ளது. யாழ் குடாநாட்டை முற்றாகப் பிடிப்பதென்பதில் இரு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று, யாழ் குடாநாட்டை முழுமையாக இராணுவத்தால் கைப்பற்ற முடியுமா? அவ்வாறு கைப்பற்றினாலும் அதைப் பாதுகாக்க முடியுமா? என்பது. இரண்டாவது. விமானப்படையின் உதவியின்றியும், கடற்படையின் பூரண ஒத்துழைப்பின்றியும் பெரும் படைநகர்த்தல் எதையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமா? என்பது.

இராணுவத்தரப்பிற் சில அதிகாரிகள், மேற்கூறப்பட்ட யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் திட்டத்தை




வெளியிட்டாலும் பாதுகாப்பு அமைச்சு அதற்குச் செவிசாய்த்திருப்பதாகத் தெரியவில்லை. பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் புலிகளின் விமான எதிர்ப்பு நடவடிக்கைக்கு எதிரான ஆயுதக் கொள்வனவில் அக்கறை காட்டுவதாகவே ஊகிக்க முடிகிறது. இதனை ஆயுதக் கொள்வனவிற்கென வெளிநாட்டிற்குப் பல குழுக்களை அனுப்புவதில் இருந்தே புரிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வாறு அரசாங்கக் குழுக்கள் பல வெளிநாடு செல்லப் புறப்பட்டவேளையில், இது தொடர்பாக இராணுவத்தரப்பின் முன்னுள்ள பிரச்சனை அதாவது புலிகளிடம் உள்ள விமான எதிர்ப்புச் சாதனம் என்ன? என்பது பற்றியதாகும். புலிகளிடம் இருப்பது ஏவுகணையானால் அது எந்த வகையானது? அதாவது சாம் ரகமா? ஸ்ரிங்கர் ரகமா? அன்றி வேறு ஏதாவது ரகமா? அல்லது இவை எதுவுமின்றி விமான எதிர்ப்புப் பீரங்கிகளா? முக்கியமாகக் குழப்பமாக உள்ளது.

இந்த வகையில் இராணுவத்தரப்பு வடபகுதிப் போர் முனையில் ஏற்பட்ட புதிய பரிமாணத்திற்கு எதிராகத் தம்மைத் தயார்ப்படுத்தவதிற் சில நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் என்றே கூறலாம். ஆனால் இதனைத் தனியாக வடக்குப் போர்முனைக்கு மட்டுமுரிய ஒன்றாகக் கொள்ளமுடியாது.

ஏனெனில் விடுதலைப்புலிகளிடமிருக்கும் விமான எதிர்ப்பு ஆயுதம், இலகுவில் இடம் நகர்த்தக் கூடியது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும். இந்நிலையிற் கிழக்கிற்கு இவ்வாயுதம் இடம்நகர்த்தப்படமாட்டாது என்றும் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் வடக்குப் போர்முனையில் மட்டுமல்ல, கிழக்குப் போர்முனையிலும் அதன் தாக்கம் உணரப்படலாம்.

இதேசமயம் தீவகப் பகுதிக்குள் புலிகள் நடாத்திய மற்றொரு தாக்குதலானது சிறிலங்கா இராணுவத்தின் போர் வியூகத்தைப் புலிகளால் உடைக்க முடியும் என்பதையே வெளிப்படுத்துவதாக இருந்தது.

ஏற்கனவே, கடற்படை, விமானப்படை என்பன மேலாதிக்கம் செலுத்திய நிலையில் யாழ் குடாநாட்டின் முற்றுகைக்கென வகுக்கப்பட்டு தற்பொழுது கடைப்பிடிக்கப்படும் போருபாயமானது - கடற்படையும் விமானப்படையும் இரண்டும் பலமிழந்தநிலையில்- அல்லது புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றபோது எத்தகைய தூரம் தாக்குப்பிடிக்க முடியும் என்பது குறித்து இன்று வினாக்கள் எழுப்பப்படுவது நியாயமானதே.

உதாரணமாகக் கூறுவதானால், இன்று புலிகள் தீவகப்பகுதிக்குட் சிறிலங்காக் கடற்படையினரதும் விமானப்படையினரதும் நடவடிக்கைகளை மீறி உட்புகுந்து தாக்கக் கூடியநிலையில் யாழ் குடாநாட்டின் முற்றுகையின் ஒரு பகுதியான தீவகப் பகுதியை இழப்பின்றி இனியும் வைத்திருக்க முடியாது.

## தோல்விகண்ட மூலோபாயம்

இந்த வகையில் மூன்றாங்கட்ட ஈழப்போரானது பல புதிய பரிணாமத்துடன் கூடியதாக, அதேவேளை புதிய நெருக்கடிகள் பலவற்றை அரசிற்குத் தோற்றுவித்துள்ள தெனலாம். இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதே இன்று சிறிலங்கா அரசின் முனைப்பான வேலையாக உள்ளது. ஆனால் இதனைச் சிறிலங்கா இராணுவத்தரப்பால் தனித்துச் செய்து முடிக்கமுடியுமா என்பது அடுத்த வினாவாக உள்ளது. ஏனெனில் இரண்டாம் கட்ட ஈழப்போரின் மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் தற்போதைய நிலையில் முற்றாக மறுசீரமைப்புச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாற் சிறிலங்கா இராணுவத்தரப்பினால் விடுதலைப்புலிகளைப் போரில் வெல்வதற்குக் கடந்த காலத்தில் மாறி மாறி வகுக்கப்பட்ட யுக்திகள் தோல்விகண்டநிலையில், பெரும் மாறுதலுக்கு ள்ளான மூன்றாங்கட்டப்போருக்கு அவர்களி னால் ஈடுகொடுக்க முடியுமா என்பது சந்தேகமே.

இதனை அரசாங்கத்தரப்பும் இராணுவத்தரப்பும் தெளிவாக உணர்ந்துள்ளது போன்றும் தெரிகிறது. இதன் காரணமாகவே அன்னிய நாடுகளின் இராணுவ உதவி-களை எந்த வகையிலும் பெற்றுக்கொள்ளச் சிறிலங்கா அரசு தயாராக உள்ளது. இராணுவத்தரப்பும் இதை வரவேற்பதாகவுள்ளது.

இந்த நிலையில் மூன்றாங்கட்டப் போருக்குக் கடந்த காலத்தைப் போன்று, தனியாகக் கேந்திர முக்கியத்துவத்தையும், தரைத் தோற்றத்தையும் இராணுவ ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் கொண்டு மூலோபாயத்தை வகுத்துவிட முடியாது. எதிர்கால மூலோபாயமானது விடுதலைப்புலிகளின் ஆயுதபலம், தந்திரோபாயம் என்பனவற்றையும் கருத்திற் கொண்டே வகுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு மூலோபாயத்தை வகுக்கச் சிறிலங்கா இராணுவத்தரப்பிற்கு ஆற்றல் உண்டா என்பது ஐயமே. அவ்வாறு வகுக்கமுடியுமானால் வெளிநாட்டு உதவியில் அரசும், இராணுவமும் இன்று காட்டுவதுபோன்று ஆர்வத்தைக் காட்டமாட்டாது.

எரிபொருளையும்
ஒரு வழியையும் தானே கேட்டோம்.
அடம் பிடித்துக் கொண்டு நீதானே ஆடினாய்.
காலத்துக்குக் காலம் ஏமாந்த கதை
இனியும் தொடருமென்று எப்படி எதிர்பார்ப்பாய்!
இடம் விட்டுக் கொடுக்க என்ன இருக்கிறது!
திறந்து வைத்திருந்த நம்பிக்கைக் கதவுகளின்
பிணைச்சலைப் பெயர்த்தெடுத்து
பேச்சுவார்த்தை மேசையின் கால்களை
முறித்தது யார்?
கால அவகாசம் முடியும்போது
பேச அனுப்பினாய்.
யாரை அனுப்பினாய்!
சம்பிரதாயத்துக்கென்றாலும் ஒரு மந்திரியை அனுப்பி
மதிப்புத் தந்திருக்கலாம்.
மதகுருவை ஏன் அனுப்பினாய்!
பூசை வைக்கவா!
'இந்தா பார்! நீங்கள் இறங்கி வராவிட்டால்
என்ன நடக்கும்' என்பது போல
இந்தியாவுக்கு ஓடினாய்.
சின்ன மிரட்டலுக்கா தீர்மானித்தாய்!
உன்னிலோடும் குருதியிலும்
அதிகார வர்க்கத்தின் ஆணவமா கலந்துளது!
'கொரகொல்லைத்' தோட்டத்து இராஜதிமிரா
உன்னை இப்படிச் செய்யத் தூண்டியது!
ஒரு சங்கதி தெரியுமா சோதரி!
நீ படித்தவள் என்றே
இங்கு பரவலாகப் பேசப்படுகின்றாய்.
'பாரிசில் படித்த பட்டதாரி' என்று
ஆங்கிலம் பேசும் தமிழர்கள் அடிக்கடி கூறுவர்.
நடந்து முடிந்த நல்லூர்த் திருவிழாவின் போது
பாய் விற்றவன் கூட 'சந்திரிகா பாய்' என்றே
கூவி விற்றான்.
சீப்பு விற்றவன் 'சந்திரிகா சீப்பு' என்றே
சொல்லி விற்றான்.
அத்தனை மதிப்பிலும், நம்பிக்கையிலும்
மண்ணள்ளிப் போட்டு விட்டாயே!
புலிகள் வேறு, தமிழர் வேறு என்று
புதுக்கதை பேசத் தொடங்கியுள்ளாய்.
சந்திரிகா வேறு, சிங்களவர் வேறு என்பது சரியாகலாம்.
ஆனால்..
வேருக்கும் மண்ணுக்கும் உள்ள உறவு,
நீருக்கும் மீனுக்கும் உள்ள உறவு
புலிகளுக்கும் தமிழருக்கும் உள்ள பிணைப்பு,
உன்னால் என்ன செய்ய முடியும்!
பிச்சையற்ற வாழ்வும், அச்சமற்ற வாழ்வும்
எங்கள் பிள்ளைகளுக்கு வேண்டும்.
இதற்காக எந்தவிலையும் கொடுப்போம்.
கையில் விடுதலை கிட்டும் வரை
கடற்புலி இடிக்கும்.
காலில் விடுதலை படும்வரை
கரும்புலி அடிக்கும்.
கட்டுமுறிப்பு முறிந்தது போல
எட்டுத்திசையுமுள்ள உங்கள் தங்ககங்கள்
இனிப் பற்றி எரியும்.
என்ன! என்ன!
ஏதோ புதுப்பெயர் சொல்லி வெருட்டுகின்றாய்.
'சார்க்' நாட்டுப் படைகளா!
சந்தோசம்.
அவைகளும் வரட்டும்
'ஆண்டி குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல்'
அச்சமில்லை..
கருங்கல்லு உடையுமே அன்றி வளையாது.

— புதுவை இரத்தினதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குரோசியத் தாக்குதல்

# பொஸ்னியப் போரை விரிவுபடுத்துமா?

**வெடிக்காது கிடக்கும் இக் குண்டைக்கண்ட குரோசிய பொலிஸ்காரர் ஒருவர் தனது பதைபதைப்புக்கும் மத்தியில் கடமை உணர்வு மேலோங்கியவராக மெதுவாக அடிமேல் அடி வைத்து நகர்கின்றார்.**

குரோசியாவின் தலைநகரான சாக்ரப்பின் மத்திய பகுதியில் உள்ள பிரதான சிறுவர் வைத்தியசாலை வழமைபோல சுறு, சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளை சாக்ரப்பின் தென்பகுதியில் உள்ள குரோசிய செர்பியரின் பாதுகாப்புப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட "சூறாவளி" எனப்படும் "கூட்டு வெடி" (cluster bomb) வைத்தியசாலையின் அருகில் விழுகின்றது.

வெடிக்காது கிடக்கும் இக் குண்டைக் கண்ட குரோசிய பொலிஸ்காரர் ஒருவர் தனது பதைபதைப்புக்கும் மத்தியில் கடமை உணர்வு மேலோங்கியவராக மெதுவாக அடிமேல் அடிவைத்து நகர்கின்றார்;

குண்டை அண்மித்து கவனமாக, ஆனால் மெதுவாக குண்டின் மூடியை அகற்றி செயலிழக்க முனைகிறார். திடீரென்று வெடித்த அக்குண்டு அவரின் உடற்பகுதிகளை அருகிலுள்ள கட்டிடங்களின் மீது சிதறி விழச் செய்கிறது.

ரஷ்யர், உக்கிரேனியர், பிரித்தானிய பிரஜைகள் உட்பட 43 பேர் காயங்களுக்குள்ளாகினர். பல நூற்றுக்கணக்கான நோயாளிகள் அவசர, அவசரமாக நிலக்கீழ் அறைக்குள் எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

மே மாதம் 3ம் திகதி இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பு இரண்டு நாட்களில் வெடித்த இரண்டாவது சம்பவமாகும். உண்மையில் 2ம் திகதி நடைபெற்ற குண்டுவெடிப்புக்கள் பிந்தின தினத்தை விடக் கொடூரமானதாகும். இத்தினத்தில் மட்டும் ராக்கட் துணையுடன் ஏவப்படும் "கூட்டுவெடிகள்" தலைநகரையும், அண்மிய பகுதிகளையும் தாக்கின. இவற்றில் 6 குண்டுகள் நகரின் மத்தியில் விழுந்து வெடித்ததில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் 125 பேர் காயமடைந்தனர்.

அடுத்தடுத்து இடம்பெற்ற இக் குண்டு வெடிப்புக்கள் குரோசிய மக்களின் மத்தியில் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தின. 1991ல் முன்னாள் யூகோஸ்லாவியா பிளவு பெற்று குரோசியா தனிநாடாக மாறியதில் இருந்து தலைநகரும், அநேகமான குரோசியப் பகுதிகளும் அமைதியின் சுவையை அனுபவித்துக் கொண்டிருந்தன. யூகோஸ்லாவியாவில் தோன்றிய போர்ச் சூறாவளி நகர்ந்து பொஸ்னியாவிலேயே அனர்த்தங்களை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தது.

குரோசியா சுதந்திர நாடான போது நாட்டின் 1/3 நிலப்பரப்பை அங்கு வாழும் செர்பிய இனத்தவர் ஆக்கிரமித்துக் கொண்டனர். இப் பகுதியில் "செர்பிய கிராஜினா" (Krajina) எனும் குடியரசு ஒன்றையும் சுயமாக உருவாக்கிக் கொண்டனர்.

இப் பிரதேசத்தில் இருக்கும் 3 சிறு, சிறு பகுதிகளில் ஒன்றான மேற்கு ஸ்லாவேனியா எனும் பகுதியை குரோசியப் படைகள் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டதற்குப் பதிலடியாகவே இக் குண்டுகள் ஏவப்பட்டன என குரோசியாவின் செர்பியர் காரணங்கள் கூறுகின்றனர்.

மே மாதம் முதலாம் தேதி விசேடமாக பயிற்சியளிக்கப்பட்ட துருப்பினரின் உதவியுடன் மேற்கு ஸ்லாவேனியாவுக்குள் இரு பகுதிகளினூடாக 7000 பேரைக் கொண்ட குரோசிய படைகள் புகுந்தன.

மே இரண்டாம் தேதி கூடிய ஐ. நா. பாதுகாப்புச்சபை செர்பியருக்கெதிரான குரோசியரின் தற்போதைய தாக்குதல் உடன் நிறுத்தப் படல் வேண்டும் எனத் தீர்மானமெடுத்ததற்கும் மாறாக ஆகாய விமானங்களின் உதவியுடன் குரோசியப் படைகள் 500 ச. கி. மீற்றர் பரப்பினை நான்கு நாட்களில் கைப்பற்றிக் கொண்டன.

முக்கிய நகரமான பக்ரக்கில் பதுங்கியிருந்த 600 செர்பிய துருப்பினர் கைகளை உயர்த்தியவாறு வெளியில் வந்து குரோசிய துருப்பினரிடம் சரணடைந்தனர்.

மேற்கு ஸ்லொவேனியாவை குரோசியப் படைகள் சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடாத்திய போது குரோசிய செர்பிய படைத் தளபதிகள் பொஸ்னியாவில் உள்ள செர்பிய இனத்தவரிடம் உதவிக் கூக்குரலிட்டது இங்கு கவனிக்கத் தக்கது. குறுகிய காலத்துள், அதாவது 4 தினங்களில் மேற்கு சிலேவேனியா கைப்பற்றப்பட்டதால் குரோசிய, செர்பிய இனத்தவரிடையே இருந்த இறுக்க நிலை அத்துமீறிப் போகாமல் தடுக்கக் கூடியதாகவிருந்தது.

ஐ. நா. சபைகள் விசேட பிரதிநிதி யாசூஷி அக்காசி அவசர, அவசரமாக உருவாக்கிய தற்காலிக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில், மேற்கு சிலேவேனியாவில் உள்ள செர்பிய குடிமக்களும், படையினரும் ஐ. நா. பாதுகாப்புடன் பொஸ்னியாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என உத்தரவாதம் அளிக்கப் பட்டிருந்தது.

குரோசியத் தாக்குதலும், செர்பியப் பதிலடியும் விரிவடைந்து பால்கன் பிரதேசத்தையே யுத்த பூமியாக்கிவிடும் எனப் பலரும் அச்சமுற்றிருந்த வேளை அக்காசியின் இவ் ஒப்பந்தம் தற்காலிக நிவாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிராஜினா பகுதியினைப் படிப்படியாக மீளவும் குரோசியாவுடன் இணைக்கவேண்டும் என குரோசியத் தலைவர் தாஜ்மான் அவாக் கொண்டிருந்தார். கிராஜினாவைச் சூழ்ந்து நிலை கொண்டுள்ள சுமார் 15,000 ஐ. நா. படையினர் குரோசிய நலன்களுக்குச் சாதகமாக இருக்கிறார்களில்லை என்பது இவரது கருத்தாகவிருந்தது. அதாவது இப்பகுதியில் உள்ள செர்பிய போராளிகளை நிராயுதபாணிகளாக்க இதுவரை ஐ. நா. படைகளால் முடியவில்லை எனக் குற்றஞ் சாட்டும் இவர் இதனால் 1991 போரின் போது இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த 400,000 குரோசியரை மீளக் குடியமர்த்த முடியாமல் உள்ளது எனக் கவலைதெரிவித்துள்ளார்.

பொஸ்னியாவில் கடந்த பல வருடங்களாக ஐ. நா. உதவியுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற போதும் ஒரு நியாயமான தீர்வு காணமுடியாமல் இழுபறிப்படுவது தாஜ்மானுக்கு அதிருப்தியை அளித்துள்ளது. இந் நிலை குரோசியாவிலும் ஏற்படக்கூடாது என்பதே இவரது விருப்பமாகும்.

ஐ. நா. படைகள் கிராஜினாப் பகுதியில் இருந்து ஜூன் 30ம் தேதியுடன் வெளியேறிவிட வேண்டும் என இவ்வருட ஜனவரி மாதத்தில் தாஜ்மான் அறிக்கைவிட்டது அவர் எந்தளவுக்கு பொறுமையிழந்து வருகிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. தாஜ்மானைப் பொறுத்தவரை செர்பிய ஆயுதக் குழுக்களுக்கு ஐ. நா. படைகள் பாதுகாப்பளிப்பதை விட செர்பியா மற்றும் பொஸ்னியாவுடனான குரோசிய எல்லையில் அவர்களது படைகளை நிலைப்படுத்தி குரோசியாவின் இறைமைக்கு உத்தரவாதம் அளிப்பதையே வரவேற்கிறார்.




ஏப்பிரல் 28ம் தேதி இடம் பெற்ற சம்பவம் ஒன்று தாஜ்மன் தனது நோக்கத்தில் ஓரளவு வெற்றி பெற உதவியாக விருந்தது. சாக்ரப் நகரை குரோசியாவின் கிழக்குப் பகுதியுடனும், செர்பியாவுடனும் இணைக்கும் முக்கிய பெருஞ்சாலை ஒன்றில் உள்ள பெற்றோல் நிலையத்தில் வைத்து செர்பிய வாகனஓட்டி ஒருவனை குரோசிய இனத்தைச் சேர்ந்தவன் குத்திக் கொலை செய்திருந்தான். இதற்குப் பதிலாக இப் பெருஞ்சாலையை மூடிய செர்பியர் 3 குரோசிய வாகன ஓட்டிகளைக் கொலை செய்தனர். பெருஞ்சாலையை மீண்டும் திறந்துவிடவேண்டும் எனும் போர்வையில் தனது படையினரை அனுப்பிய தாஜ்மான் அச்சாலையைச் சார்ந்த

**சாள்ஸ் தேவசகாயம் M.A**

மேற்கு ஸ்லாவினியாவையும் கைப்பற்றிக் கொண்டார்.

இதே சமயம் கடந்த நான்கு மாதங்களாக பொஸ்னியாவில் நிலவி வந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மே மாதம் முதலாம் தேதியுடன் முடிவுக்கு வந்துள்ளது. அக்காஷி பகீரதப் பிரயத்தனம் செய்திருந்தாலும் பொஸ்னியாவின் முஸ்லிம் அரசாங்கமும், பொஸ்னிய செர்பிய தலைவர்களும் இந் நீடிப்பை எதிர்த்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பொஸ்னிய செர்பியரைப் பொறுத்தவரை அவர்கள் நிரந்தரமான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் "சில நிபந்தனைகளுடன்" தாம் தற்காலிக ஒப்பந்தத்தை பரிசீலிக்கத் தயாராகவுள்ளோம்" என பொஸ்னிய செர்பிய தலைவர் ரடோவன் கராட்சிக் தெரிவித்திருந்தார். "அதாவது, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் என்பது யுத்தம் இல்லாத நிலையாகும், எனவே யுத்தம் இல்லாத இக் கால கட்டத்தில் யூகோஸ்லாவியாவின் மீதும் தமது பொஸ்னிய செர்பியக் குடியரசு மீதும் பொருளாதாரத் தடை இருக்கக் கூடாது" என்பதே அவரது நிபந்தனையாகும். இதேவேளை, "பொருளாதாரத் தடையை தளர்த்துவது என்பது பாதுகாப்புச் சபையினதும் உலக சமூகத்தினதும் கைகளிலேயே தங்கியிருக்கிறது" என அக்காஷி பதில் அளித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 31ம் தேதி பொஸ்னிய அமைச்சர் ஒருவர் பயணம் செய்த வாகனம் ஒன்று செர்பிய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதில் அவ்வாகன ஓட்டி கொல்லப்பட்டதுடன் அமைச்சரும் மயிரிழையில் உயிர்தப்பினார். "தலைநகர். சரயீவோ செர்பியரின் துப்பாக்கி முனையில் இவ்வாறு இருப்பது, இம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை தாம் நீடிக்க விரும் பாததன் பல காரணங்களில் ஒன்றாகும்" என பொஸ்னிய பிரதம மந்திரி கூறியுள்ளார். எனினும் தாம் தாக்குதலில் ஈடுபடப் போவதில்லை என உத்தியோகப் பற்றற்ற முறையில் பொஸ்னிய அரசு கூறியுள்ளது.

இதேவேளை, முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான ஐ. நாடுகள் நீதிமன்றம் பொஸ்னிய செர்பிய தலைவர் கராட்சிக்கையும், அவரது இரு உதவியாளரையும் போர்க் குற்றம் புரிந்தவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்து வருவது இங்கு குறிப்பிடத் தக்கது இனக் கொலை, கொலை, கற்பழிப்பு, சித்திரவதை மற்றும் பொஸ்னியா வின் அநேக பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான குடிமக்களை வற்புறுத்தி வெளியேற்றியமை போன்ற குற்றங்களுக்காக இவர்கள் விசாரிக்கப்படுகின்றனர் என ஏப்பிரல் 24ம் தேதி நெதர்லாந்தில் உள்ள ஹேக் நகரில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொஸ்னியத் தலைவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப் பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தை க்காக அவர்கள் வெளிநாடு சென்றாலும் கைது செய்யப்படும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இந்நிலையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை நீடிக்கும் முயற்சிகளு க்கு குந்தகம் ஏற்படலாம் என்றும் அஞ்சப் படுகின்றது.

கிராஜினா பகுதியில் உள்ள மேற்கு ஸ்லாவோனியாவை குரோசியப்படைகள் கைப்பற்றினாலும் மீதி உள்ள இரு சேர்பியப் பகுதிகள் குரோசியாவின் 20 வீதமான பகுதிகளை உள்ளடக்கியிருப்பதுடன் ஸ்லாவானியாவை விட நன்கு பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டதாகவும் உள்ளன.

பொஸ்னிய செர்பிய தலைவர் கராட்சிக்கும், குரோசிய செர்பிய தலைவர் மார்க்டிக்கும் தாம் "ஸ்லாவேனியாவை திரும்பக் கைப்பற்றுவோம்" எனச் சூளுரைத்துள்ளனர். கிராஜினாவின் 40,000 போராளிகள் குரோசியாவின் 105,000 படையினருக்கு நிகரில்லை எனினும் பொஸ்னிய செர்பியரும், இறுதியில் இணைந்தால் பால்கன் குடாநாடு ரத்தக்களரியாகும் என்பதில் சந்தேகமில்லை. ஸ்லாவேனிய வெற்றியில் உற்சாகம் அடைந்து தாஜ்மன் வேறுஒரு படையெடுப்பை மேற்கொண்டாலும் அல்லது பொஸ்னிய, குரோசிய செர்பியர் ஒன்று சேர்ந்து குரோசியரை எதிர்த் தாலும் பொஸ்னியப் போர் விரிவு படுவது தவிர்க்க முடியாததாகலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விசேட அதிரடிப்படை
# கிழக்கில் புரியும் அடாவடி

**கா**ரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினரதும் அதன் கைக்கூலிகளின் அடாவடித்தனங்களுக்கு இடையில் இன்று மட்டக்களப்பு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சித்திரை 19ஆம் நாள் அன்று மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமானது முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து சிலகாலம் நிம்மதியாக வாழ்ந்த மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு மீண்டும் கெடுபிடிகள் தொடங்கிவிட்டன.

விசேட அதிரடிப்படையினரின் காட்டுமிராண்டித்தனமான செயல்கள் அங்கு மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. கிராமங்கள் தோறும் சுற்றிவளைப்புக்களும், கைதுகளும், ஆட்கடத்தலகளும், கொலைகளும் இன்று மலிந்துவிட்டன.

சுற்றிவளைப்பு என்றபோர்வையில் கிராமங்களுக்குள் புகும் படையினர் அங்கு மக்களை மிக மோசமாகத் தாக்குவதுடன் வீடுகளுக்குள் புகுந்து புலிகளைத் தேடுவதற்குப் பதிலாக நகைப் பெட்டிகளையும், பணப்பெட்டிகளையுமே தேடி வருகின்றனர். வீடுகளை விட்டுவெளியேறுமாறு உத்தரவிட்டபின் உட்புகும் படையினர் அங்கு விலையுயர்ந்த பொருட்களையும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுவிடுகின்றனர்.

இன்ஸ்பெக்டர் ஏத்தம் மீள்குடியேற்ற கிராமத்திற்குள் புகுந்த இவ்விசேட அதிரடிப் படையினர் வீடுகளில் இருந்தவற்றைச் சூறையாடிய பின் அவற்றை எரித்துச் சாம்பராக்கியதுடன் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் ஈவு இரக்கம் இன்றி கொடூரமான முறையில் தாக்கியதுடன் 'அசிற்' வீசி எரித்துமுள்ளனர். இதனால் எரிகாயங்களுக்குள்ளான அவ் இளம் பெண் ஆபத்தான நிலையில் மட்டு. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின்போது பச்சிளம்பாலகன் ஒருவரை இவ்விசேட அதிரடிப்படையினர் மண்ணெய் ஊற்றி எரிக்க முற்பட்டுள்ளனர். ஆனால் அதிர்ஸ்டவசமாக அக்குழந்தை தப்பித்துக் கொண்டது.

> மட்டக்களப்பில் அடாவடித்தனங்கள் புரிவதற்கென்றே இவ் அதிரடிப்படைகள் தனித்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது.

விசேட அதிரடிப்படையினர் இத்தனை கொடூரச் செயல்களுக்கும் துணைபோகின்றனர் தமிழ்க்குழுக்கள். மொதல் தவிர்ப்பு ஒப்பந்த காலப்பகுதியில் இருந்த இடம் தெரியாது பேச்சு மூச்சற்று உயிரைக் கையில் பிடித்தவாறு மறைந்து வாழ்ந்த இவர்கள் இன்று மீண்டும் நகரில் தலைகாட்டத் தொடங்கிவிட்டனர்.

இவர்கள் தற்போது ஆயுதபாணிகளாக மீண்டும் தமது அடாவடித்தனங்களை தொடங்கிவிட்டனர். படையினரின் சுற்றிவளைப்புக்களின் போது அப்பாவி மக்களைக் காட்டிக் கொடுப்பது, சோதனைச் சாவடிகளில் இருந்து வீதியால் செல்லும் இளைஞர்களை அடையாளம் காட்டுதல், பொலிஸ் நிலையங்களிலேயே தங்கியிருந்து படையினருக்கு அனைத்து விடயங்களிலும் உதவுதல் போன்ற தமது வழமையான செயற்பாடுகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டுநகரில் மீண்டும் 'வெள்ளைவான்' பீதியும் மக்களிடம் பரவத் தொடங்கிவிட்டது. கடந்த காலங்களில் பல குடும்பங்கள் சின்னாபின்னமாகி சிதறிப் போனதற்கு இந்த வெள்ளை வானே மூலகாரணியாக இருந்து வந்தது.

வெளிச்சமோ, இலக்கத் தகடோ இன்றித் திடீரென கிராமங்களுக்குள் புகும் இவ்வாகனம் இளைஞர்களைக் கடத்திக்கொண்டு மின்னல் வேகத்தில் ஓடி மறைந்துவிடும். யார் வந்தார்கள், எங்கு கொண்டு போனார்கள், ஏன் கொண்டு போனார்கள் என்ற வினாக்களுக்கு விடைகாண குடும்பத்தினர் முயல்வதற்கு முன்னே மதவடியில் இரத்தம். ஓர் இளைஞனின் சடலம் கிடக்கிறது என்ற செய்தி காட்டுத்தீ போல்பரவி கிராமத்தையே உலுக்கிவிடும். இந்த நிலை அங்கு மீண்டும் தலை தூக்கிவிட்டது போல் உணரப்படுகிறது. இரவு இரவாக முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதல்களும் துப்பாக்கி வேட்டு ஒலிகளும் காதைப் பிளந்தவண்ணமேயுள்ளன. திடீர் திடீரென முகாம்களின் முன்னணிக் காவரண்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் அதிகாலையில் அவ்விடங்கள் அனைத்தும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை தொடங்கும்.

இம்மாவட்டங்களின் அனைத்து பிரதான வீதிகளிலும் முழத்துக்கு ஒரு 'பொலிஸ் போஸ்ட்' என மினி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்தே இத்துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதனால் எந்த வேளையில் என்ன நடக்குமோ என ஏங்கியவாறே இப்பகுதிகளில் வாழும் மக்கள் ஒவ்வோர் இரவுகளையும் கழித்து வருகின்றனர். அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்களை மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பிற்கென பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியரிடம் மக்கள் சென்று முறையிட்டனர். மக்களின் முறையிடலை கேட்ட பின் பிரிகேடியர், அதிரடிப்படை தனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை எனக்கூறிக் கைவிரித்துவிட்டார். அப்படியானால் மட்டக்களப்பில் அடாவடித்தனங்கள் புரிவதற்கென்றே இவ் அதிரடிப்படைகள் தனித்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து அங்கு மீளக்குடியேறிய சில குடும்பங்கள் மீண்டும் அவ்விடங்களைக் கைவிட்டு அகதிகளாகி உறவினர் வீடுகளிலும், ஆலங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் மீளக்குடியேறினாலேயே நிவாரணம் வழங்கப்படும் என அதிகாரிகள் கூறிவருகின்றனர். உணவு இன்றி பட்டினி கிடந்து இறந்தாலும் முன்னைய இடங்களுக்கு திரும்புவதில்லை என இம்மக்கள் உறுதியாகக் கூறிவருகின்றனர்.

ஒருசில நாட்களுக்குள்ளேயே படையினரின் கொடூரங்களால் உடல் உள ரீதியாக இம்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையே இவர்களது இம்முடிவு எடுத்துக்காட்டி நிற்கிறது.


செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிலைய நிதிக்காக

WTSA
World Tamil Sports Association

மாபெரும் உலகத் தமிழ் சுற்றுப்போட்டி - 1995

உலகத் தமிழ் குடும்பெடுத்தாட்ட, வலைப் பந்தாட்ட, கரப்பந்தாட்டச் சுற்றும் போட்டிகளும், 40 வயதிற்கு மேற்பட்டோர் குடும்பெடுத்தாட்டப் போட்டியும், 14 வயதிற்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இடம்
WARREN FARM SPORTS CENTRE
WINDMILL LANE
SOUTHALL

காலம்
01.07.1995
சனிக்கிழமை காலை 9 மணி முதல்

அனுமதி £2
வாகன தரிப்பிட அனுமதி £3

அகில உலக ரீதியான இச்சுற்றுப் போட்டியில் கனடா, நோர்வே, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரபல்யம் வாய்ந்த கழகங்கள் மோத உள்ளன.

இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்



மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி 1995

அன்பார்ந்த யேர்மனிவாழ் தமிழீழ மக்களே,

எமது விடுதலைப் போராட்டத்தில் இன்றுவரை தமது இனிய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூர்ந்து யேர்மனிவாழ் தமிழ்மக்களிடையே விளையாட்டுத்துறையை வளர்ப்பதற்காக தமிழ் மாணவர் அமைப்பின் யேர்மனிக் கிளையினரால் கீழ்வரும் திகதிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்த ஒழுங்கு செய்துள்ளோம்.

| காலம் | நேரம் | இடம் | போட்டிகள் |
|---|---|---|---|
| 01.07.95 | 8.00 மணி | TOSHEF-KoRUER-HALLE<br>MOERSER STR-36<br>47798 KREFELD | கரப்பந்தாட்டம் |
| 08.07.95 | 8.00 மணி | MENDESSPORTPLATZ<br>FREDEM BAUM<br>44147 DORTMUND | உதைபந்தாட்டம் |
| 19.08.95 | 8.00 மணி | GRENZLAND STADION<br>JAHN PLATZ-20<br>41236 MoNCHENGLADBACH | மெய்வல்லுனர் |

மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி நாளான 19.08.95 சனிக்கிழமை அன்று எமது தேசியக்கொடி ஏற்றலுடன், அணிவகுப்பு, பரிசில் வழங்கல், சிறப்புரை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். விளையாட்டுப்போட்டிகள் சிறப்புடன் நடைபெற யேர்மனிவாழ் அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரண்டு வந்து விளையாட்டு வீராங்கனைகளையும், வீரர்களையும் உற்சாகப்படுத்துவதோடு, எமது எதிர்காலச் சந்ததியினரின் ஆரோக்கியமான வாழ்விற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

தமிழ் மாணவர் அமைப்பு : யேர்மனி
Postfach 101133. 11411 Neuss.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிதறல்

**சிறு கதை**

அ.கிருஷ்ணேந்திரன்

வெயில் அகோரமாய்க் கொழுத்திக்கொண்டிருந்தது. அவன் மருத நிழலில் அமர்ந்திருந்தான். சிலமாதங்களுக்கு முன்பு பச்சைப்பசேல் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்த அந்த வயல்வெளியில் கோடையின் வரட்சி தெரியத் தொடங்கியிருந்தது.

வெட்டப்பட்ட வயல்களிற் கருகத் தொடங்கியிருந்த புற்களை மாடுகள் கார்ந்துகொண்டிருந்தன. கறுப்பும், சிவப்பும், வெள்ளையுமாகத் தெரிந்த மாடுகளுள் இவனுடைய மாடுகளும் மேய்ந்துகொண்டிருந்தன.

வடக்குப் பக்கமாக இருந்த தறைகளில் காய்கறிகள் போட்டிருந்தார்கள். மாடுகள் அந்தப் பக்கம் போகாமற் பார்த்துக் கொள்வது இவனது வேலை. வழமையாக மூத்த அண்ணா வருவார் இன்று அவனுக்குப் பள்ளிக்கூடம் இல்லை. அதனால் இவன்பொறுப்பில் அந்த வேலையை விட்டுவிட்டார்.

வயல்நெல்லு வளர்ந்து நிற்கின்ற காலங்களில் அந்தப் பகுதி முழுவதுமே அழகாக இருக்கும். மாலைநேரங்களில் அண்ணா மாடுகளுக்குப் புல்லுவெட்டுவார். இவன் வயல் வரம்புகளிற் பட்டத்துடன் ஓடித்திரிவான். வயல்வெளியிற் காற்று நன்றாய்வீசும். பட்டத்தை உச்சத்துக்குக் கிளப்பிவிட்டு நூலைக் கையிற் பிடித்துக்கொண்டு அண்ணா புல்வெட்டுகிற வயலின் வரம்பிற் குந்தியிருப்பான். பட்டம் காற்றில் ஏறி இறங்குவதையும், ஆடி அசைவதைப் பார்த்துக்கொண்டு இருப்பதும், பட்டத்தை வலிப்பதும் நூலை விட்டுக்கொடுப்பதுமாக இருப்பான்.

> இவன் பூவரச மரத்தை நோக்கி ஓடினான். பூவரச மரத்தடியில் நின்று பார்த்தபோது விமானம் திடீரென புகைக்கத் தொடங்கியிருந்தது. சில கணங்களில் அந்தரத்திற் தடுமாறித் தீப்பிளம்புகளாகப் பெருஞ் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

உச்சியில் நிற்கின்ற பட்டங்களைக் கடந்து சில நேரங்களிற் ஹெலிகப்டர் சத்தத்துடன் பறந்து செல்லும். அப்பொழுது நூலை விட்டுக்கொடுத்துப் பட்டத்தை உச்சிக்குக் கிளப்பிக் ஹெலியிற் கொழுவுவதற்கு இவன் முயற்சி செய்வான். ஆனால் ஹெலி மிக உயரத்தாற் கவனியாதது போலப் பறந்து செல்லும். அண்ணா இதைப் பார்த்துப் பெரிதாகச் சிரிப்பார். 'உச்சத்தாலை போறான், பெரிய பட்டமெண்டால் உவனை கட்டாயம் கொழுவி விழுத்துவன்' இவன் சொல்லுவான்.

காற்றாடி சுற்றுவது நின்றுவிட்டால் ஹெலி விழுந்துவிடுமென்று அப்பா சொல்லியிருக்கிறார். அப்பா எவ்வளவு அறிவாளி. எவ்வளவு விசயங்களை இவனுக்குச் சொல்லியிருக்கிறார்.

ஊரின் முடிவிற் பரந்த வெளியின் தொடக்கமாக நின்றுகொண்டிருக்கின்ற பெரிய பூவரச மரத்தினடியில் அப்பாவின் மடியிலிருந்து கதைகேட்ட இரவுகள் ஒவ்வொன்றும் இவனுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

இரவுப் பொழுது சாய்கின்ற நேரத்தில் அப்பாவும் இவனும் அந்த மரத்தடிக்கு வருவார்கள். சில நாட்களில் மாமாவும் சின்னண்ணாவும்கூட வந்திருப்பார்கள். வீட்டுக்குப் பின்னாலிருக்கின்ற ஒற்றையடிப்பாதையால் அவனைத் தூக்கிக்கொண்டு அப்பா நடப்பார். இரவு நேரங்களிற் பாம்புகள் திரியும் என்று அம்மா பயப்பிடுவாள். அப்பா ஒன்றுக்கும் பயப்படுவதில்லை.

வெளியில் வீசகின்ற குளிர் காற்றில் இவர்கள் உடல் சிலிர்க்க அமர்ந்திருப்பார்கள். வானத்தில் மின்னுகின்ற நட்சத்திரங்களையும் அசைகின்ற ஒளிப் புள்ளிகளையும் இவன் பார்த்துக் கொண்டிருப்பான். தூரத்திற் தெரிகின்ற மரங்கள் பற்றைகள் கரிய யானைக்கூட்டங்கள் போலத் தோன்றும்.

வானமும் நிலமும் சந்திக்கின்ற இடத்திற் தெரிந்த வெளிச்சப் பிரதேசத்தை முதன்முதலிற் பார்த்தபோது இவன் அதிசயப்பட்டான். அப்பா சொன்ன கதைகளில் வந்த இரத்தினங்கள் சிதறிக்கிடக்கின்ற பொன்நகரம் ஒன்று இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

'தூரத்திற் தெரியிறது தங்க மாளிகையே' அப்பாவும் அண்ணாவும் சேர்ந்து கதைத்தார்கள். 'அது ஆமிக் காம்ப். நிறைய லைற் பூட்டியிருக்கிறான்' அப்பா சொன்னார். அவனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. அன்று அப்பாவிடம் ஆமிக்காம்ப் பற்றி நிறையக் கேட்டறிந்துகொண்டான்.

சில நேரங்களில் சிவப்பு மின்னல்களுடன் விமானங்கள் மேலாகப் பறந்து தூரத்தில் இறங்குவதை அவர்கள் பார்ப்பார்கள். சில நேரங்களில் ஹெலிகப்டரிலிருந்து சன்னங்கள் தணல் தணலாகப் பாய்வதையும் அவன் பார்த்திருக்கிறான். அப்பா அவனுக்குப் பொம்மர்கள் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

இரவு நேரங்களில் இப்படிக் காற்று வெளியிலிருந்து சகமாகக் கதைப்பது அப்பா செத்தவுடன் நின்று போய்விட்டது. முதலில் அப்பா ஏன் செத்தார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

மேற்கே சூரியன் இறங்கத் தொடங்கிய மாலைப் பொழுதில் அப்பாவைக் கொண்டுவந்து இறக்கினார்கள். வெள்ளைத் துணியால் அப்பா மூடப்பட்டிருந்தார். சில இடங்களிற் துணி சிவப்பாய் மாறியிருந்தது.

அம்மா தலையிலடித்துக் கொண்டு கதறி அழுதாள். அக்கா கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள். மாமா இவனைத் தூக்கிக் கொண்டார். இவன் விக்கி விக்கி அழுதான். 'அழாதை தம்பி' என்று மாமா இவன் முதுகிற் தட்டிக் கொண்டு அங்குமிங்கும் உலாவினார். இடையே தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். அப்பாவின் முகத்தைப் பார்க்க ஒருத்தரும் இவனை விடவில்லை.



பொழுது சாயத் தொடங்கிய நேரம் அப்பாவின் ஊர்வலம் புறப்பட்டது. சுடலையில் அப்பாவை மரக்கட்டைகளோடு கட்டையாகக் கிடத்தினார்கள். கடைசித் தடவையாக ஒருமுறை இவன் அப்பாவின் முகத்தைப்பார்த்தான். பற்கள் வெளித்தள்ளி கன்னம் வீங்கிக் கிழிந்து அகோரமாய் முகம் இருந்தது. இவனை அதிக நேரம் இவர்கள் பாக்க விடவில்லை.

மூத்த அண்ணா அப்பாவின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டார். சின்னண்ணாவும் இவனும் அப்படியே செய்தார்கள். சுற்றிவந்து கடைசியாக அப்பாவை மட்டும் விட்டுவிட்டு எல்லோரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். அன்றைய இரவு ஒரு பயங்கரமான இரவாக அவனுக்குத் தோன்றியது. வீட்டுவிறாந்தையிற் குத்துவிளக்குக் கொழுத்தியிருந்தார்கள். அம்மா சவரோடு சாய்ந்திருந்தாள். இவன் அம்மாவின் மடியிற் தலைவைத்துப் படுத்திருந்தான். அக்கா பக்கத்துப் பாயிற் சுருண்டு படுத்திருந்தாள். எல்லோரும் அழுது களைத்துப் போயிருந்தார்கள்.

'அம்மா அது உண்மையாய் எங்கடை அப்பாவா?' இவன் அடைத்த குரலில் அம்மாவைக் கேட்டான். குத்துவிளக்கு வெளிச்சத்தில் அம்மாவின் கண்கள் பளபளத்தன. அம்மா அவனைக் கட்டிப்பிடித்து அழுதாள். ஒரு பெரிய வெளியில் அவனை மட்டும் தனியாளாக விட்டுவிட்டு அப்பா மறைந்து விட்டார் போலத் தோன்றியது. அழுத கண்களுடன் அவன் அன்று தூங்கிப் போனான்.

சிறிது காலம் சென்ற பின்தான் இவனுக்கு அப்பாவின் சாவு புரிந்தது. இவனும் மாமாவும் கடைக்கு உரம் வாங்கப் போனபோது அப்பாவின் கடை இருந்த கட்டிடத்தைக் கண்டான்.

கதவுகள் பிய்த்து கம்பித் துண்டுகளும் கற்கு வியலுமாய் அப்பாவின் கடை சிதறிப்போய்க் கிடந்தது. குண்டு விழுந்தபோது அப்பா கடைக்குள் இருந்திருக்கிறார்.

அப்பா செத்த பிறகு வீடு நிறையவே மாறிப் போய்விட்டது. சின்னண்ணா திடீரெனக் காணாமற் போனான். இயக்கத்துக்குப் போய்விட்டான் என்று சொன்னார்கள். மூத்த அண்ணா தோட்டத்திற் கடுமை யாக உழைக்கத் தொடங்கினார். அம்மா இன்னும் கூடக் கவலைப்பட்டாள்.

பின்னேரங்களில் அம்மாவும், அக்காவும் சேர்ந்து அரிசி இடிப்பார்கள். காலைப் பொழுதுகளில் இடியப்பம் அவிப்பார்கள். அம்மா இடியப்பம் பிழிவாள் அக்கா அடுப்பில் வைத்து இறக்குவாள். சுடச்சுட ஆவி பறக்கின்ற இடியப்பங்களை அவள் எடுத்துப் போடுவதை இவன் பார்த்துக் கொண்டிருப்பான். அடுப்புக்கு முன்னால் இருந்து அவள் நன்றாய்க் கறுத்துப் போய்விட்டாள்.

இவன் அவித்த இடியப்பங்களை ஓலைப்பெட்டிகளில் அடுக்கி வீடுகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுக் காசு வாங்கி வருவான்.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிதறல்...

பொம்பர்கள் அடிக்கடி இவன் வீட்டுக்கு மேலாகப் பறக்கும். பிழிந்து கொண்டிருக்கின்ற மாவையோ, இடியப்பத்தையோ விட்டவிட்டு இவர்கள் எழுந்து ஓடுவார்கள். ஒரு சின்ன இரைச்சல் கேட்டாலே அம்மாவின் கைகள் நடுங்கத் தொடங்கும். முன்பு அப்பாவும் அண்ணாவும் சேர்ந்து வெட்டிய பங்கருக்குள் அவர்கள் குந்தியிருப்பார்கள். அம்மா கந்தசட்டிகவசம் சொல்லுவாள். இவனுக்கும் கந்தசட்டி கவசம் முழுவதுமே பாடம். ஆபத்து வேளைகளிற் சொல்லும்படி அம்மா சொல்லித் தந்திருந்தாள்.

சில நேரங்களிற் தூரத்திற் பொம்பர்கள் சற்றுகின்ற பொழுது வயல்வெளிக்கு ஓடிச்செல்லுவான். தூரத்தில் குண்டுகள் விழுவதையும் பொம்பர்கள் தரையிறங்குவதையும் பார்த்துக்கொண்டு நிற்பான். ஒருமுறை அவனுக்கு மிகவும் அருகிற் குண்டு விழுந்து வெடித்தது.

கோயிலுக்குப் பக்கத்திலிருந்த வாசிகசாலைக் கட்டடத்தில் நேசறி வகுப்பு நடந்தது. விஜயா ரீச்சர் இவர்களுக்குப் பாடம் சொல்லித்தருவாள். ரீச்சரை நன்றாய் இவனுக்குப் பிடிக்கும்.

ஒருமுறை இவனோடு கூடப்படிக்கிற சுதன் பிறந்தநாளுக்கு புதிய சட்டை சப்பாத்து எல்லாம் அணிந்து வந்திருந்தான். ஒரு பை நிறைய ரொபி கொண்டுவந்து எல்லோருக்கும் கொடுத்தான். ரீச்சர் வாழ்த்துக்கள் என்று சொல்லி அவன் முதுகில் தட்டினார். தன்னுடைய பிறந்த நாள் எப்ப என்று அவனுக்குத் தெரியாது.

வீட்டிற்குப் போனபோது அம்மா அரிசி இடித்துக் கொண்டிருந்தாள். "அம்மா என்ரை பிறந்த நாள் எப்ப வருகுது. இண்டைக்குச் சுதன்ரை பிறந்தநாள் புதுச்சட்டை எல்லாம் போட்டுக்கொண்ட வந்தவன், ரொபி தந்தவன்". அம்மா இவனுடைய தலையைத் தடவிப் பெருமூச்சு விட்டாள்.

அவன் முன்னாற் புகைத்தபடி-யே கருகிய உலோகச் சிதறல் ஒன்று வந்து விழுந்தது. விழுந்த இடத்திற் புற்கள் கருகின. சிறிது நேரம் அவன் அப்படியே அசையாமல் திகைத்து ப்போய் நின்றான். உடல் சிலிர்த்தது. உள்ளே சந்தோச ஊற்றுப்பெரு க்கெடுத்தது. அவன் அந்தச் சிதறல் துண்டைக் குனிந்து எடுத்தான். அது இன்னும் சூட்டோடு இருந்தது. அம்மாவுக்குக் காட்ட வேண்டும். கைகளில் அதை உயரத்தூக்கிக் கொண்டு வரம்புவழியே துள்ளிக் குதித்தபடி அவன் ஓடத்தொட ங்கினான்.

இவனுடைய பிறந்த நாள் ஒரு வெள்ளிக் கிழமை வந்தது. அம்மா கஸ்ரப்பட்டு இவனுக்குப் புதுசாய் சட்டை வாங்கித் தந்திருந்தாள். இவன் அன்று ரொபிப் பையோடு மிகவும் சந்தோசத்தோடு புறப்பட்டான். எல்லாப் பிள்ளைகளும் வந்தபிறகு முதலில் ரீச்சரக்குக் கொடுத்துப் பிறகு பிள்ளைகளுக்குக் கொடுக்க வேணும். இரண்டு கையாலையும் பிடிச்ச ரீச்சருக்குக் குடுக்கோணும் என்ன! அம்மா சொல்லியனுப்பினாள்.

வகுப்புத் தொடங்கியது, எல்லாப் பிள்ளைகளும் வந்து விட்டார்கள். இப்போது கொடுக்கலாமா கொஞ்சநேரம் கழித்து கொடுக்கலாமா? என்று இவன் யோசித்துக் கொண்டிருந்தான். "என்ன செந்தூரன் புதுச்சட்டை", ரீச்சர் கேட்டார். இவன் வெட்கத்துடன் பதில் சொல்ல எழுந்தபோது அந்த இரைச்சல் கேட்டது. ரீச்சர் அவசரமாக எழுந்தார். "எல்லாரும் எழும்பி வெளியிலை வாங்கோ பொம்பர் போலக் கிடக்கு". அது பொம்பர் தான் வட்டமிடத் தொடங்கியது. ரீச்சருடன் எல்லோரும் கத்திக்கொண்டு வெளியில் ஓடினார்கள். செல்வி படி தடுக்கிவிழுந்து அழத் தொடங்கினாள். ரீச்சர் அவளைத் தூக்கிக் கொண்டு எல்லோரையும் இழுத்துக் கொண்டு பங்கருக்கு ஓடினார்.

பங்கருக்குள் எல்லாரும் நெருக்கியடித்துக் கொண்டு காதுகளைப் பொத்திக்கொண்டு குனிந்தபடி இருந்தார்கள். குண்டு மிக அருகில் விழுந்து அதிர்ச்சியுடன் வெடித்தது.

எல்லோரும் 'ஓ' என்று கத்தினார்கள். கற்கள் இவர்களுக்கு மேல் வந்து விழுந்தது. எங்கும் புழுதி மண்டலமாக இருந்தது. பொம்பர் மீண்டும் ஒருமுறை வட்டமடித்து இன்னுமொரு குண்டை வீசியது. இம்முறை கொஞ்சம் தள்ளி விழுந்து வெடித்தது.

பொம்பர் போய்விட்டது. எல்லோரும் பங்கரை விட்டு வெளியில் வந்தார்கள். ரீச்சரின் தலையில் கல்லுப்பட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. எல்லொருடைய அப்பாக்களும் அம்மாக்களும் வந்திருந்தார்கள். இவனுடைய அம்மாவும் பதறிக்கொண்டு ஓடிவந்தாள். அம்மா நடுங்கிய கைகளால் அவனைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடி-னாள். ரொபி பைக்கற் எங்கேயோ விழுந்து தொலைந்து போய்விட்டது.

அன்று சின்னன் ஆச்சி செத்துப்போய்விட்டாள். மற்றக் குண்டு அவள் வீட்டு வளவில்விழுந்து வெடித்தது.

பங்கருக்குள் எல்லாரும் நெருக்கியடித்துக் கொண்டு காதுகளைப் பொத்திக்கொண்டு குனிந்தபடி இருந்தார்கள். குண்டு மிக அருகில் விழுந்து அதிர்ச்சியுடன் வெடித்தது.

எல்லோரும் 'ஓ' என்று கத்தினார்கள். கற்கள் இவர்களுக்கு மேல் வந்து விழுந்தது. எங்கும் புழுதி மண்டலமாக இருந்தது. பொம்பர் மீண்டும் ஒருமுறை வட்டமடித்து இன்னுமொரு குண்டை வீசியது. இம்முறை கொஞ்சம் தள்ளி விழுந்து வெடித்தது.

சின்னச் சிதறற் துண்டுதான் பட்டதென்று கதைத்தார்கள்.

காலையில் இடியப்பம் கொடுக்கப் போனபோது ஆச்சி முற்றம் கூட்டிக்கொண்டு நின்றாள். "மோனை உச்சியிலை பழுத்த இரண்டு கொய்யாப்பழம் இருக்குது பின்னேரம் வா பிடுங்கி வைக்கிறன்" ஆச்சி சொன்னாள். ஆச்சிக்கு இவனை நல்லாய்ப் பிடிக்கும்.

பின்னேரம் ஆச்சியைக் கொண்டுபோய் எரித்துவிட்டார்கள். இவன்போய்ப்பார்த்த போது ஆச்சியிருந்த இடத்தில் இரத்தம் காய்ந்துபோயிருந்தது. வளவில் நின்ற கொய்யா மரத்தைக் காணவில்லை.

அவனுக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. அப்பாவின் நினைவு வந்தது. ஆச்சி காலையிற் கதைத்தது படமாகக் கண்முன் தெரிந்தது. பல இரவுகள் அவன் இப்படித் தூக்கமின்றிக் கழித்திருக்கிறான். இரவு நேரங்களிற் திடீ-ரென விழித்துக் கொள்ளுவான். அப்பாவின் நினைவு வரும். யாருமற்ற அதலபாதாளத்தில் அவன் மட்டும் ஒற்றையாய் ஒரு புள்ளியாய் நிற்பதாக உணர்வான்.

கையருகில் கைகளாற் தடவிப் பார்ப்பான் அம்மா படுத்திருப்பாள்.

தூக்கம் வராத நேரங்களிற் பெரிய கற்பனை உலகங்களுக்குட் புகுந்து கனவு கண்டு கொண்டிருப்பான்.

வானத்திற் பறந்து திரிவான். எதிர்ப்படுகின்ற விமானங்களை எல்லாம் கோடரியாற் தறித்து விழுத்துவான். கயிறு எறிந்து விமானங்களை இழுத்து விழுத்துவான். பெரிதாக மலையளவுக்கு வளர்வான். விமானங்களைப் பிடித்து நசுக்கியுறிபான் அவனுக்கு மாபெரும் அதிசய சக்திகள் இருக்கும். செத்துப் போனவர்களை உயிர்ப்பிப்பான். அப்பா வருவார். எல்லோரும் ஆச்சரியப்ப டுவார்கள். அப்பா அவனுக்குக் கதைகள் சொல்லுவார். அப்பாவும் அவனும் சேர்ந்து உலகிலுள்ள பொம்பர்களை-யெல்லாம் அழிப்பார்கள். அவன் கற்பனைகளுடன் உறங்கிப் போவான்.

அடுத்த நாள் சில வேளைகளிற் பொம்பர் சத்தத்துடன் கண்விழிப்பான். அப்பா படத்தில் சிரித்துக் கொண்டிருப்பார். சின்னண்ணா இயக்கத்துக்குப் போய் நீண்ட காலமாகிவிட்டது. எப்போதாவது ஒருமுறை வீட்டுக்கு வருவான். எல்லோரும் சந்தோசப்படுவார்கள். அம்மாவின் கண்கள் கலங்கும். ஒருமுறை சின்னண்ணா ஒரு பச்சை வாகனத்தில் வேறு சிலருடன் வந்திருந்தான். வாகனத்தின் பின்புறம் ஒரு குழாய் நீண்டிருந்தது. இவன் அதைச்சுற்றிச் சுற்றி அதிசயமாய்ப் பார்ப்பான். அண்ணா அன்று கொஞ்ச நேரம்தான் வீட்டிற்தங்கினான். அண்ணா போகும்போது "அண்ணா உது என்ன சரியான பெரிய துவக்கு" இவன் இரகசியமாயக் கேட்டான். "உதுதான் பிப்ரி கலிபர்" பிளேன் சுடுகிறது அண்ணா சொன்னான். அண்ணாவும் கூடவந்தவர்களும் அந்தப்பெரிய துப்பாக்கியோடு போய்விட்டார்கள். அதன்பிறகு அடிக்கடி அவன் கற்பனைகளில் அந்தப்பெரிய துப்பாக்கியும் வரும். அதைக் கையிற்தூக்கிப் பொம்பர்களைப் படபடவென்று சுட்டுவீழ்த்துவான்.

அன்று வந்ததற்குப் பிறகு சின்னண்ணா நீண்டகாலம் வீட்டிற்கு வரவில்லை. மீண்டும் சண்டைகள் தொடங்கிவிட்டன.

தூரத்திற் கேட்கத்தொடங்கிய விமானத்தின் இரைச்சல் அவனை இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்தது. மாடுகள் விட்டஇடத்திலிருந்து கொஞ்சம் தள்ளி மேய்ந்துகொண்டிருந்தன.

அவன் வயலுக்குள் இறங்கி அண்ணாந்து பார்த்தான். அவ்ரோ விமானம் மேற்கு நோக்கி பறந்துகொண்டிருந்தது. வீட்டில் அம்மா "முருகா" என்று கும்பிடத் தொடங்கியிருப்பாள்.

பூவரச மரத்தடியில் நின்றால் அது போய் வட்டமடித்து இறங்கித் தூரத்திற் சின்னதாய்த் தெரிகின்ற பனைகளுக்குப் பின்னால் மறைவதை நன்றாகப் பார்க்கலாம்.

இவன் பூவரச மரத்தை நோக்கி ஓடினான். பூவரச மரத்தடியில் நின்று பாத்தபோது விமானம் திடீரென புகைக்கத் தொடங்கியிருந்தது. சில கணங்களில் அந்தரத்திற் தடுமாறித் தீப்பிளம்புகளாகப் பெருஞ் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

அவன் முன்னாற் புகைத்தபடியே கருகிய உலோகச் சிதறல் ஒன்று வந்து விழுந்தது. விழுந்த இடத்திற் புற்கள் கருகின. சிறிது நேரம் அவன் அப்படியே அசையாமல் திகைத்துப்போய் நின்றான். உடல் சிலிர்த்தது. உள்ளே சந்தோச ஊற்றுப்பெருக்கெடுத்தது. அவன் அந்தச் சிதறல் துண்டைக் குனிந்து எடுத்தான். அது இன்னும் சூட்டோடு இருந்தது. அம்மாவுக்குக் காட்ட வேண்டும். கைகளில் அதை உயரத்தூக்கிக் கொண்டு வரம்புவழியே துள்ளிக்குதித்தபடி அவன் ஓடத்தொடங்கினான்.

# வடக்கைத் தாக்குவதா? கிழக்கைக் காப்பதா?

## இராணுவ அதிகாரிகள் கருத்து முரண்பாடு

வடமாகாணத்திற் புதிய தாக்குதல்களைத் தொடங்குவதா! கிழக்கில் இராணுவம் முன்னர் கட்டுப்பாட்டிற்குட் கொண்டுவந்துள்ள பகுதிகளைப் பாதுகாப்பதா! என்பது குறித்து இராணுவ அதிகாரிகள் மட்டத்திற் பலத்த கருத்து முரண்பாடு நிலவுவதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது. வடக்கைத் தாக்குவதே புலிகளைப் பலவீனப்படுத்த ஒரே வழி என ஒரு தரப்பு வாதிடும் நிலையில், கிழக்கில் முகாம்களை மூடுவது புலிகளின் நோக்கத்தை நிறை வேற்றுவதாக அமையும் என மறு தரப்பினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

வடக்கில் புதிய தாக்குதல்களை நடத்துவதற்கெனக் கிழக்கிற் சில படைமுகாம்களை மூடிப் படையினரை வடக்கே அனுப்புவது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மட்டத்திற் பலத்த கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன.

கைப்பற்றிய கிழக்கு மாகாணத்தைப் பாதுகாக்காமல், வடக்கே படையினரை அனுப்புவது இராணுவ ரீதியில் பின்னடைவுகளையே ஏற்படுத்தக்கூடும் என இராணுவ வட்டாரங்களிற் கணிசமான அளவினர் கருதுவதாகத் தெரிகிறது. கிழக்கிற் சில முகாம்களை மூடுவதென்பது புலிகளுக்கு வெற்றியாகி விடும் எனவும், இராணுவம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டதாகிவிடும் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாகத் தரவைக்குளம் போன்ற பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்வதால் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்திற்குப் பரந்த நிலப்பரப்புக் கிட்டும் அத்துடன் விசேட படைப் பிரிவின் எண்ணிக்கை குறைக்கப்படுவது விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதையும் கட்டுப்படுத்திவிடும் என வாதிடுகின்றனர்.

www.tamilarangam.net



# மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி

## - 1995 பலெர்மோ, இத்தாலி -

இத்தாலி பலெர்மோ நகரில், முதற்தடவையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக்கிளையின் விளையாட்டுத் துறையினரால் 'மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்' மூன்று வாரங்களாக நடாத்தப்பட்டன. பலெர்மோ நகரில் இயங்கும் அன்பு விளையாட்டுக் கழகம், சென்மேரீஸ் விளையாட்டுக் கழகம், புளூடைமன் விளையாட்டுக் கழகம், நண்பர்கள் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம், மணற்காடு சென்அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்,


மணற்காடு சென்அன்ரனிஸ் - புளூடைமன்ஸ்


குருநகர் பாடும்மீன் - அன்புப் பறவைகள்

அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகம் என்பன போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தன.

21-05-95 அன்று (போட்டி தொடக்க நாளில்) அனைத்து விளையாட்டுக் கழக வீரர்களும், தத்தமது கழகக் கொடிகளுடன் அணிவகுத்து நிற்க, தியாகி திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவ-மாணவிகள் தமிழீழத் தேசியக் கொடிக்கு அணிவகுத்து மரியாதை செய்து காட்சியளித்தமை, இத்தாலியில் இதுவரை கண்டிராத ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக அனைவராலும் பாராட்டப்பட்டது. தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகத்தின் பிரதிநிதியால் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர்களினால் கழகக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன. பெருந்திரளாகக் கூடிநின்ற மக்களினால் மாவீரர் நினைவாக, மூன்று நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.



பின்பு உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாயின. உதைபந்தாட்டப் போட்டிக்கு இத்தாலி நாட்டு நடுவருடன், துணைநடுவர்களாக எமது நாட்டைச் சேர்ந்த இருவர் கடமையாற்றினர். பங்கு பற்றிய கழகங்கள் யாவும் சிறப்பாக விளையாடின. அரை இறுதிப் போட்டிக்கு புளூடைமன், அன்புப் பறவை, குருநகர் பாடும்மீன், மணற்காடு சென்அன்ரனிஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

04-06-95 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரை இறுதியாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை, புளூடைமன் விளையாட்டுக் கழகம் வெற்றி கண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இறுதிப் போட்டிக்கு சென் அன்ரனிஸ் விகழகமும், அன்புப் பறவைகள் விகழகமும் தெரிவு செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணியளவில் திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பமாயின. ஒரு முழுமையான மெய்வல்லுனர் நிகழ்ச்சிக்குரிய வசதிகள் போதாமையால் மைதான நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாமல், சவட்டு நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெற்றன. திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள், கப்டன் மில்லர் இல்லமாகவும் அன்னை பூபதி இல்லமாகவும் இரு அணிகளாகத் தெரிவு செய்யப்பட்டு போட்டிகளில் கலந்து கொண்டனர். நீண்ட இடை வேளைக்குப் பின்னர், மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொண்ட சிறார்கள் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் காணப்பட்டனர். மெய்வல்லுனர் போட்டியின் இறுதி நிகழ்ச்சியான கயிறு இழுத்தல் போட்டியிலும் மாணவர்கள் தமது திறமைகளைக் காட்டினர். இந்நிகழ்ச்சி பார்வையாளர்களின் உற்சாகத்தையும் கூட்டிற்று. சவட்டு நிகழ்ச்சிகளாக தவளைப் பாய்ச்சல், முயற்பாய்ச்சல், 50, 100, 200 மீற்றர் ஓட்டங்கள், தடை ஓட்டம், அஞ்சல் ஓட்டம் என்பன இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து இறுதிப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் விகழகமும், அன்புப் பறவைகள் விகழகமும் மோதிக் கொண்டன. பலெர்மோவில் தொடர்ந்து முன்னணியில் விளங்கி வரும் சென் அன்ரனிஸ் விகழகம், அன்புப் பறவைகள் விகழகத்தை 3-0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றி கொண்டு மாவீரர் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. தொடர்ந்து பார்வையாளர்களுக்கான 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றன.

மாவீரர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிக்கான பரிசில்கள், 23-07-95 இல் நடைபெறவுள்ள 'செஞ்சோலைக் கலைமாலை' நிகழ்ச்சியில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மாலை 7.00 மணியளவில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் முன்னிலையில், அனைத்துலக செயலகத்திலிருந்து வருகை தந்திருந்த திரு. சந்திரன் அவர்கள், போட்டிகள் சிறப்பாக நடாத்தப்பட்டதையும், இன்றைய கால கட்டத்தில் புலம் பெயர்ந்த மண்ணில் எமது மக்கள் போராட்டத்திற்குச் செய்ய வேண்டிய உதவிகள்- கடமைகள் எவை என்பது பற்றியும் எடுத்துக் கூறினார். இறுதி நிகழ்வாக எம் தேசத்திற்காகத் தற்கொடையான மாவீரர்களையும், நிமிர்ந்து நிற்கும் எம் தேசத்தையும் நெஞ்சில் சுமந்தபடி மக்கள் மௌனித்து நிற்க, தமிழீழத் தேசியக் கொடி இறக்கப்பட விழா இனிதே முடிவுற்றது.

# சிறீலங்கா அரசின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்க சிட்னியில் அமைதி ஊர்வலம்

சிட்னி ஈழத்தமிழர் கழகம் அமைதி ஊர்வலத்தை நடாத்தியது. குளிரையும் பொருட்படுத்தாது நூற்றுக்கணக்கான ஈழத்தமிழ் மக்கள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். சிறுவர்களும், பெண்களும், இளைஞர்களும், பெரியோர்களும் பதாதைகளையும், சலோக அட்டைகளையும் தாங்கியவாறு சென்றனர். அனைத்துலக நாடுகளின் மத்தியஸ்த்தம் போரை முடிவுக்குக் கொண்டு வரலாம், ஈழத்தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அனைத்துலக சமூகம் அங்கீகரித்தல் வேண்டும். சிறிலங்காவுக்கான ஆயுத விற்பனையை அனைத்துலக நாடுகள்




நிறுத்த வேண்டும். சிறிலங்கா அரசே அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்லாதே! போன்ற சலோகங்கள் பதாதைகளிலும், அட்டைகளிலும் காணப்பட்டன.

காலை 9 மணியளவில் ஈழத்தமிழ்மக்கள் சிட்னி 'மார்ட்டின் பிளேசில்' ஒன்று கூடத் தொடங்கினர். 10 மணிக்கு அனைவரும் அணிவகுத்து நின்றனர். 10.15 க்கு ஊர்வலம் தொடங்கி 11.30க்கு 'கைட் பார்க்'ஐ வந்தடைந்தது. அங்கு கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. திரு. சிறீசண்முகநாதன் அவர்கள் முதலில் உரையாற்றினார். சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரத்தையும், கபட நாடகத்தையும் அனைத்துலக சமூகத்திற்கு அம்பலப்படுத்துவது ஒவ்வொரு ஈழத்தமிழ் மக்களினதும் தலையாய கடமை என்பதை அவர் வலியுறுத்தினார். அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமான தாக்குதல்களினால் நிலைகலங்கிய இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதையும், அவர்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதையும் கண்டித்தார். அவரையடுத்து திரு. அ. பரராசசிங்கம் அவர்கள் உரையாற்றினார். தமிழர்கள் ஆயுதம் ஏந்தாத காலத்திலேயே அவர்கள் மீது அட்டூழியங்களைக் கட்டவிழ்த்துவிட்டு இனக்கலவரங்களை ஏற்படுத்தியவர்கள் தற்போது சமாதானத்தின் காவலர்கள் தாமே என்று பாசாங்கி செய்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அனைத்துலக சமூகத்தின் மத்தியஸ்தம் போரை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்றும் கூறினார். ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அனைத்துல நாடுகள் அங்கீகரிக்கின்ற காலம் விரைவில் வரும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனுருத்த... மேற்பார்த்து அலரிமாளிகை... அக்காவுக்கு



அனுருத்த ரத்வத்த மேற்பார்த்து
அலரிமாளிகை அக்காவுக்கு.
வடக்கிலிருந்து ஒரு வான்கடிதம்
இங்கு எல்லோரும் நல்ல சுகம்
உங்கு சுகசேமம் எப்படி!
நேற்றோர் செய்தியறிந்து
நெஞ்சு நெருக்குற்றது.
அலரிமாளிகையின் அடுப்படி வரைக்கும்
உத்தரவின்றி ஒருவன் உள்ளே வந்தானாம்.
எப்படி வரமுடியும்!
சித்தசுவாதீனமற்றவனாலும்
கவனம்.
மெத்தையில் நித்திரையின்றி கிடக்கின்றாயாம்.
என்ன கவலை உனக்கு!
சின்ன விடயங்களுக்கெல்லாம் சிந்தியாதே.
உடம்பைக் கவனிக்கவும்.
நேரத்துக்குச் சாப்பிடவும்.
வேறு என்ன!
இங்கு குறிப்பிடத்தக்கது எதுவுமில்லை.
'ரணசறு', 'சூரயா'
இரண்டு கப்பல்களுக்கும்
கடற்புலிகள் கற்பூரம் கொளுத்திவிட்டனர்.
அரோகரா.
இதற்கு நீயென்ன செய்ய முடியும்!

திருமலைத் துறைமுகத்தில் நீயா 'சென்றி' பார்க்க முடியும்.
தலதாமாளிகைக்குச் சென்று
மகாநாயக்கரிடம் மந்திரித்துக் கொள்ளவும்.
அப்படியே வந்து
கொச்சிக்கடை சிவன் கோவிலில் கும்பிடவும்.
ஐயரிடம் கொடுத்து அர்ச்சனை செய்யவும்.
வேறு என்னதான் செய்ய முடியும்!
தொடர்ந்தும் கரும்புலிகள் இடித்துக்



கொண்டிருப்பார்கள்.
அதற்காக அழுதுகொண்டா இருக்கமுடியும்!
இரண்டு கப்பல் போனதற்காக

இராஜினாமாவா செய்யமுடியும்!
பேசாமல் 'பாரிசு'க்குப் போ.
நிதி வழங்கும் நாடுகளின் முன்னே நில்.
பேச்சுவார்த்தை, புனரமைப்பு என்று புலம்பு.
தருவதை வாங்கி மடியிற் கட்டிக்கொண்டு
படிக்கும் காலத்தே பழகிய நண்பர்களை சந்தித்து
திரும்பி வரும்போது
பக்கத்தே வரும் பத்மாவிடம்
ஏதேனும் வாங்கிக் கொடு.
சங்கப் பகுதியினரைச் சுற்றிவிட்டு
பரிசோதனைக் குள்ளாகாமல்
வெளியே வரும் வித்தையை
பத்மாவே நன்கு படித்தவள்.
மட்டக்களப்பின் கட்டுமுறிவு முகாமும்
கால் முறிந்து போனதென்று
எட்டியுளது ஒரு செய்தி.
கிழக்குனது கைப்பிடிக்குள் என்றாயே!
திருமலைத் துறைமுகமும்
வாகரை, கதிரவெளியும் வடக்கிலா இருக்கிறது!
'ஆமிக்காரரை அதிகம் நம்பத் தொடங்கிவிட்டாய்.
ஆபத்து அங்கேதான் ஆரம்பமாகிறது.
இதுவரை எவருக்கும் எட்டாத பலமும்
இனிமேலும் எவருக்கும் கிட்டாத வரமும்
சித்தித்தது உனக்கு.

தொடர்ச்சி....... 14 ஆம் பக்கம்

**புதுவை இரத்தினதுரை**

U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9483

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்